Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 11
குவிப்பு - 01
பக்கங்கள் - 20
விலை ரூபா 25.00
ஜனவரி - 2008
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/75/News/2008

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com

# இஸ்லாமியத் தலைவர்களுடன் திருத்தந்தை



நமது இலங்கை நாட்டைப் போலவே இன்று உலக அளவில் குறிப்பாக மேற்கத்தைய நாடுகளிலும், மத்தியகிழக்கு நாடுகளிலும் போரும் வன்முறைகளும் நிறைந்த ஆண்டாகவே இவ்வாண்டு விடிந்துள்ளது. இந்நிலையில் திருச்சபையானது அனைத்துலகிலும் அமைதியை ஏற்படுத்த தொடர்ந்து பாடுபடுகின்றது.

இஸ்லாமிய - மேற்குலக முறுகல் அதிகரித்துள்ள நிலையில் கடந்த 2006 நவம்பர் மாதத்தில் துருக்கி நாட்டிற்கு பயணம் செய்த திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் அந்நாட்டு அசர தலைவர்களையும், இஸ்லாமிய மதத் தலைவர்களையும் சந்திப்பதைப் படத்தில் காணலாம்.

## அருட்பணி. கிருபானந்தன் இறையடி சேர்ந்தார்



யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் எஸ். எவ். கிருபானந்தன் அடிகளார் கடந்த கடந்த ஜனவரி மாதம் 4ம் திகதி அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார். கொழும்பு பொறளை கிறகறிஸ் வீதியில் உள்ள குருக்களின் இல்லத்திலேயே இவர் காலமானார்.

அடிகளாரின் பூதவுடல் ஜனவரி 7ம் திகதி கொழும்பு பேராயர் இல்லச் சிற்றாலயத்திற்கு எடுத்துவரப்பட்டு அங்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அடுத்தநாள் பூதவுடல் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 9ம் திகதி யாழ்ப்பாணத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## மன்னாரில் கலைஞர்கள் கௌரவிப்பு




கடந்த டிசம்பர் 23ம் திகதி மன்னார் திருமறைக் கலாமன்றத்தினால் மன்னார் மாவட்டத்தில் இதுவரை கலாபூசணம் விருதைப் பெற்ற 5 கலைஞர்களை கௌரவிக்கும் விழா நடைபெற்றது. மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஏ. நிக்கொலஸ்பிள்ளை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். மறைக்கல்வி நிலைய இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்பணியாளர் தமிழ் நேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அரசாங்க அதிபரும், நேசன் அடிகளாரும் கலாபூசணம் விருதுபெற்ற கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கி கௌரவித்தனர்.

மன்னார் திருமறைக்கலாமன்ற இணைப்பாளர் திரு. அ. ஜோன் பொஸ்கோ அவர்களின் தலைமையிலும், ஒழுங்கமைப்பிலும் இவ்விழா இடம்பெற்றது. கலாபூசணம் விருதுபெற்று கௌரவிக்கப்பட்ட கலைஞர்களின் விபரம் வருமாறு: கலைஞர் குழந்தை - செபமாலை (முருங்கன்), திரு. பறுனாந்து பீரிஸ் (தாழ்வுபாடு), வைத்தியர் சீமான் (வஞ்சியன்குளம்), ஆசிரியர் அந்தோனிமுத்து (விடத்தல்தீவு - மன்னார்), புலவர் இம்மானுவேல் (புதுக்கமம்).

## யாழ் மறைமாவட்டத்திற்கு புதிய குருமுதல்வர்



யாழ். மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக அருட்பணியாளர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரை யாழ் ஆயர் மேதகு சவுந்தரநாயகம் ஆண்டகை நியமித்துள்ளார்.

அன்பான அணுகுமுறையும், கடமையில் கண்ணியமும், சிறந்த நிர்வாகத் திறமையும் கொண்டவராக கல்விப்பணியும், பங்குப் பணியும் ஆற்றிவந்த ஜஸ்ரின் அடிகளார் தான் புதிதாக ஏற்றுக்கொண்டிருக்கும் குருமுதல்வர் பணியையும் சிறப்பாக ஆற்றுவார் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம். யாழ் கத்தோலிக்க திருச்சபையின் சிறந்த கல்விமான்களில் ஒருவராகிய ஜஸ்ரின் அடிகளாரின் பணி சிறக்க மன்னா அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் செபங்களையும் அர்ப்பணிக்கிறோம்.

(தொடச்சி 7ம் பக்கம்)

## இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் கத்தோலிக்கரானார்

கடந்த சில வருடங்களாக பல ஊடகங்களிலும் பேசப்பட்டு வந்த விடயம் நிஜமாகியது. இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் விரைவில் தான் ஒரு கத்தோலிக்கராக மாறவுள்ளதாக விடுத்த அறிவிப்பே அது. இவர் இதுவரை தாம் சார்ந்திருந்த அங்கிலிக்கன் சபையிலிருந்து விலகி வெஸ் மினிஸ்டர் மறைமாவட்ட பேராயர் கருதினால் ஒப்புக்கொடுக்கும் பிரத்தியேகத் திருப்பலியில் கத்தோலிக்கராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

ரொனி பிளேயரின் மனைவி ஒரு கத்தோலிக்கர். அத்துடன் இவர்கள் தமது பிள்ளைகளையும் கத்தோலிக்க மறையில் திருமுழுக்குப் பெற வைத்துள்ளனர். 2003ம் ஆண்டில் ரொனி பிளேயர் திருத்தந்தையைத் தரிசித்தபோது அவரிடமிருந்து நற்கருணையைப் பெற்றுக்கொண்டார். அதாவது அவர் பிரித்தானியப் பிரதமர் பதவிக்கு மதிப்பளிக்கும் வகையில் அந்நாட்களில் கத்தோலிக்கராக மாறுவதைத் தவிர்த்திருந்தார். ஏனென்றால் பிரித்தானிய அடிப்படைச் சட்டத்தின்படி அங்கிலிக்கன் மறையைச் சேராத ஒருவர் பிரதமராகப் பதவியேற்கவோ அல்லது ஆட்சிசெலுத்தவோ முடியாது என்பதனாலாகும்.

# மன்னா

மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## இறைவார்த்தை ஆண்டு

### விவிலியம் - விடுதலையின் கீதம்

*"வெள்ளையர்கள் எங்கள் மண்ணில் கால் வைத்தபோது எங்கள் கையில் நிலமிருந்தது. அவர்கள் கையில் பைபிள் இருந்தது. கண்களை மூடி எங்களை இறைவேண்டல் செபம் செய்யச் சொன்னார்கள். நாங்கள் கண்களை மூடி மன்றாடிவிட்டு, கண்களை மீண்டும் திறந்தபோது எங்களது கையில் பைபிள் இருந்தது. அவர்களது கைகளில் நிலமிருந்தது." டன்சானியா நாட்டு முன்னாள் அதிபர் ஜூலியஸ் நைரரே ஆபிரிக்க மக்கள் அடிமையாக்கப்பட்டதைப் பற்றி சொன்ன கதை இது.*

*மேலைத்தேசத்தவர் வழியாக நாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ விசுவாசத்தோடு நமக்குத் தரப்பட்ட மிகப்பெரும் கொடை திருவிவிலியம் (பைபிள்). மனித குலத்தின் விடுதலைக்காக இசைக்கப்பட்ட மாபெரும் வரலாற்றுக் கீதம் இது. இந்த விவிலியத்தை வாசிப்பதும், வாழ்வாக்குவதும், பகிர்ந்துகொள்வதும் இன்றைய நமது அழைப்பாக இருக்கிறது. இந்த முயற்சியை வலுப்படுத்தும் வகையில் அகில உலகத் திருச்சபையினால் இந்த ஆண்டு இறைவார்த்தை ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

### அருகிலே வந்துவிட்ட திருவிவிலியம்

*ஆய்வு என்ற "உயர் மட்ட அரங்கத்தோடு" திருவிவிலியம் பின்னிப்பிணைந்திருந்த காலம் மலையேறிவிட்டது. இன்று திருவிவிலியம் இறைமக்களின் கைகளில், அவர்தம் மொழிகளில், அவர்தம் தேவைக்கேற்ற வடிவங்களில், அச்சிலும், கவர்ச்சியான கலை மொழிகளிலும் வழங்கப்படுகிறது. "வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது. உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது" (இச. 30:14) என்ற இறைவார்த்தை இன்று நிறைவேறிய வார்த்தையாக இருப்பதைப் பார்க்கின்றோம்.*

*"திருவிவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்" என புனித எரோணிமுஸ் கூறுகின்றார். எனவே வைத்திருப்பது மட்டுமல்ல அதை வாசிப்பதும் வாழ்வாக்குவதும் அதன் மூலம் கிறிஸ்துவை அறிந்துகொள்வதும் முக்கியமானதாகும்.*

### வழிகாட்டும் வார்த்தைகள்

*இறைவனின் ஏவுதலுடன் எழுதப்பட்ட இந்நூல் "கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும், நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது." (2 திமோ. 3:16) என்ற பவுலின் வார்த்தைகள் இறைவார்த்தையின் (திருவிவிலியத்தின்) பயன்பாட்டை எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது. "என் காலடிக்கு உம் வாக்கே, விளக்கு என் பாதைக்கு ஒளியும் அதுவே" (திபா. 119:105) என்கிறார் திருப்பாடலின் ஆசிரியர்.*

### வார்த்தை அறிவிக்கப்பட வேண்டும்

*இப்படிப்பட்ட பயனுள்ள இறைவார்த்தை அறிவிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை புனித பவுல் அடியார் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். "தாங்கள் கேள்வியுறாத ஒருவர்மீது எவ்வாறு நம்பிக்கைகொள்வார்கள். அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? .......... ஆகவே அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால்தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு" (உரோ. 10:14,17)*


*திருநூலை .... நூலாக, பகுதியாக, வசனமாகக் கொடுப்பது **திருவிவிலியப் பணி (Bible Apostolate)** என்றால் திருநூலை இன்றைய மீட்புச் செய்தியாக (Message), நல்ல மதிப்பீடுகளை (Values) வழங்கும் வகையில் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு கொடுப்பது **இறைவார்த்தை அறிவிப்புப் பணி** அல்லது நற்செய்தி **அறிவிப்புப் பணி (Biblical Apostolate)** எனப்படும்.*

*திருநூலை வாசிக்கிறோமா இல்லையா? நாம் சுவைப்பது ஒரு சிறுவசனமா? அல்லது பெரியதோர் அதிகாரமா? என்பன கேட்க வேண்டிய கேள்விகள்தான். அதைவிட முக்கியமான கேள்வி எதற்காக வாசிக்கிறோம்? எந்த மதிப்பீடுகளுக்கு உரம் கொடுக்க வாசிக்கிறோம்? என்பதே.*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,***

***அன்புடன் - அருட்பணியாளர் நேசன்,***

***மன்னா பதிப்பாசிரியர்.***



# வாசகர் எண்ணங்கள்



## மனதில் அதிரும் பக்கங்கள்



மன்னாவே, பேசும் நெஞ்சமே!
உன் பக்கத்தில் இன்று நான் தஞ்சமே!
கவிதைப் பூக்களால் மாலை தொடுக்கும்
உன் கவிதைப் பக்கத்திற்கு ஒரு தலைப்பு.
அதுதான் அப்பக்கத்திற்கு செழிப்பு!
சில வாரங்களாக எங்கள் தவிப்பு!
தீருமா இந்த மன வலிப்பு!
மாதம்தோறும் உதிரும் உன் ஆக்கங்கள் அனைத்தும்
எங்கள் மனதில் அதிரும் பக்கங்கள்!

*செ. பஸ்ரியான் சுரேன் அருந்தவன்*
*குமிழமுனை, நாச்சிக்குடா, கிளிநொச்சி,*

## மங்கையின் மனம் கவர்ந்த மன்னா



மன்னா! நீ ஒரு மழலை! மண்டியிடுகின்றேன் நான்!
மாதம் ஒருமுறை மலர்ந்து
மங்கையின் மனம் கவர்ந்திட்ட உன்னை
மனதார வாழ்த்துகின்றேன்.
மலர்ந்த புதிய ஆண்டில்
சாதனைகள் பல புரிந்திட
மண்ணுலகில் உன் பெருமை மலர்ந்திட
மழலை நீ தொடர்ந்து மகிழ்வுடன் வெளிவர
மனதார வாழ்த்துகின்றேன்.

*ம. சிந்து மொறாய்ஸ், இரத்தினபுரி, வங்காலை.*

## மனம் மகிழ வருகின்றாய்



மன்னார் மறைமாவட்டத்தில்
ஒரு மாதத்தில் ஒரு தடவை
மனம் மகிழவரும் மன்னாவே!
உலகில் நடப்பவைகளை
உடனுக்குடன் தாங்கி வந்து
மனம் மகிழ வைப்பாயே!
சிலர்தான் உன்னை வாசித்து
மனம் மகிழ்ந்து வருகின்றார்கள்.
எனவே அந்த ஒரு சிலருக்காகவாவது
மன்னாவை உருவாக்கி வரும் எழுத்தாளர்களே
உங்களை வாழ்துகின்றேன்.
பரிசுத்த ஆவி வழிநடத்த வேண்டுகின்றேன்.

*செ. ஜெசி, மடுக்கோவில், மடு*

## சூடான சுவையான செய்திகள்

மணம் வீசும் மன்னாவே! மாதத்தில் ஒருமுறை
மல்லிகைப் பூவாய் வசந்தமாய் வரும் மன்னா மலரே!
எத்தனை சூடான, சுவையான, தரமான செய்திகள்!
என் வீட்டில் எப்போது வருவாய் என்று
எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன்.
இந்தக்கால சூழ்நிலையில் உன் சேவை
எம் மக்களுக்குத் தேவை.
மன வேதனைகளுடன் சோகம் நிறைந்து இருக்கும்
மக்கள் மத்தியில் நீ வசந்தமாய் தொடர்ந்து வரவேண்டும்.
நீ சுமந்து வரும் ஆக்கங்களை வாசித்து
மன அமைதி அடையும் உம் மக்களுக்கு
உன் சேவை நிச்சயமாகத் தேவை.
நீ சுடர்விட்டு ஒளி வீசி, வாழையடி வாழையாக
வலம் வரவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

*ஞா. கிறிஷாந்தா குயின்சி, சாளம்பன்.*

## ஆன்மாவிற்குப் பெலனளிக்கின்றாய்



அன்று பாலையில் உடலுக்கு உணவாக வந்த நீ இன்று பத்திரிகை வடிவில் எம் ஆன் - மாக்களுக்குப் பெலனளிக்கின்றாய். அரிய உன் சேவை மேலோங்க இறை ஆசீரை வேண்டுவதுடன் எனது வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றேன்.

*திருமதி. பாத்திமா பெனாண்டோ,*
*சென். லூசியா வீதி, கொட்டாஞ்சேனை,*
*கொழும்பு - 13*

## மகிழ்ச்சி மனதில் பொங்குதையா!

மன்னா எம் கையில் கிடைத்ததும்
மகிழ்ச்சி மனதில் பொங்குதையா.
கவிதைகள், நகைச்சுவைகள் மேலும் பல விடயங்கள்
படித்ததும் இன்பம்தான் பொங்குதையா.
மன்னாவே தொடர்ந்து எம் கைகளில்
வரவேண்டி வாழ்த்துகின்றேன்.

*செ. பஸ்ரியான் (ஷாம்),*
*பிள்ளையார் பிட்டி, சாளம்பன்,*

## திருவிவிலியமும் திருச்சபைப் புனிதர்களும்

### புனித அகுஸ்தீனார் வாழ்வில்

புனித அகுஸ்தினார், 'எடுத்து வாசி' என்ற குரலைக் கேட்டு திருநூலை வாசித்தார்: மனம் மாறினார்: திருநூல் வாசித்துப் பயன்பெற்றார்.

### புனித சவேரியார் வாழ்வில்

"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அதனால் பயனென்ன?" (மத். 16:. 26) என்ற இஞ்ஞாசியாரின் விவிலியச் சொற்கள் சவேரியாரை மனம் திருப்பின.

### புனித குழந்தை தெரேசாவின் வாழ்வில்



"என் தியானங்களில் எனக்கு முதன்மையாகப் பயன்பட்டு உதவுவது புனித விவிலிய மேயாகும். அதில் என் எளிய உள்ளத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் காண்கிறேன். புத்தொளி வீசுவதையும், மறைந்த உண்மைகள் விளக்கமுறுவதையும் அடிக்கடி கண்டுபிடிக்கிறேன்." "விவிலியத்திலன்றி வேறு எந்த நூலிலும் நான் எனக்காக ஒன்றையும் கண்டதில்லை. விவிலியம் ஒன்றே எனக்குப் போதுமானது." ........... "நான் திருநூலை மூல மொழியில் வாசிக்க விரும்புகிறேன்."

# வவுனியா மறைக்கோட்டம்

## திருப்பாலத்துவசபை போட்டி முடிவுகள்

### கட்டுரைப் போட்டி

குழு - 01

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | கலிஸ்ரஸ் டர்சிகா | செட்டிகுளம் பங்கு |
| 2ம் இடம் | த. பிரவீனா | கோமரசன்குளம் பங்கு |
| 3ம் இடம் | ஞா. மேரி கிரோஜினி | கோமரசன்குளம் பங்கு |

குழு - 02

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | லே. ருக்ஷலா | கோமரசன்குளம் பங்கு |
| 2ம் இடம் | அ. லக்ஷிகா | செட்டிகுளம் பங்கு |
| 3ம் இடம் | ச. சிந்துஜா | கோமரசன்குளம் பங்கு |
| | ம. மரிய தர்ஷினி | வவுனியா பங்கு |

குழு - 03

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அ. நிரோஜினி | இலுப்பைக்குளம் பங்கு |
| 2ம் இடம் | செ. ஸ்ரீபனா | செட்டிகுளம் பங்கு |
| | க. மெடோனா | வவுனியா பங்கு |
| 3ம் இடம் | வி. வினித்தா | கோமரசன்குளம் பங்கு |



### சித்திரப் போட்டி

குழு - 01

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ஜே. பிரஷா | பம்பைமடு பங்கு |
| 2ம் இடம் | பு. யூட் | கோமரசன்குளம் பங்கு |
| 3ம் இடம் | கி. கிறிஸ்ரின் டிலுஷா | பம்பைமடு பங்கு |

குழு - 02

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செ. டிலக்ஷினி | செட்டிகுளம் பங்கு |
| 2ம் இடம் | சி. அனோஜா றொக்ஷினி | கோமரசன்குளம் பங்கு |
| 3ம் இடம் | தே. டியூக்றைசன் | கோமரசன்குளம் பங்கு |

குழு - 03

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அ. கஜந்தினி | பம்பைமடு பங்கு |
| 2ம் இடம் | பு. டிலக்ஷினி | செட்டிகுளம் பங்கு |
| 3ம் இடம் | டோ. சுபாஜினி | பம்பைமடு பங்கு |

### சுவரொட்டிப் போட்டி

குழு - 02

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | கோ. தனுஷா | செட்டிகுளம் பங்கு |
| 2ம் இடம் | ச. றொக்ஷினி | பம்பைமடு பங்கு |
| 3ம் இடம் | சி. அனோஜா றொக்ஷினி | கோமரசன்குளம்பங்கு |

குழு - 03

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பி. அனுஷியா | கோமரசன்குளம் பங்கு |
| 2ம் இடம் | சோ. டயந்தினி | இலுப்பைக்குளம் பங்கு |
| 3ம் இடம் | ஜெ. சுஜிபிரியா | இலுப்பைக்குளம் பங்கு |

# திருத்தந்தை 16ம் பெனடிக்ரின் 2வது திருமடல் 'கிறிஸ்தவ நம்பிக்கை' 'ஸ்பே சால்வி'

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் கடந்த நவம்பர் 30ம் திகதி அன்று முற்பகல் 11.00 மணிக்கு கையெழுத்திட்ட கிறிஸ்தவ நம்பிக்கை பற்றிய 'ஸ்பே சால்வி' என்ற திருமடலில், கிறிஸ்தவர்கள் நம்பிக்கையுடன் வாழ வேண்டியதன் தேவை மற்றும் அவர்கள் நம்பிக்கையின் உண்மையான அர்த்தத்தை மீண்டும் கண்டுணர வேண்டியதன் அவசியத்தை விபரித்துள்ளார்.

75 பக்கங்களைக் கொண்ட இத்திருமடலில் 'நிகழ்கால வாழ்க்கை கடினமானதாக இருந்தாலும்கூட அதனை வாழ முடியும். அவ்வாழ்வு ஓர் இலக்கை நோக்கி இருந்தால், அந்த இலக்கில் நாம் உறுதியாய் இருந்தால், இந்த இலக்கு நம் வாழ்க்கைப் பயணத்தின் முயற்சிகளை நியாயப்படுத்தப் போதுமானதாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படும்" என்று அவர் விபரித்துள்ளார்.

இத்திருமடல் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களின் ஆழமான அறிவுக் களஞ்சியத்தின் வளங்களை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. இம்மடலில் அவர் தனது ஆழமான இறையியல், சமூகவியல் கருத்துக்களை நேர்த்தியான நடையில் புனிதர்கள் பற்றிய மேற்கோள்களைக் கையாண்டுள்ளார்.

கிறிஸ்தவம் அழிவைத் தேடிய *ஸ்பார்டாக்குஸ* போன்ற சமூகப் புரட்சி செய்தியைக் கொண்டுவருவதில்லை (ஸ்பார்டாக்குஸ் கி.மு.120 முதல் 70 வரை வாழ்ந்த பண்டைய ரோமை காட்சியரங்குகளில் வாட்போர் வீரன். இவன் உரோமைக் குடியரசுக்கு எதிரான புரட்சிப் படையின் தலைவனாகச் செயல்பட்டவன்). ஸ்பார்டாக்குசின் போராட்டம் இரத்தக் களரியிலேயே முடிவுற்றது. இயேசு ஸ்பார்டாக்குசின் அல்லர். இயேசு அரசியல் விடுதலைக்கான போராட்டத்தில் ஈடுபட்டவர் அல்லர். மாறாக, இயேசு முழுவதும் வித்தியாசமான ஒன்றைக் கொண்டுவந்தார். அவர் ஆண்டவர்களின் ஆண்டவரோடு, வாழும் உயிருள்ள இறைவனோடு உறவைக் கொண்டு வந்தார். இவ்வுலகையும் மனித குலத்தையும் இவ்வண்டத்தின் இயற்கையான ஆவிகள் ஆழவில்லை. ஆனால் இவ்வண்டத்தை இறைவன் ஆழ்கின்றார். இது மனிதனின் உலகத்தை மாற்றுகிறது. நாம் இவ்வண்டத்தின் அதன் சட்டங்களின் அடிமைகள் அல்ல. நாம் சுதந்திரமானவர்கள்.

கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஏனெனில் உண்மையிலே மனிதன் யார்? உண்மையாகவே மனிதனாக இருக்க அவன் என்ன செய்யவேண்டும் என்று இயேசு நமக்குச் சொல்கிறார் என்கிறார் திருத்தந்தை.

புதிய ஏற்பாட்டில் எபிரேயர் 11:1ஐச் சுட்டிக்காட்டும் திருத்தந்தை நம்பிக்கையின் பலன் பற்றிச் சொல்கின்றார். நம்பிக்கை புதிய அடித்தளத்தைக் கொடுக்கின்றது. இந்நவீன சமுதாயம் நித்திய வாழ்வை விரும்புகிறதா என்பதில் பல முக்கியமான கேள்விகளையும் கேட்டுள்ளார். நாம் நமது வாழ்வில் கிறிஸ்தவ விசுவாசத்தை எவ்வாறு அனுபவிக்கின்றோம்? இது வாழ்வை மாற்றுகின்றதா? வாழ்வுக்கு உறுதியான நம்பிக்கையை கொடுக்கின்றதா? இதை நாம் உண்மையிலேயே நித்தியத்திற்கும் வாழ விரும்புகின்றோமா? என்பன போன்ற கேள்விகளையும் முன்வைத்துள்ளார். நித்திய வாழ்வு கவர்ச்சியானதாக இல்லாததால் பலர் இன்று விசுவாசத்தைப் புறக்கணிக்கின்றனர்.



அவர்கள் ஆசைப்படுவது நித்திய வாழ்வே அல்ல. நமது எண்ணத்தில் முரண்பாடு இருக்கின்றது. ஒருபுறம் நாம் இறக்க விரும்பவில்லை. நம்மை அன்பு செய்பவரும் நாம் இறப்பதை விரும்பவில்லை. ஆயினும் நாம் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. இப்பூமியும் அவ்வாறு படைக்கப்படவில்லை. எனவே நாம் உண்மையிலேயே விரும்புவது என்ன? இதற்கு பதில் சொல்ல புனித அகுஸ்தீனின் கூற்றைத் திருத்தந்தை பயன்படுத்துகிறார்.

'ஸ்பே சால்வி' 2005இல் பாப்பிறைப் பணியை ஏற்ற பின்னர் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் வெளியிட்டுள்ள இரண்டாவது திருமடல் ஆகும். 'அன்பே கடவுள்' என்பது இவரது முதல் திருமடலாகும். அவரது மூன்றாவது திருமடல் 'சமூக நீதி' பற்றி இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

## மன்னார் மறைமாவட்டக் குருக்கள் துறவியருக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்

மன்னார் மறைமாவட்டக் குருக்கள் துறவியருக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடலும் சமாதானத்திற்கான செபவழிபாடும் கடந்த டிசம்பர் மாதம் 22ம் திகதி மன்னார்ப் பேராலயக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் மன்னார் ஆயர் அவர்களும் மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த குருக்கள் மற்றும் இருபால் துறவியரும் பெருமளவில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் கிறிஸ்மஸ் செய்தியை வவுனியா அமதி இல்ல முதல்வர் அருட்பணியாளர் போல் நட்சத்திரம் அவர்கள் வழங்கினார். இந்த ஒன்றுகூடலின் நிறைவில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் அனைவருக்கும் மதிய விருந்து வழங்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டத் திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணியாளர் பி. கிறிஸ்து நாயகம் அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.

## மன்னார் ஆயரின் வன்னி விஜயம்

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 11ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரையிலான 4 நாள் பயணமாக வன்னிக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

அங்கு மடு மறைக்கோட்டத்தைச் சேர்ந்த பங்குத் தந்தையர்களையும் பங்கு மக்களையும் ஒவ்வொரு இடமாகச் சென்று சந்தித்தார். இடம்பெயர்ந்து வாழும் மக்களின கஸ்ரங்களைக் கேட்டறிந்த ஆயர் அவர்கள் தேவன்பிட்டி, இலுப்பைக்கடவை, மடு, பெரியமடு ஆகிய இடங்களில் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தையும் வழங்கினார்.

## துறவற வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் அருட்சகோதரி எஸ்ரல் (அ.கா.)



மன்னார் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தில் பிறந்த, கார்மேல் சபையைச் சார்ந்த அருட்சகோதரி மேரி எஸ்ரல் (அ.கா) அவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 29ம் திகதி தனது துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றார்.

29.01.2008 அன்று மாலை 6.00 மணிக்கு தற்போது இவர் பணியாற்றிவரும் புத்தளம் மாவட்டம் மாம்புரி - தேத்தாப்பளையில் உள்ள கார்மேல் நிலையத்தில் சிலாப ஆயர் மேதகு வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகையின் தலைமையில் யூபிலி விழா நன்றித் திருப்பலி இடம்பெறும்.

அதைத் தொடர்ந்து 31ம் திகதி காலை 10.00 மணிக்கு இவருடைய சொந்த இடமான மன்னாரில் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அருட்பணியாளர் நேசன் தலைமையில் யூபிலி விழா நன்றித் திருப்பலி இடம்பெறும்.

அருட்சகோதரி எஸ்ரல் அவர்கள் 03.04.1959ம் ஆண்டு திரு. திருமதி கபிரியேல்பிள்ளை செபமாலை (கமலம்) தம்பதிகளின் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியை மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் கற்றார். அதைத்தொடர்ந்து 1979ம் ஆண்டு யாழ்ப்பாணம் அச்சுவேலி இலங்கை மாதா கன்னியர் மடத்தில் இணைந்துகொண்டு தன்னுடைய துறவற உருவாக்கத்தை ஆரம்பித்தார். பின்னர் 1981ம் ஆண்டு கம்பகா நவசன்னியாசிய இல்லத்தில் இரண்டு வருட உருவாக்கத்தைப் பெற்று 1983ம் ஆண்டு கார்மேல் சபை அருட்சகோதரியாக தனது முதல் வாக்குத்தத்தத்தை வழங்கினார்.

பின்னர் 1988ம் ஆண்டு இந்தியாவில் கார்மேல் சபைக் கன்னியர்களின் தலைமை இல்லத்தில் தனது நித்திய வாக்குத்தத்தத்தை வழங்கினார். பல்வேறு இடங்களில் பங்குப் பணியை தனது முதன்மைப் பணியாகச் செய்து வந்த அருட்சகோதரி அவர்கள் தன்னுடைய எளிமை, பொறுமை, அன்பான அணுகுமுறை போன்ற பண்புகளால் மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்தவர் ஆவார்.

இவர் கல்முனை, அடம்பன், கொழும்பு, அக்கரைப்பற்று, கரவெட்டி, சொறிக்கல்முனை, மாம்புரி - தேத்தாப்பளை ஆகிய இடங்களில் தனது பணியை மேற்கொண்டார். தற்போது தேத்தாப்பளை கார்மேல் நிலையத்தில் குழுத்தலைவியாக சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் சென்ற அருட்தந்தை ஜெபநேசன் அடிகளாருடைய வழிநடத்தலில் தான் துறவற வாழ்வை தேர்ந்துகொண்டதாகவும் தனது உருவாக்கற் காலத்திலும் பணிக்காலத்திலும் அருட்சகோதரி திரேசில்டா (அ.கா) அவர்கள் தனக்கு வழிகாட்டியாக இருந்ததாகவும் இவர் கூறுகின்றார். அருட்சகோதரியின் இம்மகிழ்வான வேளையில் 'மன்னா' அன்பு நெஞ்சங்கள் சார்பாக எமது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



கடந்த 28.11.2007 அன்று மன்னார் லசாலியன் ஆங்கில பயிற்சியகத்தில் (La Sallian English Academy) நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட நீதிபதி திரு. பிரபாகரன் அவர்கள் மங்கள விளக்கேற்றுவதையும், பரிசில்கள் வழங்குவதையும், அருகில் பயிற்சியக முதல்வர் அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்கள் நிற்பதையும் காணலாம்.

## கலாபூசணம் விருது பெறும் மன்னார்க் கலைஞர்கள்



திரு. அ. அந்தோனிமுத்து



திரு. க. இன்மானுவேல்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அடைக்கலம் அந்தோனிமுத்து அவர்களும் உயிலங்குளம் - புதுக்கமத்தைச் சேர்ந்த புலவர் திரு. கபிரியேல் இம்மானுவேல் அவர்களும் மன்னார் மாவட்டத்தில் இருந்து 2007ம் ஆண்டிற்கான கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் 15ம் திகதி கொழும்பு 7, ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோண் டி சில்வா நினைவுக் கலையரங்கில் இந்த விருது வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

### திரு. அ. அந்தோனிமுத்து

விடத்தல்தீவைத் தனது சொந்த இடமாகக் கொண்ட இவர், விடத்தல்தீவு றோ.க.த.க. பாடசாலையில் தமது கல்வியைப் பெற்று 18வது வயதில் தொண்டர் அடிப்படையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். 1962ல் அரசாங்க ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் 1966ல் யாழ். கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சிபெற்று 1968ல் பயிற்சிபெற்ற ஆசிரியராக வெளியேறினார்.

நுவரெலியா பரிசுத்த திருத்துவக் கல்லூரி மற்றும் மன்னார் மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களான தேவன்பிட்டி, விடத்தல்தீவு, பெரியமடு, தட்சனாமருதமடு ஆகிய இடங்களில் உதவி ஆசிரியராகவும், 1975ம் ஆண்டு அதிபர் பரீட்சையில் சித்திபெற்று அதிபராக மன்/ கற்கிடந்தகுளம், மீண்டும் விடத்தல்தீவு, தாழ்வுபாடு, ஆண்டான்குளம் ஆகிய இடங்களிலும், கொத்தணி அதிபராக மன்/ பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலையில் தனது பணியினை மேற்கொண்டார்.

(தொடர்ச்சி... 18ம் பக்கம்)

## அருட்பணி. பாக்கியறஞ்சித்தின் படுகொலைக்கு 'நம் வாழ்வு' இதழ் கண்டனம்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் நீ. பாக்கியறஞ்சித் அவர்கள் கடந்த செப்ரம்பர் மாதம் 26ம் திகதி கிளேமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டதை தமிழகக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஒரே வார இதழான 'நம் வாழ்வு' தனது 11.11.2007 இதழில் கண்டித்து செய்தி வெளியிட்டுள்ளது.

"அருட்தந்தையின் படுகொலைச் சம்பவத்திற்கு தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஒரே வார இதழான *நம் வாழ்வு* கடுமையான கண்டனத்தையும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றது. இலங்கை நாட்டில் நடைபெறும் அரசியல் வன்முறைக்கு எவ்வித தீர்வும் காணப்படாத நிலையில் தொடர்ந்து கொண்டிருக்கும் எண்ணற்ற உயிர்ப்பலிகளின் பட்டியலில் மற்றுமொரு குற்றமற்றவரின் வாழ்வு இணைக்கப்பட்டுள்ளது.

அருட்தந்தை பாக்கியரஞ்சித் அடிகளார் மிகவும் கடினமான காலங்களிலும், சவால் நிறைந்த சூழ்நிலைகளிலும் ஏழைகளுக்கு தேவையான உதவிகளையும், ஆறுதலையும் வழங்கி தன்னலமற்ற சேவையாற்றியதன் மூலம் கிறிஸ்தவ அன்பின் வேண்டுகோள்களை நிறைவு செய்துள்ளார்" என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

இடம்பெயர்ந்த நிலையில் – யுத்த மேகங்கள் மத்தியில் வாழும் மக்களுடனான சந்திப்பு

## ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள் மடு மறைக்கோட்டப் பங்குகளைத் தரிசித்தனர்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள் கடந்த ஜனவரி மாதம் 11 - 13ம் திகதி வரையிலான காலப்பகுதியில் வன்னிப்பகுதியில் - மடு மறைக்கோட்டத்தில் இடம்பெயர்ந்த நிலையில் உள்ள மக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். பங்குத்தந்தையர்கள் மற்றும் மக்களுடனான இச்சந்திப்பின்போது 2008ம் ஆண்டிற்கான (இறைவார்த்தை ஆண்டையொட்டிய) மன்னார் மறைமாவட்ட அருட்பணித்திட்டமிடல் மாநாட்டுத் தீர்மானங்கள் மக்களுக்கு விளக்கிக் கூறப்பட்டன. திருவிவிலிய ஆணைக்குழுவின் இயக்குனரும், மறைமாவட்ட நிதியாளருமாகிய அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம், பொதுநிலையினர் மற்றும் குடும்பப்பணி ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா, அன்பிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. ஏ. யூட் குரூஸ், மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள், மற்றும் மறைபரப்புப் பணிகள் ஆணைக்குழு இயக்குனரும், மன்னா பத்திரிகைப் பதிப்பாசிரியருமாகிய அருட்பணி. பி. கிறிஸ்து நேசன் மற்றும் முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. ஸ்ரீபன்றாஜ், அரிப்புப் பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

தேவன்பிட்டி, விடத்தல்தீவுப் பங்கு மக்களையும் மற்றும் பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்த நிலையில் வாழும் அடம்பன், ஆட்காட்டிவெளி, தட்சனாமருதமடு, மடு ஆகிய பங்குகளைச் சேர்ந்த மக்களையும் இக்குழுவினர் சந்தித்து அருட்பணித்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை அளித்தனர்.

## பங்கு மட்டத்திலான அருட்பணி மாநாடுகள்

கடந்த நவம்பர் மாதம் மன்னாரில் இடம்பெற்ற மறைமாவட்ட மட்டத்திலான அருட்பணித்திட்டமிடல் மாநாட்டைத் தொடர்ந்து மன்னார் ஆயர் அவர்களின் வேண்டுகோளின்படி பங்கு மட்டத்திலான அருட்பணித்திட்டமிடல் மாநாடுகள் நடாத்தப்பட்டன.

மறைமாவட்டத்தில் எடுக்கப்பட்ட அருட்பணித்திட்டத் தீர்மானங்களை அடியொற்றி ஒவ்வொரு பங்குத் திருச்சபையும் தத்தமது சூழமைவுக்கு ஏற்ப மறைமாவட்டத் தீர்மானங்களை தமது பங்கு மட்டத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்று ஆராய்வதும் திட்டமிடுவதும் இந்த பங்கு மட்ட அருட்பணி மாநாடுகளின் நோக்கமாகும். இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு பல பங்குகளில் ஆக்கபூர்வமான பல நல்ல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

## மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்லூரி தினம்

புனிதராம் பிரான்சிஸ் சவேரியாரின் திருநாமத்தைத் தாங்கி, மன்னார் மண்ணில் மணிமகுடமாய் பல துறைகளிலும் தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்து மிளிர்ந்து கொண்டிருக்கும் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தனது பாதுகாவலராம் புனித சவேரியாரின் தினத்தை கல்லூரி தினமாக கடந்த 03.12.2007 அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது.

அன்று காலை 7.30 மணிக்கு கல்லூரிக் கொடியை கல்லூரி முதல்வர் அருட்சகோ. ஜே. ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் ஏற்றிவைத்து சம்பிரதாய பூர்வமாக விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து காலை 7.45 மணிக்கு பேராலயப் பங்குத்தந்தை அருட்தந்தை எஸ். கே. தேவராஜா அவர்களால் திருப்பலியும் புனிதரைப் பற்றிய மறையுரையும் நிகழ்த்தப்பட்டது. அடிகளாரால் புனிதரைப் பற்றிய பல புதிய விடயங்கள் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து மாணவர்கள் வகுப்பு வகுப்பாக தங்கள் வகுப்பாசிரியருடன் தாங்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்த காலை உணவை தங்களுக்கிடையில் பகிர்ந்து உண்டு மகிழ்ந்தனர். அதேவேளை பாடல்கள் பாடியும், நடனமாடியும் மகிழ்ந்தனர்.

தொடர்ந்து காலை 10.30 மணியளவில் கல்லூரித் தினத்தையொட்டி சுமார் ஒரு மாத காலமாக நடாத்தப்பட்டு வந்த அரச, அரசசார்பற்ற திணைக்களங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கல்லூரி மைதானத்தில் ஆயிரக் - கணக்கான மாணவர்கள், இரசிகர்கள் மத்தியில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் திரு. பி. ஜெயராஜா அவர்களும், சிறப்பு விருந்தினராக இலங்கைச் செஞ்சிலுவை சங்க மன்னார் மாவட்டக் கிளைச் செயலாளர் திரு. எஸ். ஜெனிங்ஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணியும் சோவா (ZOA) நிறுவனத்தினரும் கலந்துகொண்டனர். கல்லூரி ஆசிரியர் அணி துல்லியமான முறையில் செயற்பட்டு ஒரு ஓட்டத்தினால் வெற்றியீட்டிச் சம்பியனாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கல்லூரி அணி 15 ஓவர்களில் 7 விக்கட் இழப்பிற்கு 107 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சோவா (ZOA) அணி 15 ஓவர்களில் 9 விக்கட் இழப்பிற்கு 106 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

வெற்றியீட்டிய கல்லூரி அணிக்கு பிரதம விருந்தினரால் வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும், 2ம் இடத்தைப்பெற்ற அணிக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. அத்துடன் மாணவர்களுக்கிடையில் இல்ல ரீதியாக நடாத்தப்பட்ட கிரிக்கெற் போட்டியில் எமில் இல்லம் சம்பியனாகி பரிசில்களைப் பெற்றுக்கொண்டது.

*பி. ஞானராஜ்*

## மன்னார் பிரதேச எழுத்தாளர்கள், கலைஞர்கள், புலவர்களின் விபரம் திரட்டல்

மன்னார் மண்ணில் கலை இலக்கியத்துறையில் ஈடுபட்டு மண்ணின் கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களுடைய விபரங்களைத் திரட்டி ஆவணப்படுத்தும் முயற்சி இடம்பெறுகின்றது. எனவே மன்னார்ப் பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், புலவர்கள் ஆகியோர் பின்வரும் முகவரியோடு தொடர்புகொண்டு விபரத்திரட்டுப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள். வாழ்ந்து மறைந்தவர்களுடைய தகவல்களை உறவினர்கள் வழங்க முன்வருமாறும் கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள : அருட்பணி. தமிழ் நேசன், மறைக்கல்வி நிலையம், மன்னார், தொலைபேசி. 023- 2222377, 0602233276

## மேரி பஸ்ரியன் அடிகளாரின் 23ம் ஆண்டு நினைவு

வங்காலை பங்குத்தந்தையாகப் பணியாற்றிய போது 1984ம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அருட்பணியாளர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 23ம் ஆண்டு நினைவுதினம் கடந்த ஜனவரி மாதம் 06ம் திகதி வங்காலையில் நினைவுகூரப்பட்டது.

அன்றைய தினம் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையில் விசேட இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து பஸ்ரியன் அடிகளாரின் திருவுருவச் சிலை முன்றலில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

கடந்த ஜனவரி மாதம் 10ம் திகதி அடிகளாரின் முயற்சியில் உருவான பேசாலைப் பகுதியில் அமைந்துள்ள வங்காலைப்பாடு என்னும் இடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

## மன்னார் கச்சேரியில் ஒளிவிழா

கடந்த டிசம்பர் மாதம் 20ம் திகதி மன்னார் கச்சேரி அலுவலர்களின் ஒளிவிழா நிகழ்வு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்ட திட்டப்பணிப்பாளர் திரு அ. பத்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குனரும் மன்னா பதிப்பாசிரியருமான அருட்பணியாளர் நேசன் அடிகளார் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக குடும்பம் மற்றும் பொதுநிலையினர் பணிகளுக்கான இயக்குனர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் கலந்துகொண்டார். அரசாங்க அதிபர் திரு. நீக்கிலாஸ்பிள்ளை அவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

நாட்டின் சமாதானத்திற்காக செபிக்கும் ஒரு சந்தர்ப்பமாக இந்த ஒளிவிழா அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் செப வழிபாட்டை அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் காட்சித் திரையின் உதவியோடும் கச்சேரி அலுவலர்களின் பங்களிப்போடும் சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தார்.

இடம்பெயர்ந்து இன்னல்கள் மத்தியில் வாழ்ந்தாலும் வன்னியில் தொடரும் இறைபணிகள்

## மடு மறைக்கோட்ட பீடப்பணியாளருக்கான மாபெரும் ஒன்றுகூடல்!

- மனதை ஒருமுகப்படுத்தும் தியானம் மற்றும் மகிழ்வூட்டும் கலை நிகழ்வுகள்!
- அமரர் அருட்பணி. பாக்கியறஞ்சித் அடிகளார் நினைவு வெற்றிக்கேடய உதைபந்தாட்டப் போட்டி!

*"நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்துபோவதில்லை குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை." (2 கொரி 4:8)*

பல்வகைப்பட்ட இன்னல் இடையூறுகள் இடப்பெயர்வுகளினால் ஏற்படும் மன அழுத்தங்கள் மத்தியில் பிரிந்து பிளவுண்டு பல்வேறுபட்ட இடங்களில் குடியிருக்கின்ற எம் சிறார்களை ஒன்றிணைக்கும் வகையிலே மடு மறைக்கோட்டப் பங்குகளைச் சேர்ந்த பீடப்பணியாளர்களுக்கான ஒன்றுகூடல் தேவன்பிட்டிப் பங்கின் துணை ஆலயமான இலுப்பைக்கடவை புனித அந்தோனியார் ஆலயத்திலே கடந்த டிசம்பர் 23 - 24ந் திகதிகளில் நடைபெற்றது.

மடு மறைக்கோட்டத்தின் பங்குகளிலிருந்து ஏறத்தாழ 150 பீடப்பணியாளர்களும், மடு மறைக்கோட்டத்தில் பணிபுரியும் அருட்-பணியாளர்களும், அருட்சகோதரர்களும் இவ்வொன்றுகூடலிலே கலந்துகொண்டனர்.

23ம் திகதி ஞாயிறு மாலை நற்கருணை ஆராதனை வழிபாட்டுடன் இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின. இரவு உணவின் பின்னர் பல்சுவை கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் மூலம் பீடப்பணியாளர்கள் மகிழ்ந்திருக்கவும், குழுக்களாக இணைந்து தமது ஆற்றல்கள் திறமைகளை வெளிக்கொணரவும் வழிகிடைத்தது.

24ம் நாள் காலையில் பீடப்பணியாளர்கள் வழிநடாத்தற் தியானத்தில் ஈடுபட்டு காலைத் திருப்பலியுடன் நிகழ்வுகளை ஆரம்பித்தனர்.

காலை உணவின் பின்னர் மறைப்பணியாளர் அல்பிரட் அவர்களால் சிறப்புரையும், தொடர்ந்து பீடத்தில் துணைபுரிவதற்கான சிறிய பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றது.


இதனைத் தொடர்ந்து ஒன்றுகூடலில் கலந்துகொண்ட சிறார்கள் பங்குரீதியாக அணிகளாகப் பிரிக்கப்பட்டு, "அமரர் அருட்பணி பாக்கிய றஞ்சித் அடிகளார் நினைவு வெற்றிக்கேடய" உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

பலரும் தமது திறமையைக் காட்டினாலும் தேவன்பிட்டி பங்குப் பீடப்பணியாளர்களே வெற்றிக் கேடயத்தை தட்டிக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து வெற்றிக்கேடயம் வழங்கல், பாராட்டல் நிகழ்வுகளைத் தொடர்ந்து மதிய உணவுடன் மன மகிழ்ச்சியாக இவ்வொன்றுகூடல் நிகழ்வு நிறைவெய்தியது.

பல்வகைப்பட்ட இடையூறுகள் மத்தியில் இடம் பெயர்ந்து வாழ்கின்ற சிறார்களை ஒன்றிணைத்து இந்நிகழ்வினை நடாத்தி முடிக்க மடு மறைக்கோட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்களின் ஒத்துழைப்பும் இலுப்பைக்கடவை அந்தோனியார் ஆலய மக்களின் உதவி ஒத்தாசையும் இந்நிகழ்வின் வெற்றிக்கும் சீரான இயக்கத்திற்கும், சிறுவர்களின் மகிழ்ச்சிக்கும் படிக்கற்களாக அமைந்திருந்தன.

*தகவல்*
*அருட்பணி. லக்கோன்ஸ் பிகிறாடோ*





மடு மறைக்கோட்டப் பீடப்பணியாளர்களுக்கான ஒன்றுகூடலின்போது அருட்பணியாளர்கள் சீமான் மரியதாசன், இராஜநாயகம், சத்தியராஜா, இ. செபமாலை, லக்கோன்ஸ் பிகிறாடோ ஆகியோரும் பீடப்பணியாளரும் படங்களில் காணப்படுகின்றனர்.

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலக சர்வமதப் பிரதிநிதிகளின் சமாதான மாநாடு

கடந்த டிசம்பர் மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் உலக மதத்தலைவர்களின் பிரநிதிகள் இலங்கையின் சர்வமதப் பிரதிநிதிகளுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் சமாதான மாநாட்டை நடாத்தினார்கள்.

இக்குழுவில் சமாதானத்திற்கான உலக மதத் தலைவர்களுக்கான செயலாளர் நாயகம் நியூயோர்க்கிலிருந்து வருகை தந்திருந்த வைத்தியர் வில்சன் வென்லி, கம்போடியா நாட்டிலிருந்து வண. வான் கொப் தேரர், மகாத்மா காந்தியின் பேத்தியும் தென்னாபிரிக்க நாட்டிலிருந்து வருகை தந்தவருமான செல்வி. எலா காந்தி, முஸ்லிம் மதத் தலைவர் மீர் நவாஸ் , இக்குழுவின் உதவிச் செயலாளர் நாயகமும் ஜப்பான் நாட்டிலிருந்து வருகை தந்தவருமான வண சுகினோ, ஜப்பான் நாட்டின் சமாதானத் தூதுவர் ஜசுசி அக்காஸி உட்பட 15 சர்வதேச பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இலங்கையிலிருந்து இரத்மலானை பௌத்த விகாரை உயர் பீடாதிபதி, நுகேகொட பௌத்த விகாரை உயர் பீடாதிபதி, இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கத் தலைவரும் கண்டி ஆயருமான அதிவண. வியானி பெர்னான்டோ ஆண்டகை, கத்தோலிக்க ஆயர் மன்ற உபதலைவரும் மன்னார் மறைமாவட்ட ஆயருமான அதிவண. இராயப்பு ஜோசப்பு ஆண்டகை, அங்கிலிக்கன் திருச்சபையைப் பிரதிநிதித்துவப் - படுத்தும் முகமாக குருநாகல் ஆயர் அதிவண. அன்றூ இலங்கசிங்க ஆண்டகை, வெள்ளவத்தை இந்து மதக் குருக்கள் பாலா சர்மா அவர்கள், பவ்ரல் (Paffrel) நிறுவனத் தலைவர் திரு. கிங்சிலி ரொட்றிகோ, தேசிய சமாதானக் குழுவின் செயலாளர் கலாநிதி ஜெகான் பெரெரா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ்ப்பாண நூலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்திலிருந்து பலதரப்பட்ட மக்களும் பெண்கள், சமயத் தலைவர்கள், சமாதானக் குழுக்களின் உறுப்பினர் என பலரும் பங்கேற்றனர்.

மக்களின் துன்பங்களுக்கு செவிமடுத்தலும், அவர்களின் துன்பங்களை உணர்தலும், மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளலும் இம்மாநாட்டின் நோக்கங்களாக அமைந்திருந்தது. இலங்கை நாட்டின் சமாதானத்தை சர்வதேச மதக்குழுத் தலைவர்கள் ஊடாக ஏற்படுத்த வழிவகைகளும் இம்மாநாட்டில் ஆராயப்பட்டன.

இக்குழுவினர் இம்மாநாட்டின்பின் கொழும்பு திரும்பி பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்து யாழ்ப்பாண நிலவரத்தை விளக்கியதுடன் சமாதானத்திற்கான நடவடிக்கைகள் தொடரவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.


## போர் ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுங்கள் அமைதிப் பேச்சுக்களை உடன் ஆரம்பியுங்கள்

### - கிறிஸ்மஸ் செய்தியில் யாழ் ஆயர் -

கைதுகளும் காணாமற்போதல்களும் கொலைகளும் மரண அச்சுறுத்தல்களும் போர்மேகங்களும் சூழ்ந்துள்ள நிலையில் 2007ஆம் ஆண்டிற்கான நத்தார் பண்டிகையை எதிர் கொண்டுள்ளோம் என யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தமது கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பயத்திலும் பதட்டத்திலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் பாதுகாப்புத்தேடி எங்கு செல்வோம் என்ற அங்கலாய்ப்பிலும் நத்தார்ப் பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாடும் நிலை இம்முறை இல்லை. போர்ச் செயற்பாடுகளை நீக்கி பேச்சுக்கள் மூலம் நீடித்த அமைதியை கொண்டு வருவதற்கான செயற்பாடுகள் அருகிவிட்டன. போருக்கான அறைகூவலே எப்பக்கம் திரும்பினாலும் கேட்கிறது. இந்த நிலையில் அமைதியின் அரசராக இனங்களை ஒன்றிணைக்கும் பாலமாகப் பிறந்த பாலக இயேசுவின் நத்தார் பண்டிகைச் செய்தியில் நாம் உரத்து வலியுறுத்த விரும்புவது அனைத்து வன்செயல்களையும் நிறுத்துங்கள், போர் ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுங்கள், இனங்களுக்கிடையில் இணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தக்கூடிய தீர்வுத்திட்டங்களை உடன் முன்வையுங்கள். அமைதிக்கான பேச்சுக்களை உடன் ஆரம்பியுங்கள் என்பதாகும்.

இதுவே இன்றைய நிலையில் துன்பத்திலும் வேதனையிலும் வாடும் தமிழ் மக்கள் பேரால் விடுவிக்கப்படும் வேண்டுகோளாகும்.



இம்முறை நத்தார் பண்டிகையோடு ஒட்டிய கேளிக்கைகள், கொண்டாட்டங்கள், வெளி ஆடம்பரங்களைத் தவிர்த்து அர்த்தமுள்ள ஆன்மீக விழாவாக இந்த நத்தார் விழாவைக் கொண்டாடுங்கள். பிறரன்புச் செயல்களையும், அன்பின் பகிர்தல்களையும், இரக்கச் செயல்களையும், பொதுநலப் பணிகளையும் செய்து பாலக இயேசுவின் ஆசிகளை நிறைவாகப் பெற்று புதிய ஆண்டை வரவேற்கத் தயாராகுங்கள்.

## கண்டியில் இடம்பெற்ற பல்கலைக்கழகங்களின் கத்தோலிக்க மாணவர் ஒன்றியப் பயிற்சிப்பட்டறை

### - இலங்கையிலுள்ள கத்தோலிக்க பல்கலைக்கழக மாணவர்களின் சங்கமம்!
### - இனரீதியான புரிதலை வளர்க்க வாய்ப்பாக அமைந்த சிறந்த சந்தர்ப்பம்!

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கத்தோலிக்க ஒன்றிய மாணவர்களுக்கு வருடாவருடம் மூன்று நாள் பயிற்சிப்பட்டறை இடம்பெற்று வருகின்றது. இப்பயிற்சிப்பட்டறை அண்மையில் கண்டியிலுள்ள மென்ரெபானோ துறவற மடத்தில் இடம்பெற்றது.

இலங்கையிலுள்ள யாழ்ப்பாண, கிழக்கு, மொறட்டுவ, கெலனிய, ஜெயவர்த்தனபுர, கொழும்பு, பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 68 மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த (வவுனியா வளாகம்) 5 மாணவ மாணவிகள் இதில் கலந்துகொண்டமை ஏனைய மாணவர்களுக்கு மகிழ்ச்சியளித்தது. பல்கலைக்கழக ஆன்மீகப் பணியாளர்களான அருட்தந்தையர்கள் இராசேந்திரம் ஸ்ராலின் (யாழ்ப்பாணம்), எகட்டன் பெரோ (பெரதேனிய), சந்திரகாந்தன் (கிழக்கு), எட்டமண்ட் (மொறட்டுவ) கெலனிய, ஜெயவர்த்தனபுர, (கொழும்பு), ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். நீண்டகால இடைவெளிக்குப்பின் யாழ்பாணத்திலிருந்து பல்கலைக்கழக புதிய ஆன்மீகப் பணியாளர் வருகை தந்ததையிட்டு ஏனைய அருட்தந்தையர்கள் பெரிதும் மகிழ்ந்ததாகக் கூறினர்.

*"இலங்கையில் சிதைந்து செல்லும் மனித மதிப்பீடுகளுக்கு பல்கலைக் கழக மாணவர்களின் பதில்மொழிகள்"* என்னும் மையப்பொருளே நிகழ்வுகளை நெறிப்படுத்தியது.

முதல் நாள் அமர்வில் தேசிய சமாதான ஆணைக்குழுவின் (National Peace Commission) அங்கத்தவரான ஜெகான் பெரேரா அவர்கள் இனப்பிரச்சினையின் வரலாறு, தீர்வுகள், விளைவுகள் என்பன பற்றிச் சிறப்புரை ஆற்றினார். இவரது உரை நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. கேள்வி வேளையில் தமிழ் சிங்கள மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இவ்வேளையில் அருட்தந்தை ஸ்ராலின் அவர்களும் பொருத்தமான வேளைகளில் முக்கிய கருத்துக்களை வழங்கினார். அதனையடுத்து இலங்கையில் நிலவும் ஊழல்களின் வடிவங்கள், காரணிகள், தீர்வுகள் என்பனபற்றி Transparency International நிறுவனத்தின் வளவாளர் கறோல்ட் அன்ரனி அவர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் விபரித்தார்.

இரண்டாம் மூன்றாம் நிகழ்வுகளை இலங்கை உள ஆற்றுப்படுத்துனர் சங்க இயக்குனர் அருட்தந்தை மேர்வின் பெர்ணாண்டோ அவர்கள், மதிப்பீடுகளின் வகைகள், ஆளுமை முதிர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி என்ற மைய விடயங்களைப் பயிற்சிகள், உரைகள், குழுக் கலந்துரையாடல்கள் என்பனவற்றின் ஊடாகச் சிறப்பாக நெறிப்படுத்திச் சென்றார். இவரது உரை பலரின் உள்ளத்தில் ஆழமான பதிவுகளை ஏற்படுத்தியது என்பதை இறுதியாக இடம்பெற்ற பின்னூட்டல் அரங்கம் வெளிப்படுத்தியது.

இரு இனத்தையும் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் நட்போடு கலந்து உறவாடியமை ஒரு முக்கிய நிகழ்வாக - மகிழ்ச்சி அனுபவமாக அனைத்து மாணவர்களாலும் உணரப்பட்டது. தினமும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆன்மீகச் சூழல் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அனைத்துப் பங்குபற்றுனர்களுக்கும் நினைவுச் சின்னம் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை மகிழ்ச்சிக்கு மகுடமாக அமைந்தது. மலைப்பாங்கான அழகிய அமைதி நிறைந்த இடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றமையும் மனதுக்கு இரம்மியமாக அமைந்தமை ஒரு மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது.

*வோல்ரர் ஜோசப்பின் வேஜின்*
*கத்தோலிக்க மாணவர் ஒன்றியத் தலைவி*
*வவுனியா வளாகம்.*

---

**- ஜிம்பிறவுண் அடிகளார் தொடர்பில் அரசாங்கம் நேர்மையாகச் செயற்படவில்லை!**
**- ஜனாதிபதி தாம் அளிக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை!**

## யாழ் ஆயர் அரசின்மீது கடுமையான குற்றச்சாட்டு!

ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல்போனது தொடர்பாக அரசாங்கம் நேர்மையாக செயற்படவில்லை என கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கான ஏ – 9 பாதை மூடப்பட்டு இரண்டு ஆண்டுகளாகிவிட்டன. மக்களினது நாளாந்த வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏ - 9 பாதையைத் திறந்தால்தான் அங்கு மக்கள் உயிர்வாழ முடியும். அத்தியவசியப் பொருட்களினது விலை கடுமையாக உயர்ந்துவிட்டது. ஒரு தேங்காயின் விலை ரூபா 80.00 ஆகிவிட்டது. மின்சாரம் சீராக விநியோகிக்கப்படுவதில்லை. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. யாழ் குடாநாட்டில் பணப் புழக்கமும் குறைந்துவிட்டது. வேலை வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுவதில்லை.

ஜனாதிபதியை ஒவ்வொரு முறையும் சந்திக்கின்றபோதும் மிகுந்த மரியாதையோடு எம்மை நடத்தி நாங்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்வார். ஆனால் அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை. இந்த ஆண்டின் தொடக்கத்தில் அநுராதபுரம், மன்னார் ஆயர்களுடன் நாமும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவைச் சந்தித்து நிலைமைகளை விளக்கினோம். பேச்சுக்களின் மூலமாகத் தீர்வு காண அறிவுறுத்தினோம் என்றார் யாழ் ஆயர்.

## பத்திரிகைப் பணியில் இருந்து விடைபெறும் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்



யாழ் மறைமாவட்டப் பத்திரிகையான பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராக கடந்த 10 ஆண்டுகள் (1997 - 2007) சிறப்பாகப் பணியாற்றிய அருட்பணியாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தனது பத்திரிகைப் பணியிலிருந்து விடைபெறுகின்றார்.

இப்பணியிலிருந்து விடைபெறும் அடிகளார் யாழ். பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசில் பெற்று பத்திரிகைத் துறையில் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து செல்கிறார். பாதுகாவலன் பத்திரிகையின் புதிய ஆசிரியர் யார் என்ற விபரம் இதுவரை வெளியிடப்படவில்லை.

மிகவும் கடினமான காலப்பகுதியில், பலவித சவால்களுக்கு முகம் கொடுத்து பாதுகாவலன் பத்திரிகையை வெளிக்கொணர்ந்த ரூபன் அடிகளாருக்கு மன்னா சார்பாக பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம். (மன்னா பதிப்பாசிரியர்)

## செய்திகள் சில வரிகளில்.....

- தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய அரசியற் துறை பொறுப்பாளராகப் பதவியேற்றிருக்கும் ப. நடேசனை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அண்மையில் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

- குடாநாட்டில் தொடரும் கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமற்போதல் ஆகியவற்றை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வாவிடம் கொழும்பில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்தார்.

- கொழும்பு மறைமாவட்ட பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 12ம் திகதி தனது 75வது வயதை நிறைவுசெய்தார்.

75 வயதுடன் ஒரு ஆயர் தனது ஆயர் பணியில் இருந்து ஓய்வுபெறவேண்டும் என்பது திருச்சபையின் சட்டமாகும். தற்போதைய பேராயர் உடனடியாக ஓய்வு பெறுவாரா அல்லது உரோம் அவருக்கு சேவை நீடிப்புக் காலத்தை வழங்குமா, அப்படி அவர் உடனடியாக ஓய்வு பெற்றால் புதிய பேராயராக இனி யார் வருவார் என்பன இதுவரை அறியப்படாத செய்தியாகளாகவே உள்ளன.

### இராஜசிங்கம் அடிகளாரின் தந்தையார்

## இறைபதம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ப. இராஜசிங்கம் அடிகளாரின் தந்தையார் பிரான்சிஸ் பாக்கியநாதர் கடந்த 28.11.2007 அன்று இறைபதம் அடைந்தார். தமது அன்பு மகன் இராஜசிங்கம் அடிகளாரை திருச்சபைக்குப் பணிபுரிய அர்ப்பணித்த இத்தந்தையாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம். இராஜசிங்கம் அடிகளாருக்கு மன்னார்த் திருச்சபையின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம். (பதிப்பாசிரியர்)

# வரலாற்றில் முதன் முறையாக சவுதி அரேபிய மன்னர் வத்திக்கானில் திருத்தந்தையைத் தரிசித்தார்

**– ஒரு மாற்றத்தின் தொடக்கம் என அரேபிய ஊடகங்கள் மிகவும் ஆச்சரியத்துடன் செய்தி வெளியிட்டன!**
**– இஸ்லாம் – கிறிஸ்தவ உலகின் நல்லுறவில் வளர்ச்சியை எதிர்பார்க்கலாம் என நம்பிக்கை!**
**– திருத்தந்தை இரு கைகளையும் அகல விரித்து கைலாகு கொடுத்து மன்னரை வரவேற்றார்!**

கடந்த நவம்பர் மாதத் தொடக்கத்தில் சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா திருத்தந்தையைத் தரிசிப்பதற்காக வத்திக்கானுக்கு வருகை தந்தார். இது வரலாற்றில் முதல் முறையாக இடம்பெற்ற ஒரு சந்திப்பாகும். இவரது வருகைபற்றி வத்திக்கான் ஊடகப்பகுதி செய்தி வெளியிடுகையில் இரு பகுதியினருக்கும் இடையேயான கலந்துரையாடல்கள் இதயபூர்வமான - நட்புரீதியான சூழமைவில் நிகழ்ந்ததாகத் தெரிவித்தது.

பேச்சுக்களில் முக்கிய விடயங்களாக பல்மறை, பல் கலாச்சாரங்களுக்கிடையேயான உறவுகள் பற்றியும் மக்களினங்கள் அமைதியாக இணைந்து வாழ்வது குறித்தும், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர், யூத மறையினர் இணைந்து வாழ்வதன் பெறுமதி குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் உலகில் நீதியுடன் கூடிய சமாதானம் மலரவும், ஆன்மீக மற்றும் மனிதத் தன்மையின் பெறுமதியை மதிப்பதுடன் விசேடமாக குடும்பங்களின் வளர்ச்சிக்கு மறைகளும் அரசுகளும் ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதைவிட மத்திய கிழக்கு விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டதுடன் அங்குள்ள பிரச்சினைகளுக்கு ஒரு நீதியான தீர்வு காணவேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டதுடன் இஸ்ராயேல் - பாலஸ்தீன முரண்பாடுகளைப் பற்றியும் கூடிய அக்கறையுடன் பேசப்பட்டது.

சவுதி அரேபியாவில் மன்னரின் இஸ்லாமிய ஆட்சி நிலவுகின்றது. அங்கு மறைச் சுதந்திரமில்லை. இஸ்லாம் தவிர்ந்த ஏனைய மறைகள் எதையும் வெளிப்படையாகப் பின்பற்றுவதற்குத் தடையுள்ளது. ஆகவே மன்னர் திருத்தந்தை 16ம் பெனடிக்ரைத் தரிசித்ததை அரேபிய ஊடகங்கள் மிகவும் ஆச்சரியத்துடன் *ஒரு மாற்றத்தின் தொடக்கம்* என செய்தி வெளியிட்டிருந்ததுடன் இச்சந்திப்பால் இஸ்லாம் - கிறிஸ்தவ உலகின் நல்லுறவில் வளர்ச்சியை எதிர்பார்க்கலாம் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதல் முறையாக சவுதி மன்னர் வத்திக்கானைத் தரிசித்தபோது திருத்தந்தை 16ம் பெனடிக்ற் மன்னரை விருந்தினர்களை வரவேற்கும் ரொனேற்றோ மண்டபத்தில் "Sala del Tronetto"வில் இரு கைகளையும் அகல விரித்து கைலாகு கொடுத்து வரவேற்றார்.

மன்னர் அப்துல்லா வழமைபோன்று நீண்ட அங்கி அணிந்திருந்தார். கழுத்தில் நீலநிற சால்வையைப் போர்த்தியிருந்தார். மன்னர் திருத்தந்தையை அன்போடு நலம் விசாரித்ததுடன் அவர் தமது நாட்டிலிருந்து கொண்டுவந்திருந்த விலைமதிப்புள்ள வைரம் பதித்த வாள் ஒன்றையும், ஒட்டகத்தில் ஒருவர் பேரீச்சை மரத்தின்கீழ் இருப்பதுபோன்ற கலைவடிவத்தையும் பரிசளித்தார். திருத்தந்தையும் வத்திக்கான் சார்பாக நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.



சவூதி மன்னர் அப்துல்லா

இச்சந்திப்பின்போது மன்னராட்சியில் கிறிஸ்தவர்களுக்கு உரிமைகள் வழங்க முயற்சிக்கப்பட வேண்டும் என்ற விடயம் நாசூக்காக எடுத்துக்கூறப்பட்டது. சந்திப்பின் இறுதியில் இரு பகுதியினரும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

முதன்முறையாக சவுதி மன்னர் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு நாட்டில் அவர்களுடன் ஒன்றிணைந்து அறிக்கை விடுத்தது பலரையும் ஆச்சரியப்பட வைத்தது.

## சவூதி அரேபியாவும் கிறிஸ்தவர்களும் ஆச்சரியம்மிக்க தகவல்கள்!

சவுதி அரேபியாவில் 2.5 மில்லியன் கிறிஸ்தவர்கள் வசிக்கின்றனர். பலர் தொழில் ரீதியாகவும், திருமண உறவாலும் கிறிஸ்தவர்களாக உள்ளனர். இவர்கள் திருவழிபாட்டுப் புத்தகங்களையோ, படங்களையோ, செபமாலைகளையோ அல்லது சிலுவையையோ வைத்திருப் - பதற்குத் தடை உள்ளது.

சவுதி அரேபியாவில் ஆலயமோ அல்லது அருட்பணியாளரோ இல்லை. அவர்களின் உத்தியோகபூர்வ மறை விளக்கப்படி "சவுதி முழுவதும் ஒரு பள்ளிவாசல். அதனுள் வேறு ஆலயங்களுக்கு இடமில்லை" என்று கூறிக்கொள்வர். இதனால் ஒரு சிற்றாலயமாவது அமைக்க அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் எதுவும் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.


அதேவேளை வத்திக்கானில் ஒரு பள்ளிவாசல் அமைக்கப்பட்டுவருவதை உத்தியோகபூர்வமாக வத்திக்கான் அறிவித்திருந்தது. அப்படியிருந்தபோதும் சவுதி அரேபியா பிடிவாதமாக மறுத்து வருவதால் கடந்த காலங்களில் மறைச் சுதந்திரத்தை மதிக்காத நாடுகளில் சவுதி அரேபியாவும் ஒன்றாக வத்திக்கானால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே திருத்தந்தை 16ம் பெனடிக்ற், இஸ்லாமிய நாடுகள் சிறுபான்மை மறையினருடன் விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்ளவேண்டுமென பலமுறை கேட்டு வருகின்றார். ஆனால் இப்படியான விட்டுக்கொடுப்பு சவுதி அரேபியாவில் இல்லாத நிலை இன்றுவரையுள்ளது.

## திருத்தந்தையின் லூர்துபதிப் பயணம்

2008ஆம் ஆண்டு திருத்தந்தை லூர்துபதிக்குச் செல்ல இருக்கின்றார். 1858இல் மரியாள் லூர்து எனும் கிராமத்திலே காட்சி கொடுத்த 150ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்காகவே திருத்தந்தை அங்கு செல்ல இருக்கின்றார்.

யூலை 15இல் திருத்தந்தையின் வருகை நடைபெறும் என வத்திக்கானின் தலைமை இயக்குனர் இயேசு சபைப் பணியாளர் வெடேறிகோ லெம்பார்டி தெரிவித்தார்.

150ஆம் ஆண்டு நிறைவு விழா 2007 டிசம்பர் 8ஆம் திகதி தொடக்கம் 2008 டிசம்பர் வரை நடைபெறும்.



## பூர்வீக இனத்தவர் முத்திப்பேறுபெற்றார்

தென் அர்ஜென்டினாவில் கிம்பேயில் திருப்பீடச் செயலர் கர்தினால் தர்ச்சீசியோ பொத்தோனே நிகழ்த்தும் விழாத் திருப்பலியில் மப்புக்கே பூர்வீக இனத் தலைவரது மகனான இறையடியார் செப்ரினோ நாமுன்குரா என்பவர் முத்திப் பேறுபெற்றவர் என அறிவிக்கப்படவுள்ளார். இத்திருப்பலியில் ஏறத்தாழ இரு இலட்சம் பேர் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் - படுகின்றது.

1886 முதல் 1905 வரை வாழ்ந்த இறையடியார் செப்ரினோ, ஏழைகள் மத்தியில் மிகவும் பிரபலமானவர். புவனோஸ் ஐய்ரிஸ் சலேசியப் பள்ளியில் பயின்ற இவர், துறவு இல்லப் பயிற்சிகளை முடித்து மேற்படிப்புக்காக உரோமைக்கு அனுப்பப்பட்டார். அங்கு காச நோயால் பாதிக்கப்பட்டு திருத்தந்தையை சந்தித்த பின்னர் தனது 18வது வயதில் இறந்தார். இந்த இறையடியாரின் பரிந்துரையால் 2000மாம் ஆண்டில் ஒரு பெண்ணின் கருப்பைப் புற்றுநோய் அற்புதமாகக் குணமாகியுள்ளது.

2002ஆம் ஆண்டில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் மெக்சிகோ நகரில் குவான் தியெகோ என்பவரை புனிதராக அறிவித்தார். இப்புனிதர், அமெரிக்காவில் பூர்வீக இனத்தவரின் முதல் முறையாக புனிதராக அறிவிக்கப்பட்டவர். மேலும் கடந்த அக்டோபர் 28ஆம் திகதி வத்திக்கான் தூய பேதுரு சதுக்கத்தில் நடைபெற்ற திருப்பலியில் 498 மறைசாட்சிகள் முத்திப் பேறுபெற்றவர்கள் என அறிவிக்கப்பட்டார்கள். இவர்கள் 1930களில் ஸ்பானிய சமய அடக்குமுறைக்குப் பலியானவர்கள். ஒரே வழிபாட்டில் இத்தனை பேர் முத்திப்பேறு பெற்றவர்கள் என அறிவிக்கப்பட்டது இதுவே முதன் முறையாகும்.


## செபமாலைக் கன்னியர் சபை உங்களை அழைக்கிறது

**'அமைதிதேடி அலையும் நெஞ்சமே அனைத்தும் இங்கு அவரில் தஞ்சமே'**

இள நங்கையரே!

போரும், வன்முறையும், கொலைக் கலாச்சாரமும், பகைமையும் மலிந்து, அமைதியின்றி தவிக்கின்ற இந்த உலகுக்கும், சமுதாயத்துக்கும், தனிமனித மனங்களுக்கும், அமைதி தரும் நற்கருணைப் பிரசன்னத்திலிருந்து உனது அன்பு நிறை செப அலைகளை அனுப்பி குணப்படுத்த விரும்புகின்றாயா?

***இதோ செபமாலைக் கன்னியர் சபை உன்னை அழைத்து நிற்கின்றது.***

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

| | | | |
|---|---|---|---|
| 1.Rev. Sr. Superior,<br>Rosarian Convent,<br>35/36, Duwawa,<br>Kochchikade. | 2. Rev. Sr. Superior,<br>Rosarian Convent,<br>123, Main Street,<br>Jaffna. | 3. Rev. Sr. Superior,<br>Rosarian Convent,<br>Pattim,<br>Mannar. | 4. Rev. Sr. Superior,<br>Rosarian Convent<br>Mullai Veethy,<br>Paranthan. |


## திருப்பலி வேண்டுமென்று கோரி கல்லூரி மாணவர்கள் போராட்டம்

தென்இத்தாலிய ரறன்ரோ நகரில் உள்ள கல்லூரி மாணவர்கள் திருப்பலியில் பங்கேற்பதற்காக தமது பாடங்களைப் பகிஸ்கரித்தனர்.

இத்தாலிய ஊடகமான "அவிறெறெ" பத்திரிகை இதுபற்றி செய்தி வெளியிடுகையில், கல்லூரியில் புதிதாகப் பொறுப்பேற்ற அதிபர் வழமையாக புதிய தவணை ஆரம்பிக்கும் நாளில் இடம்பெறும் திருப்பலியை நிறுத்தியிருந்ததே இதற்கான காரணம் எனத் தெரிவித்திருந்தது. இதனால் ஏமாற்றமடைந்த மாணவர்கள் நகரின் மத்தியிலுள்ள ஆலயம் ஒன்றிற்குச் சென்று அவ்வாலய அருட்பணியாளரிடம் தமது கல்லூரியில் பணியாற்றி கடந்த கோடையில் இறைபதமடைந்த முன்னாள் கல்லூரி அதிபரின் ஆன்ம சாந்திக்காக ஒரு திருப்பலி ஒப்புக்கொடுக்குமாறு உருக்கமாக வேண்டி நின்றனர். இப்படியான ஒரு வேண்டுகோள் தனக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாக அப்பங்கின் அருட்பணியாளர் பியோ மொன்ரானா தெரிவித்து மாணவர்களின் ஆன்மீக வாஞ்சையை மனதிற் கொண்டும் வீதிக்கு வந்த அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கோடும் உடனடியாக முடிவெடுத்து திருப்பலியை நிறைவேற்றினார்.

அதேவேளை திருப்பலி மறையுரையில் மாணவர்கள் கல்வியில் கண்ணாயிருக்க வேண்டும் என்றும் பாடசாலை நேரங்களில் வேறு நிகழ்வுகளுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் புத்திமதிகூறி இனிமேல் இப்படிச் செய்யாதீர்கள் எனக் கடிந்து கொண்டார்.

அருட்பணியாளரின் கருத்தை ஏற்றுக்கொண்ட மாணவர்கள் நாம் இனிமேல் இவ்வாறு செய்வதில்லை என்று தெரிவித்ததுடன் அருட்பணியாளருடன் பாடசாலை சென்று அதிபருடனும் ஆசிரியர்களுடனும் சமரசம் செய்துகொண்டனர்.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வி உதவி தொடர்பான அறிவித்தல்




வாழ்வுதயம் நிறுவனத்தால் வருடாவருடம் வழங்கப்படும் பெற்றோரை இழந்த, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வியுதவியினை இந்த ஆண்டிலும் மேற்கொள்ள இருப்பதனால் மேற்படி பல்கலைக்கழக மாணவர்களது விண்ணப்பங்களை எமது நிறுவனம் வேண்டி நிற்கின்றது. மாணவர்கள் அவ்வப்பங்குகளில் உள்ள பங்குத்தந்தையின் சிபார்சுடன் ஜனவரி மாத முடிவிற்கு முன்னதாக அதாவது 31.01.2008 இற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை எமது வாழ்வுதயப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு :- தொடர்புகொள்ளக்கூடிய முழு விலாசம் அல்லது தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும். பல்கலைக்கழக அனுமதிப் பத்திரம் அல்லது பல்கலைக்கழக பதிவுசெய்யப்பட்ட படிவம் இவற்றின் பிரதியையும் இணைத்து அனுப்பவும. - இயக்குனர், வாழ்வுதயம்

## அங்கிலிக்கன் ஆயரின் மனைவி கத்தோலிக்கரானார்

அயர்லாந்து அங்கிலிக்கன் சபை ஆயர் கென்டர்சனின் மனைவி அனிற்றா கென்டர்சன் கத்தோலிக்க மறைக்கு மாறியுள்ளார். ரூவாம், கிலால்லா மற்றும் ஆகோன் அங்கிலிக்கன் மறைமாவட்டங்களுக்கு ஆயரான இவர் தனது மனைவி எடுத்த முடிவை ஆதரிப்பதாக மறைமாவட்ட இணையத்தளத்தில் செவ்வியளித்துள்ளார். திருமதி கென்டர்சன் கத்தோலிக்க மறையைத் தழுவும் வழிபாட்டிற்கு அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்திருந்தனர். இந்நிகழ்வின் இறுதியில் கிலாலா மறைமாவட்டக் கத்தோலிக்க ஆயர் யோண்பிளமிங் அவர்களும் அங்கிலிக்கன் ஆயர் கென்டர்சனும் இணைந்து மதச் சுதந்திரம் பற்றிய கொள்கை விளக்கம் ஒன்றை வெளியிட்டனர். திருமதி கென்டர்சனின் இம்முடிவு பலராலும் மதிப்பளித்து பாராட்டப்பட்டது.

# உலகத் திருச்சபைச் செய்திகள்



# மனித குடும்பம் அமைதியின் குழுமம்

## ஜனவரி 1ம் நாள் உலக அமைதி தினச் செய்தியில் திருத்தந்தை

மனித குடும்பம் ஒவ்வொன்றையும் சமூக ஒழுங்குமுறையின் முன்மாதிரிகையாக நோக்கும்பொழுது அமைதியைப் பெறும் வழியை மனித சமுதாயம் கற்றுக்கொள்ள முடியும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறியுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி கடைப்பிடிக்கப்படும் 41வது உலக அமைதி தினத்திற்கென வெளியிடப்பட்ட திருத்தந்தையின் செய்தியில், ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமிடையே நடைபெறும் திருமணத்தின்மீது உருவாக்கப்படும் குடும்பமே எல்லா மக்கள் மத்தியிலும் அமைதியை ஏற்படுத்துவதற்கு எடுத்துக்காட்டு என்று சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய பாரம்பரியக் குடும்பம் சமுதாயத்திற்கு இன்றியமையாதது. இந்தக் குடும்ப உரிமையின்மீதான எந்தக் கட்டுப்பாடும் அமைதிக்கு அச்சுறுத்தலை முன்வைக்கும் என்றும் அச்செய்தி எச்சரித்துள்ளது.

"மனித குடும்பம் அமைதியின் குழுமம்" என்ற தலைப்பிலான இச்செய்தி, தெரியாத்தனமாகக் கூடக் குடும்பம் என்ற அமைப்புக்கு கெடுதி வருவிக்கும் எவரும் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றார்கள் என்று கூறியுள்ளது.

குடும்பம் சமூகத்தின் அடித்தளம், ஏனெனில் இது தன் உறுப்பினர்கள் தெளிவான வழிகளில் அமைதியை அனுபவிக்க உதவுகின்றது. குடும்பத்தினால் வழங்கப்படுகிற சேவைகள் இன்றி மனித சமுதாயம் எதுவும் செய்ய இயலாது. இளையோர் அமைதியின் கலப்படமில்லா உருசியைக் குடும்பத்தைத் தவிர வேறு எங்கு சுவைக்க இயலும்? என்ற கேள்வியை எழுப்பியுள்ள திருத்தந்தை, குடும்பத்தின் மொழி அமைதியின் மொழி, நாம் எப்பொழுதும் அதைக் குடும்பத்திலிருந்து பெற வேண்டும் என்றும் சொல்லியுள்ளார்.

அமைதிக்கு முன்மாதிரியான குடும்பம் சிறப்பு உரிமைகள் கொண்டதாகக் காக்கப்பட வேண்டும். மனிதன் பற்றிய உண்மையை இருட்டடிப்புச் செய்து குடும்ப உரிமைகளைப் புறக்கணிப்பதோ அல்லது அவற்றைக் கட்டுப்படுத்துவதோ அமைதியின் அடிநாளத்திற்கே அச்சுறுத்தலாக இருக்கின்றது.

திருமணத்தின்மீது அமைக்கப்படும் குடும்பமே ஒட்டுமொத்த மனித குடும்பத்திற்கு எடுத்துக் காட்டு. சமுதாயம் அமைதியில் வாழ வேண்டுமானால், அமைக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து குடும்ப சமூகம் தூண்டுதல்களைப் பெறவேண்டும். இது தலக் குழுக்களுக்கும் தேசியக் குழுக்களுக்கும் சர்வதேசக் குழுக்களுக்கும் பொருந்தும். நாம் அனைவரும் ஆண்களும், பெண்களுமாக, சகோதர சகோதரிகளாக, பொதுவான பாதையை நோக்கி முன்னேறிச் செல்கிறோம். கடவுள்முன் பொறுப்பானவர்கள் என்ற உணர்வுடன் நாம் வாழக் கடமைப்பட்டுள்ளோம். எனவே ஒவ்வொரு மனிதனின் விலைமதிப்பற்ற உயர்வை உணர்ந்து உலகில் அமைதியைக் கட்டி எழுப்ப நாம் உழைக்க வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு அமைதிக்கு இன்றியமையாத கூறாக மனிதக் குடும்பத்தை ஆளுவதற்குப் பொதுவாகச் சட்டம் இருக்க வேண்டியதன் கட்டாயத்தையும் வலியுறுத்தியுள்ளார். நலிந்தவர்கள் வலியவர்களால் நசுக்கப்படாமல் அவர்களைப் பாதுகாப்பதற்குப் பொதுவான சட்டம் தேவை.



இச்சட்டம் அமைதியை முன்னிட்டுத் தேவை என்றும் அவர் கூறியுள்ளார்.

இறுதியில் உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் சண்டைகள் பற்றியும் கவலை தெரிவித்துள்ளார். ஆயுதப் போட்டிபோடும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாம் வருத்தத்துடன் ஏற்க வேண்டும். சில வளரும் நாடுகள் தங்கள் உற்பத்தியின் கணிசமான தொகையை ஆயுதங்கள் வாங்க ஒதுக்குகின்றன. தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் ஆயுத விற்பனையால் மிகுந்த அளவில் இலாபம் அடைகின்றன. அநேக ஏழை நாடுகள் நவீன ஆயுதங்களை வாங்கித் தங்களை வலிமையுள்ளவர்களாகக் காட்டிக்கொள்ள விரும்புகின்றன. அதே சமயம் அணு ஆயுதப் பரவல் தடையும் தேக்கத்தில் உள்ளது. இந்நிலையில் அணு ஆயுதங்கள் தடைசெய்யப்பட பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுமாறும் திருத்தந்தை அச்செய்தியில் கேட்டுள்ளார்.

## மீண்டும் புதிய உருவில் மனித அடிமைகள்

200 ஆண்டுகளுக்கு முன்பு மனிதனை அடிமையாக வைக்கும் கொத்தடிமைத் தொழில் முறை முற்றிலுமாக அகற்றப்பட்டது. ஆனால் புதிய உருவில் மீண்டும் ஆபிரிக்காவில் இந்த அடிமைநிலை தலையெடுத்துள்ளது.

சமச்சீரான பங்கீடு இல்லாத காரணத்தால் பெரும்பாலான மக்கள் ஏழ்மைக்கும், பட்டினிக்கும், அநியாயத்திற்கும், அடக்குமுறைக்கும் அடிமைகளாக உள்ளனர் என்று ஐரோப்பிய ஆயர் பேரவையின் துணைத் தலைவர் கர்தினால் ஜோசப் தெரிவித்துள்ளார். இந்த நிலை மாற ஆபிரிக்க ஐரோப்பிய திருச்சபைகளுக்கு இடையே ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் ஏற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நம்பிக்கைக்குரிய திறவுகோல் கிறிஸ்து ஒருவரே

### இளையோர் ஒன்றுகூடலுக்கு திருத்தந்தையின் செய்தி

கிறிஸ்து ஒருவர் மட்டுமே உண்மையான நம்பிக்கைக்குரிய திறவுகோலைக் கொடுக்க முடியும் என்று சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் கூடிவரும் இளையோருக்கான செய்தியில் திருத்தந்தை 16ம்பெனடிக்ற் கூறியுள்ளார்.

பிரான்சிலுள்ள டேஸே கிறிஸ்தவ குழு டிசம்பர் 28 முதல் ஜனவரி முதல் தேதி வரை ஜெனீவாவில் நடத்தவுள்ள உலக இளையோருக்கான கூட்டத்திற்கு திருத்தந்தையின் பெயரால் திருப்பீடச் செயலர் கர்தினால் தர்ச்சீஸியோ பெர்த்தோனே அனுப்பியுள்ள செய்தியில் திருத்தந்தை இளையோருடன் ஆன்மீக முறையில் மிக நெருக்கமாக இருப்பதும் இளையோருக்கான அவரின் செபமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செபமும் சந்திப்புக்களும் இடம்பெறும் இக்கூட்டத்தில் இறைவார்த்தையைக் கேட்பது, இன்னும் கிறிஸ்துவுக்கு மிக நெருக்கமாக ஈர்க்கப்படுவதன் மூலம் நம்பிக்கையின் புதிய பாதைக்கு உங்களைத் திறப்பதற்கு நீங்கள் அழைக்கப்படுகின்றீர்கள் என்றும்கூறும் அச்செய்தி, கிறிஸ்து ஒருவர் மட்டுமே உண்மையான நம்பிக்கைக்குரிய திறவுகோலைக் கொடுக்க முடியும் என்றும் சொல்கிறது.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு தனி இடஒதுக்கீடு அளித்த

# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நன்றி தெரிவித்த சிறுபான்மையினர்!

"மனிதரிடம் நன்றி பாராட்டாதவர் இறைவனிடம் நன்றி பாராட்டமாட்டார்" என்ற நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளுக்கு ஏற்ப, கடந்த நவம்பர் மாதம் 24ஆம் நாள் ஒரு மாபெரும் நன்றி அறிவிப்பு மகாநாடு தமிழகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.



சிறுபான்மைச் சமூகங்களுக்கு தனிஇட ஒதுக்கீடு வழங்கியதற்காக தமிழக முதல்வர் கலைஞருக்கு நன்றி அறிவிப்பு மாநாடு சரித்திரத்தில் இடம்பெறும் வகையில் நடந்தது.

கடுமையான போராட்டத்திற்கு நல்லதொரு தீர்வாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் 15.09.2007 அன்று தமிழக சிறுபான்மை -யினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இடஒதுக்கீடு வழங்கி அவசரச் சட்டம் பிறப்பித்தார். பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் துணிச்சலோடு, எந்தவித அச்ச உணர்வும் இல்லாமல் உண்மையிலே சமூக நீதிக்காக உத்தரவைப் பிறப்பித்த தழிழக அரசுக்கு நன்றி சொல்லும் நல்ல நாளாக அந்த நாள் அமைந்தது.

நேரு உள்விளையாட்டு அரங்கமே நிரம்பித் ததும்ப சரியாக மாலை 6.00 மணிக்கு தமிழக முதல்வர் அரங்கத்திற்கு வந்தவுடன் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகம் தலைவர் பேராசிரியர் திரு. எம். எச். ஜவாஹீருல்லாஹ் தலைமையில் விழா ஆரம்பமாகியது. தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளர் மவுலவி ஜே.எஸ்.ரிபாயி திருக்குர்ஆன் வலியுறுத்தும் மனித நேயக் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைத்தார். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர் சகோதரர் செ. ஹைதர் அலி வரவேற்புரை ஆற்றியதோடு, த.மு.மு.க.வின் தனித் தன்மைகளையும், மனித நேயச் சேவைகளையும், கொள்கை உறுதிப்பாட்டையும் பதிவுசெய்தார்.

தமிழக சிறுபான்மைக் கூட்டமைப்பின் தலைவர் மதுரைப் பேராயர் மேதகு பீட்டர் பெர்னாண்டோ தமிழக சிறுபான்மை கூட்டமைப்பின் சார்பாக வரலாற்றுச் சாதனை புரிந்த தமிழக முதல்வருக்கும், போராடிய த.மு.மு.க.விற்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தமிழகப் பேரவையின் அரசியல் ஒருங்கிணைப்பாளர் அருட்திரு சேவியர் அருள்ராஜ் ஆரம்ப காலகட்டத்தில் இருந்து சிறுபான்மையினரின் இடஒதுக்கீட்டுக்காக த.மு.மு.க.வின் நற்செயல்களைப் பாராட்டி தமிழக முதல்வருக்கு இஸ்லாமிய நண்பர்களுக்கும் நன்றி கூறி வாழ்த்துக்களைப் பகிர்ந்துகொண்டார். பேராயர் எஸ்றா சற்குணம் தமிழக முதல்வருக்கு நன்றி கூறினார். தலைமையுரை ஆற்றிய கழகத் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹீருல்லாஹ் இந்த இட ஒதுக்கீட்டைப்பெற த.மு.மு.க செய்துள்ள நீண்ட பயணத்தை நெகிழ்ச்சியுடன் எடுத்துரைத்தார். த.மு.மு.க. சார்பாக முதல்வருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

முதல்வர் தன்னுடைய ஏற்புரையில் உள்ளம் நெகிழ "நன்றி தெரிவிக்க இவ்வளவு கூட்டமா?" என்று ஆச்சரியப்பட்டதோடு, "நான் விருத்தினராக வரவில்லை. மாறாக, விருந்தினர்களாக உள்ளவர்களை வரவேற்க உங்களில் ஒருவன். என்னை வேறுபடுத்த வேண்டாம்" என்று கூறி தன்னை ஐக்கியமாக்கியதோடு, தனது உரையில் கருணை இல்லம்போல் நலிந்தவர்களுக்காகப் பாடுபடும் த.மு.மு.க.வுக்கு தனது சொந்தப் பொறுப்பில் இரண்டு நோயாளர் காவு வண்டிகள் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

## யாழ் மறைமாவட்டத்தின் புதிய குரு முதல்வர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமது சேவையின் அதிக காலத்தை கல்விப் பணியிலே ஆற்றி 2001ஆம் ஆண்டு கல்விப் பணியில் 25 ஆண்டுகளை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் நிறைவுசெய்துள்ளார். 1976ஆம் ஆண்டு முதல் 1989ஆம் வரை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் உப அதிபராகவும் 1989ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை அக்கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றிய பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றிய பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக அரச பாடசாலையிலிருந்து தனியார் பாடசாலைக்கு பணிமாற்றம் செய்யப்பட்டார்.

இங்கிலாந்திலிருந்து தமது கலாநிதிப் பட்டத்தை 1986–1988 காலப்பகுதியில் நிறைவு செய்த இவர் 1991ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 தரத்தைய;ம் பெற்று 1990–1994 ஆண்டு காலப் பகுதியில் இளவாலை கொத்தணி அதிபராகவும் பணியாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1998ஆம் ஆண்டு முதல் யாழ். பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினராகவும் 2003ஆம் ஆண்டு முதல் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று சபையின் தலைவராகவும் கோப்பாய் தேசிய கல்லூரியின் ஆலோசனைச் சபை உறுப்பினராகவும் தொடர்ந்தும் பணியாற்றி வருகிறார்.

இவர் தமது குருத்துவக் கல்வியை இலங்கை – கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் இந்தியா – பூனே குருத்துவக் கல்லூரியிலும் பெற்று 1974ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார். யாழ் மறைமாவட்டத்தில் தமது கல்விப் பணியோடு கிளிநொச்சி, வலைப்பாடு, மாரீசன்கூடல், இளவாலை ஆகிய பங்குகளில் பங்குப் பணிகளையும் மேற்கொண்டார்.

இளவாலை மறைக்கோட்டத்தின் முதல்வராக 1994ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை பணியாற்றிய இவர் அதே காலப் பகுதியில் யாழ் மறைமாவட்ட கவுன்சில் அங்கத்தவராகவும் பணியாற்றியுள்ளார். யாழ் மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவில் பணியாற்றிய இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 1999ஆம் ஆண்டு தமது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடினார்.

## அருட்பணி கிருபாகரன் ......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் சென்ற அருட்பணி. கிருபானந்தன் அவர்கள் 14.01.1956ஆம் ஆண்டு பிறந்தார். 28.07.1983ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். புதிய குருவான இவர் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்குத் தந்தையாக நியமனம் பெற்றார். பின்னர் நெடுந்தீவுப் பங்குத் தந்தையாக சில ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமனம் பெற்று அங்கு அவர் மெய்யியல் கற்பித்தார். பின்னர் தனது உயர் கல்வியை மேற்கொள்ள பெல்ஜியம் நாட்டிற்குப் பயணமானார். நாடு திரும்பியவுடன் மீண்டும் யாழ். உயர் குருத்துவக் கல்லூரியில் தனது விரிவுரையாளர் பணியைத் தொடர்ந்தார்.

தனது எழுத்தாற்றலைப் பயன்படுத்தி அனைவருக்கும் பொதுவான ஒரு மறைக்கல்வி நூலைத் தமிழில் எழுதினார். கத்தோலிக்க விசுவாசத்தின் கேள்வி பதில்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்திருந்தது. இறுதியாக அவர் வெளியிட்ட நூல், '*திருச்சபை வரலாற்றுத் துளிகள்*' என்பதாகும். இந்நூல் திருச்சபையின் வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் பொருட்கள் பற்றிய விளக்கங்களை வழங்கும் கிறிஸ்தவக் கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. அவ்வப்போது அவர் கத்தோலிக்க ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும், கத்தோலிக்க தமிழ் பத்திரிகைகளுக்கும் எழுதி வந்தார்.

சிறந்த மனிதாபிமானியாகவும், அனைவருடனும் நட்புடன் பழகுபவராகவும் இவர் இருந்தார். பல ஆண்டுகள் நோய்வாய்ப்பட்ட நிலையில் இவர் இருந்தாலும் தன்னுடைய அன்பான அணுகுமுறையால் இவர் அனைவரையும் கவர்ந்திருந்தார்.

இவரின் பிரிவால் துயருறும் யாழ் மறைமாவட்டத்திற்கும் அன்னாரின் குடும்பத்திற்கும் மன்னா அன்பு நெஞ்சங்களின் சார்பாக எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து நிற்கின்றோம். அடிகளாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாறுவதாக!

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### கவியொன்று புனைகின்றேன் கலங்கிய கண்களோடு!

கிழக்கு வெளுக்கின்ற வேளையிலே
துவக்கு வேட்டொலிகள் கேட்கிறது
எனக்குச் சொந்தமெல்லாம் வன்னியிலே
இலக்கு இவர்கள்தானோ தெரியவில்லை.

பீரங்கிக் குண்டுகள்தான் பீறிட்டு போகுதங்கே
யாரங்கே இரையானார் எதுவும் தெரியவில்லை
நீரங்கிருந்துகொண்டு நீள்மூச்சு விடுகையிலே
பாரங் கனக்குதையா பாவி என் நெஞ்சினிலே.

கட்டுக்கரைக் குளம்தான் இடையில் இருக்கிறது
சுட்டுச் சரமாடும் போர்க்களமாய் அதினின்று
மொட்டுக் கருகியதோ முல்லைக்கொடி அறுந்ததுவோ
கெட்டுக் குட்டிச் சுவராகியதே எம் வாழ்வு.

இக்கரையில் நாமிருந்து இவ்விதமாய் எண்ணுகின்றோம்
அக்கரையில் நடப்பவைகள் புரியாது புலம்புகின்றோம்.
அக்கறையோடங்குவர அனுமதியோ கிடைக்கவில்லை
நிர்க்கதியாய் நீங்களல்ல – நாங்களுந்தான் வாழுகின்றோம்.

செபியுங்கள் எல்லோரும் செபமொன்றே விடிவுதரும்
குவியுங்கள் கரங்களையே வேட்டுக்கு முடிவுவரும்
புவியெங்கும் புயலோய்ந்து அமைதி திரும்பட்டும்!
கவியொன்று புனைகின்றேன் கலங்கிய கண்களோடு!

*ஏ. டி. தேவதாசன் அல்மேடா, முருங்கன்.*

தொடர் கட்டுரை – அங்கம் 56

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்

19. பேசாலைப் பாரம்பரிய உடக்காலான திருப்பாடுகளின் காட்சி



- ச. அந்தோனி மிராண்டா, பேசாலை

### புத்தாயிரமாமாண்டில் புத்துணர்வு

புத்தாயிரமாமாண்டில், உறங்கு நிலையில் இருந்த எம்மவரின் கலை உணர்வு விளிப்படையத் தொடங்கியது. அயற் கிராமங்களில் நடந்தேறிய நாடகங்கள் 'ஆள் பாஸ்' போன்றவை நம்மவரின் கலைத்திறமையை எடைபோடுவதுபோல பேசப்பட்டது.

சுறுசுறுப்பாக இயங்கிய கலைஞர்கள் பங்குனி மாதம் 6ஆம் 7ஆம், திகதிகளில் இரண்டு இரா புனித ஸ்நாபக அருளப்பர் நாடகத்தைச் சிறப்பாக அரங்கேற்றினார்கள். அதைத் தொடர்ந்து பேசாலை பாரம்பரியக் கலைச்செறிவு மிக்க, 'உடக்குப் பாஸ்' மீண்டும் காட்டப்படவேண்டும் என்ற ஏகோபித்த குரல் மக்களிடம் இருந்து எழுந்தது. இளைஞர்கள் மிகவும் ஆர்வத்துடன் இவ்வேண்டுகோளை விடுத்தனர். 17 வருடங்களாக இக்காட்சி இடம்பெறாமையினால் பொம்மை பாஸ் காட்சி என்றால் என்ன? எப்படியிருக்கும்? என்று தெரியாத பலர் இருக்கின்றார்கள். எனவே இருக்கக்கூடிய கலைஞர்களைக் கொண்டு காட்டப்படவேண்டும் என ஆதங்கப்பட்டனர்.

ஆனால், இவ்வேண்டுகோளை ஏற்றுக்-கொள்வதில் பின்வரும் காரணங்களினால் தயக்கம் காணப்பட்டது.

அ. பாஸ் மண்டபம் பாழடைந்து உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

ஆ. உடக்குப் பாஸ் காட்டுவதற்குப் பயன்படும் பொருட்கள் பல பழுதடைந்தும் காணாமலும் போயிருந்தன.

இ. இப்பாஸ் மண்டபத்தை திருத்துவதென்றால் ஏராளமான பணம் வேண்டியிருந்தது. அப்பணத்தை கோவில் பொது நிதியிலிருந்து பெறக்கூடியதாயிருக்கவில்லை.

ஈ. இப்பாஸ் மண்டபம் திருத்தப்பட்டாலும், காட்சியைப் பார்க்கவரும் பெருந்திரளான சனத்தை அடக்கக்கூடியதாக பாஸ்மண்டப முன்றல் தடையாக இருந்தன.

இதுபோன்ற வேறு சில காரணங்கள், இம் முயற்சியை ஆரம்பிப்பதற்கு தடையாக இருந்தன.

1996ஆம் ஆண்டு தொடக்கம், பாரம்பரிய கலைச்சொத்தான இப்பாஸ் மண்டபம் திருத்தப்படவேண்டும் என்று பலராலும் கேட்டுக்கொள்ளப்பட்டது. கலாச்சார அமைச்சின் நிதியுதவியை இத்திருத்த வேலைக்குப் பெற்றுக்கொள்ளமுடியுமென்று பழுதாயிருக்கும் இப்பாஸ் மண்டபத்தை நேரில் பார்த்த வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலர் திரு. வி. கி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்ததை அடுத்து அப்போது பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு. P. யேசுராஜா அவர்களும், பத்திமா மத்திய மகாவித்தியாலய அதிபராக இருந்த திரு. எஸ். ஏ. மிராண்டா (இக்கட்டுரையின் ஆசிரியர்) அவர்களும் இம்முயற்சியில் ஈடுபட்டார்கள். இம் மண்டபத் திருத்தத்திற்கான நிதியுதவிகோரி பல கடிதங்கள் அனுப்பப்பட்டன. மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் எமது கோரிக்கையை ஆதரித்து சிபாரிசு செய்து எமது கடிதங்களுக்கு இணைக்கடிதங்கள் எழுதினார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் திரு. சுந்தரம் திவகலாலா அவர்களும் இப்பாஸ் மண்டபத்தை நேரில் பார்வையிட்டார். 3 வருடங்கள் எடுத்த அயராத முயற்சியின் பயனாக 2000ஆம் ஆண்டு சித்திரை மாதம் 14ஆம் நாள் சகல ஆயத்தங்களையும் செய்து உடக்குப் பாஸ் காட்டுவதற்கு இருந்த அதே 14ஆம் திகதியன்று கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலர் திரு. ஆர். கே. எச். எம். பெனாண்டோ அவர்களிடமிருந்து மன்னார் ஆயர் ஊடாக பாஸ் மண்டபம் திருத்துவதற்கு என்று ரூபா ஒரு இலட்சம் கிடைக்கப்பெற்றோம்.

இப்பணம் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து இப்பாஸ் மண்டபம் திருப்பாடுகளின் காட்சியைக் காட்டுவதற்கு பொருத்தமான இட வசதியைக் கொண்டிராவிட்டாலும்கூட வெவ்வேறு கலாச்சார நிகழ்வுகளுக்குப் பயன்படும் வகையில், கிடைத்த நிதிக்கேற்ப, சிறிய திருத்தங்களை ஆலய சபையின் செயற்குழுவினர் மேற்கொண்டு வந்தனர். *(தொடரும்...)*

## சிறுகதை

### வாழ்விற்கான தேடல்

ஆ.மேரி இமாக்குளேற்
(மன்/நானாட்டான் ம.வி.),
வஞ்சியன்குளம்.



கோயில் மணி ஓசை கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள் சுசிலா. பரபரப்பாகத் தன் காலை வேலைகளையெல்லாம் முடித்தாள். தன் இரு குழந்தைகளும் பாடசாலை செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டு தன் சின்ன மகளை பாலர் பாடசாலைக்கு அழைத்துச் செல்ல புறப்பட்டாள்.

சின்ன மகளை அழைத்துக்கொண்டு பாலர் பாடசாலை வாயிலில் விட்டுவிட்டுத் திரும்பினாள். வந்தவள் சட்டென இடையில் நின்றுவிட்டாள். தூரத்தில் இரண்டு அருட்சகோதரிகள் பாடசாலை வரும் சிறுவர்களோடு அன்பாகப்பேசி மகிழ்ச்சிப்படுத்தி, மகிழ்வோடு அவர்களை பள்ளிக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர்.

அந்த அருட்சகோதரிகளின் சந்தோசமான வாழ்வை, அவர்களின் அன்பான பணியை நினைத்தவாறு அவர்களையே பார்த்துக்கொண்டு தன்னை மறந்து அப்படியே நின்றாள் சுசிலா. சுழல் காற்றுப்போல் சுசிலாவிற்கு தன் பழைய நினைவுகள் சுழன்றடித்தன.

சுசிலா ஒரு ஏழைக் குடும்பப் பெண். அவளுக்கு தன் வீட்டிலே நிம்மதி இல்லை. இதனால் வெறுப்புக்கொண்ட சுசிலா தான் ஒரு துறவியாக வரவேண்டும் என்ற ஆசையை வளர்த்தாள். "என்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணம் செய்து, என்னுடைய குடும்பம்போல் குழப்பத்தில் உள்ள குடும்பங்களை மாற்றியமைத்து நல்வழிப்படுத்தவேண்டும், இதுவே எனது இலட்சியம்" என முடிவுசெய்தாள். இந்த ஆசை அவளுடன் சேர்ந்து வளர்ந்து ஒரு பேராசையாக மாறியது. நாளாந்தம் ஆலயம் சென்று தன் அழைத்தலுக்காகச் செபிப்பாள். இவ்வாறே நாட்கள் நகர்ந்தன.

படிப்பில் வல்லவளாக இருந்தாள். எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவாள். சுசிலா எந்தத் தடையுமின்றி தன் கல்வியை தொடர்ந்துகொண்டு போய் இறுதிக்கட்டத்தில் நின்றாள். அதாவது உயர்தரம் படித்துமுடித்தாள். இப்போது அவளுக்கு ஒரே சந்தோஷம்! "நான் இன்னும் இரண்டு வருடங்களில் என் நிலையான வாழ்வைத் தொடங்கப் போகின்றேன்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

இவ்வாறு சந்தோஷமாக வாழ்ந்த சுசிலாவின் வாழ்வில் ஒரு பூகம்பம் வெடித்தது. சுசிலாவின் பணிவான பேச்சும், பண்பான நடையும், அழகிய நீண்ட கூந்தலும் அவளுடைய அழகுக்கு இன்னும் அழகு சேர்த்தது.

ஒருநாள் அவள் வீதியில் தனியே போய்க்கொண்டிருந்தாள். எதிரே வந்த சுரேஸ் சுசிலாமீது தன் பார்வையைத் திருப்பினான். அவளுடன் கதைக்க வேண்டும் என ஆசை கொண்டான். நெடுநாட்கள் முயற்சி செய்து இறுதியில் வெற்றிபெற்றான்.

சுசிலாவும் தன் நண்பனாக, சகோதரனாக அவனை நினைத்து அவனுடன் நட்புக் கொண்டாள்.

சுசிலாவிற்கு ஆண் சகோதரர்கள் இல்லாமையால் அவள் அவனை அண்ணனாக ஏற்றுக்கொண்டாள். ஆனால் சுரேஸ் அந்த அன்பைக் காதலாக மாற்றி சுசிலாவைத் தன் காதல் வலைக்குள் அகப்பட வைத்துவிட்டான். சுசிலா எவ்வளவோ சொல்லித் தன் நிலையை அவனுக்குப் புரியவைத்தும் அவன் புரிந்து கொள்ளவில்லை. சுசிலாவால் இப்பிரச்சினையை மேற்கொள்ள முடியவில்லை.

இறுதியில் சுசிலா தன்னை மறந்தாள், தன் இலட்சியப் பாதையை மறந்தாள், தன் குடும்பத்தை மறந்தாள், மொத்தத்தில் தான் என்ன செய்கிறேன் என்பதையே மறந்தவளாய் மாறினாள். சுரேசுக்காக வாழ ஆரம்பித்தாள். சுரேஸ் இன்பக்கடலில் மூழ்கினான்.

சுசிலாவிற்கோ ஒரே யோசனை! நான் எதற்காகப் படித்தேன்? ஏன் இப்படிச் செய்தேன்? கேள்விக்கு மேல் கேள்வியைத் தனக்குள் கேட்டாள். தன் வாழ்வையே கேள்விக் குறியாக மாற்றினாள்.

நாட்கள் ஓடின! சுசிலா படித்து ஒரு சிறு வேலை தேடிக்கொண்டாள். சுரேசின் விருப்பப்படி திருமணம் நடைபெற்றது. சில காலம் சந்தோசமாக இந்த இளங்குடும்பம் வாழ்ந்தது. சில நாட்களின்பின் சுரேஸ் குடிகாரனாக மாறி அவன் குடும்பத்தையே சீர்குலைய வைத்தான். இதனால் மனம் உடைந்த சுசிலா தன் பழைய நினைவலையில் மூழ்கி தன்னுடைய பழைய வாழ்வு எங்கே? எனத் தேடுகின்றாள்.

திடீரென 'அம்மா' என்ற குரல் கேட்ட சுசிலா திரும்பிப் பார்த்தாள். தன் மூத்த மகள் பாடசாலையில் இருந்து வந்திருந்தாள்.

சுசிலாவின் சிந்தனை கலைந்துவிட்டது. குடிகாரர் குடும்பங்களை திருத்துவதற்காக தன்னையே அர்ப்பணம் செய்ய எண்ணிய சுசிலா இன்று குடிகாரர் குடும்பத்திலே வாழ்க்கை நடத்துகின்றாள்.

## துளிப்பா



**நட்பு**
நானிலம் செழித்து
நல்லவனாய் வாழ
நண்பர்கள் தரும் பரிசு.

**அன்பு**
அலைமோதும் மனதிற்கு
அச்சாணியாய் நிலைத்திருக்கும்
அசையாத ஆணிவேர்.

**சிரிப்பு**
காலமெல்லாம் களிப்புடன் வாழ
இறைவன் அளித்த வரம்.

**நினைப்பு**
நித்திரையின்போது
நிகழ்கால நிஜங்களை
நினைத்துப் பார்ப்பது.

**பண்பு**
பரபரப்பான உலகத்தில்
பாதுகாக்கப்பட வேண்டியது.

**தப்பு**
தான் செய்த பிழையை
அடுத்தவன்மேல் சுமத்துவது.

**அரவணைப்பு**
ஆறுதலற்று அழுது வடிக்கும்போது
அன்பாக நாலுபேர் தரும்
அருள்மிக்க பிணைப்பு.

**கண்டிப்பு**
காலமெல்லாம் கண்ணியமாய் வாழ
கனவான்கள் போடும் கடிவாளம்.

**வாய்ப்பு**
வரப்போகும் உலகை ஆள
வாய்மையுள்ளோர்க்கு
வழங்கப்படும் சந்தர்ப்பம்.

**மன்னிப்பு**
மாறிவரும் உலகினை
மாற்றியமைத்திட
மானிடருக்கு இருக்கவேண்டியது.

**தவிப்பு**
தாங்கமுடியாத வேளையிலும்
தன்னாலியன்ற பணிசெய்ய
தாகத்தோடு இருப்பது.

**அழைப்பு**
ஆண்டவரின் அருள்நெறியை
அனைவருக்கும் எடுத்துகூற
அவர் கொடுக்கும் குரல்.


அ. யஸ்மின் சறோன்
ஆவணம், நானாட்டான்.

இறைவார்த்தை ஆண்டுச் சிறப்புக் கட்டுரை

# திருவிவிலியத்தை வாசிக்க முன்!

## திருவிவிலியத்தை வாசிக்க முன் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய அடிப்படை விடயங்கள்

அருட்பணியாளர்
அ. பிலிப் (I.V. Dei)



### 01. விவிலியம் - பொருள் விளக்கம்

தொடக்கத்திலே மனிதன் எழுத்துக்களைக் களிமண் பலகைகளிலும் மிருகங்களின் தோலிலும் ஆணி கொண்டு எழுதினான். பின் நதிக்கரையோரங்களில் காணப்பட்ட ஓங்கி வளர்ந்த புற்களின் அகன்ற இலைகளைப் பயன்படுத்தினான். இந்தப் புற்களின் பெயர் "பப்பீரஸ்" என்பதாகும். பழங்காலத் தமிழன் பனை ஓலைகளை ஏடுகளாகப் பயன்படுத்தியது போன்றுதான் பபிலோனிலும் எகிப்திலும் ஆதிமனிதர்கள் பப்பீரஸ் இலைகளை எழுதுவதற்குப் பயன்படுத்தினர்.

வாய் மொழியாகவும், மரபுவழியாகவும் இருந்து வந்த திருவிவிலியத்தின் (பழைய ஏற்பாட்டின்) பல பகுதிகளை எழுதுவதற்கு "பப்பீரஸ்" என்ற புல்லைத்தான் பயன்படுத்தினர். நாளடைவில் பப்பீரஸ் என்ற சொல் வேதாகமத்தைக் குறிக்கும் சொல்லாக மாறியது. பப்பீரஸ் என்ற சொல்லில் இருந்துதான் பீப்ளோஸ் என்ற கிரேக்கச் சொல் பிறந்தது. இச்சொல்லுக்கு "நூல்கள்" என்று பொருள் கொள்ளப்பட்டது. "பீப்ளோஸ்" என்ற சொல்லில் இருந்து "பைபிள்" என்ற ஆங்கிலச் சொல் பிறந்தது. பைபிள் என்ற சொல்லில் இருந்துதான். "விவிலியம்" என்னும் தமிழ்ச் சொல் வந்தது. எனவே விவிலியம் என்ற சொல்லுக்கு நூல்(கள்) என்ற பொருள் உண்டு. திருவிவிலியத்தை இறைவார்த்தை என்றும், வேதாகமம் என்றும் திருநூல், மறைநூல் என்றும் பல்வேறு பெயர்கொண்டு அழைக்கின்றோம்.

வேதாகமம் என்ற சொல் (வேதம்+ஆகமம்) என்று பிரிக்கப்படும். வேதம் என்பது மறை என்றும், ஆகமம் என்பது தொகுப்பு என்றும் பொருள்படுவதால் அச்சொல் *மறைத் தொகுப்பு* என்ற பொருளை விளக்குகின்றது. யூத மறையிலிருந்து பெறப்பெற்ற இவ்விளக்கம் பழைய ஏற்பாட்டு நூல்களுக்கு ஆகமம் என்று கொடுக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு "ஆகமம்" என்ற சொல் வழங்கப்படாவிட்டாலும் அவையும் ***மறையின் தொகுப்புகள்*** என்று பொருள்படும். இறைவனை மையமாகக்கொண்டிருக்கும் இந்த நூல் இறைமனித உறவை வெளிப்படுத்தும் நூலாகவும் விளங்குகின்றது. எனவே இது மறைநூல் என்றும் அழைக்கப்படுகின்றது. எப்பெயர் கொண்டு நாம் அதை அழைத்தாலும் அதன் பொருள் ஒன்றே.

### 02. திருவிவிலியத்தின் பிரிவுகள்

திருவிவிலியத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அப்பிரிவுகளை பழைய ஏற்பாடு (பழைய உடன்படிக்கை) என்றும், புதிய ஏற்பாடு (புதிய உடன்படிக்கை) என்றும் அழைக்கின்றோம். உடன்படிக்கை அல்லது ஏற்பாடு என்ற சொல் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஏற்பட்ட பிணைப்பையும் உறுதியையும் எடுத்துக் காட்டுகின்றது. பழைய ஏற்பாட்டிலே 46 நூல்களும் புதிய ஏற்பாட்டிலே 27 நூல்களும் மொத்தமாகச் சேர்த்து முழுத் திருவிவிலியத்திலும் 73 நூல்கள் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டின் 46 நூல்களும், திருச்சட்டம், இறைவாக்கினர், வரலாறு, ஞானநூல்கள் என்று நான்கு பகுதிகளாகவும், புதிய ஏற்பாட்டின் 27 நூல்களும் நற்செய்தி, வரலாறு, திருமுகங்கள், திருவெளிப்பாடு என்று நான்கு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. திருவிவிலியத்தின் 73 நூல்களும் ஒரே மாதிரியான நூல்களல்ல. ஒவ்வொரு பிரிவுக்கும் பகுதிக்கும் சிறப்பு அம்சங்கள் உண்டு. எனவே திருவிவிலியத்தின் ஒரு நூலை நாம் படிக்கும்போது அது எப்பகுதியைச் சார்ந்த நூல் என்று தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். நாம் படிக்கின்ற நூலின் வழியாக ஆசிரியர் கூறவந்த செய்தியினையும் இறைவன் நம்மோடு பேசுகின்ற விதத்தினையும் அறிந்துகொள்ளலாம்.

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து (தொடக்க நூல், விடுதலைப் பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம் ஆகியவற்றை *சட்ட நூல்கள்* என்று அழைக்கின்றோம். சட்டம் என்ற சொல்லுக்குக் கோட்பாடு, போதகம், கல்வி புகட்டுதல், வழி என்று பல பொருள் உண்டு. இது மோயீசின் சட்டம் என்றுதான் அழைக்கப்பட்டது.

யோசுவா, நீதித்தலைவர்கள், ருத்து, அரசர்கள், குறிப்பேடு, எஸ்ரா, தோபித்து, யூத்து, எஸ்தர் ஆகிய நூல்களை வரலாற்று நூல்கள் என்று அழைக்கின்றோம். யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம் ஆகிய நூல்களை ஞான நூல்கள் அல்லது கவிதை என்று அழைக்கின்றோம்..

இறைவாக்கினர் நூல்களை பெரிய இறைவாக்கினர் என்றும், சிறிய இறைவாக்கினர் என்றும் இரு பிரிவுகளாக அழைக்கின்றோம். எசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகிய நூல்களை பெரிய இறைவாக்கினர் என்கின்றோம். இந்த நூல்களில் அதிகம் எழுதப்பட்டிருப்பதால் (உதாரணம் : எசாயா 66 அத்தியாயங்கள்) அவை பெரிய இறைவாக்கினர் என அழைக்கப்படுகின்றன. ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபக்கூக், செப்பனியா, ஆகாய், செக்கரியா, பாருக்கு, ஆகிய நூல்களில் குறைவாக எழுதப்பட்டிருப்பதால் அவை *சிறிய இறைவாக்கினர்* என அழைக்கப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டின் நான்கு (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) நற்செய்தி ஏடுகளும், "நற்செய்தி" என்றும், திருத்தூதர் பணி, வரலாற்று நூலெனவும், உரோமர், கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர், தெசலோனிக்கர், திமொத்தேயு, தீத்து, பிலமோன், எபிரேயர், பேதுரு, யோவான், யாக்கோபு, யூதா ஆகிய நூல்கள் திருமுகங்களெனவும் திருவெளிப்பாடு நூல் திருவெளிப்பாடு எனவும் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

### 03. விவிலியம் எழுதப்பட்ட கால எல்லை

திருவிவிலியம் ஆதாமோடு ஆரம்பமாகின்றது. ஆதாம் முதல் மனிதன் எனத் திருவிவிலியம் குறிப்பிடும்போது வேறு யாரும் ஆதாமைப்பற்றி எழுதமுடியாது. மேலும் ஆதாம் எந்தக் காலத்தில் வாழ்ந்தவர் என்றும் யாருக்கும் தெரியாது. வரலாறு ஆரம்பமாவதே ஆபிரகாமோடுதான். ஆபிரகாமுக்கு முன்னதாக ஆதாம் வாழ்ந்தவராதலால் ஆதாமின் காலத்தை விவிலிய வல்லுனர்கள் வரலாற்றுக்கு முன்னதாக உள்ள காலமெனக் குறிப்பிடுகின்றனர். திருவிவிலியத்தில் 12ம் அத்தியாயத்துடன்தான் ஆபிரகாமின் வரலாறு ஆரம்பமாகின்றது. ஆபிரகாம் வாழ்ந்த காலத்தை கி.மு. 20,19 நூற்றாண்டுகளெனக் கணக்கிட்டுள்ளனர். தொடக்கநூலின் முதல் 11 அத்தியாயங்களையும் வரலாற்றுக்கு முற்பட்ட கால நிகழ்ச்சியாகவே கொள்ளவேண்டும்.

#### அ. பழைய ஏற்பாடு எழுதப்பட்ட காலம்

இஸ்ராயேல் மக்களின் வரலாறு ஆபிரகாமோடு ஆரம்பமாவதாலும் ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, யோசேப்பு என்பவர்கள் அம்மக்களின் முதுபெரும் தந்தையர்களாக (பிதாப்பிதாக்களாக) இருந்தமையாலும் அவர்களைப் பற்றிய வரலாறு இஸ்ராயேல் மக்களுக்கு மிக அவசியமானதாக இருந்தது. தங்கள் முதுபெரும் தந்தையர்களை அவர்கள் மறக்கமுடியாது. எனவே அவர்களைப்பற்றிய வரலாறு வாய்மொழியாகவே அவர்கள் சமூகத்தின் சந்ததியினருக்குத் தலைமுறை தலைமுறையாகக் கொடுக்கப்பட்டது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளுக்கும், கொடுத்துவந்த இந்தப் பாரம்பரியம் எழுத்துவடிவம் பெறுவதற்கு அதிக காலம் எடுத்தது. கி. மு. 15ம் நூற்றாண்டளவில்தான் சில முதுபெரும் தந்தையர்களின் வரலாற்றில் முக்கிய சில நிகழ்ச்சிகள் எழுத்துவடிவம் பெற்றிருக்கவேண்டும். நாம் வைத்திருக்கும் திருவிவிலியத்தின் ஐந்தாகமம் (பஞ்சாகமத் தொகுப்பு) அக்காலத்தில் இருந்ததில்லை. மோயீசன் இஸ்ராயேலின் வரலாற்றில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றார். அவர் கி.மு.13ம் நூற்றாண்டளவில்தான் வாழ்ந்தார். இவர் காலத்தில்தான் ஐந்தாகமத்தின் (பஞ்சாகமத் தொகுப்பு) – தொடக்கநூல், விடுதலைப் பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம் ஆகியவை) அத்திவாரமிடப்பட்டு அவருக்குப் பின் உள்ள காலத்தில் நூல் வடிவம் பெற்றிருக்கவேண்டும். இருந்தும் ஆபிரகாமுக்கு முற்பட்ட வரலாற்றுக்கு முன்னுள்ள காலக் குறிப்புக்கள் அதாவது ஆதாம் தொடக்கம் நோவா வரையிலான காலக் குறிப்புக்கள் முழுமையான எழுத்து வடிவம் பெற்றதாயில்லை.

தாவீது கி.மு. 10ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடிய திருப்பாடல்கள் திருப்பாடல் நூலில் காணப்பட்டாலும், அதன் தொகுப்பு அவர் காலத்தின் பின்புதான் இடம்பெற்றன. இவ்வாறுதான் இறைவாக்கினர்களின் இறைவாக்குரைகளும் அவர்களின் இறப்பின் பின்தான் இடம்பெற்றன. இவ்வாறு பகுதி பகுதியாகவும், துண்டு துண்டாகவும் முதலில் வாய்மொழியாகவும் பின் எழுத்து வடிவமும் பெற்றுள்ள பழைய ஏற்பாட்டு நூல்கள் பழைய ஏற்பாட்டின் தொகுப்பாக வந்தது கி.மு.5ம் நூற்றாண்டளவிலேதான். எனவே பழைய ஏற்பாட்டு நூல் தொகை ஒருவர் ஒரே நேரத்தில் இருந்து எழுதியதுமல்ல. அல்லது யாரும் அதை எழுதி இஸ்ராயேல் மக்கள் இப்படித்தான் வாழ வேண்டுமென்று ஒரு பரிசாகக் கொடுத்ததுமல்ல. பழைய ஏற்பாட்டின் தொகுப்பு நூல்வடிவம் பெற ஏறக்குறைய 14 நூற்றாண்டுகள் எடுத்துள்ளன.

#### ஆ. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலம்

பழைய ஏற்பாட்டைப் போன்றுதான் புதிய ஏற்பாட்டு நூல்களும் இயேசுவின் காலத்தில் எழுதப்பட்டவையல்ல. இயேசு விண்ணரசின் நற்செய்தியை வாய்மொழியாகவே போதித்தார். அவரது போதனையை மக்கள் எல்லோரும் கேட்டார்கள். விண்ணரசின் போதனைக்குரிய பொறுப்பை இயேசு தமது காலத்தின்பின் திருத்தூதர்கள் தொடர்ந்து போதிக்கப் பணித்தார். எனவே இரண்டாம் கட்டமாக திருத்தூதர்களின் போதனை இடம்பெற்றது. திருத்தூதர்கள் படிப்படியாக இறக்க ஆரம்பித்தபோது இயேசுவிடம் இருந்து பெற்றுக்கொண்ட போதனை மாறுபடாமலும் அழியாமலும் நற்செய்தியாளர்கள் அப்போதனையின் முக்கிய பகுதிகளை எழுதினார்கள். இவ்வாறு முதலாவதாக நூல் வடிவம் பெற்ற நற்செய்தி மாற்குவினுடையது. இது உரோமாபுரியில் நீரோ மன்னன் காலத்தில் வேத கலாபனையின்போது கி.பி.64ம் ஆண்டு பேதுரு, பவுல் ஆகியோர் கொல்லப்பட்டபோது எழுதப்பட்டது. எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பின் பிற்பாடு 30 ஆண்டுகள் கழித்துத்தான் முதல் நற்செய்தி எழுத்து வடிவம் பெற்றது. யோவான் எழுதிய நற்செய்தி கி.பி. 110ம் ஆண்டு எனக் கணக்கிடப்பட்டது.

மேலும் நற்செய்திகள் எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்னதாகவே புனித பவுல் கடிதங்களை எழுதியுள்ளார். புனித பவுலின் மனமாற்றத்தையடுத்து அவர் போதனைப் பயணங்களை மேற்கொண்டார். அவர் நிறுவிய திருச்சபைகள் மத்தியதரைக் கடலைச் சுற்றி அமைந்திருந்தன. தெசலோனிக்கா, கொரிந்து, எபேசு, பிலிப்பாய், கலாத்தியா ஆகியவை அவற்றுள் சில. தெசலோனிக்கேயருக்கு அவர் எழுதிய முதல் திருமுகம்தான் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட முதல் நூல். இது கி.பி. 40ம் ஆண்டிலே எழுதப்பட்டது. எனவே புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கால எல்லையை கி.பி. 40 ஆண்டுகள் தொடக்கம் கி.பி. 110 ஆண்டுகள் வரை என வல்லுனர்கள் கணக்கெடுத்துள்ளனர்.

இவ்வாறு திருவிவிலியம் எழுதப்பட்ட கால எல்லையை கி.மு. 14ம்நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 110 ஆண்டுகள்வரை எனக் குறிப்பிடலாம். இஸ்ராயேல் மக்களினதும், தொடக்கக கிறிஸ்தவர்களினதும் பண்பாடு, சிந்தனைப் போக்கு, சமுதாய அமைப்பு என்பவைகளுக்கேற்ப வெவ்வேறு காலங்களிலே வெவ்வேறு ஆசிரியர்களினால் திருவிவிலியம் எழுதப்பட்டிருப்பதால், ஒரே காலத்தில் ஒரு மனித ஆசிரியரால் இது எழுதப்பட்டது என எண்ணுவது தவறு.

### 04. திருவிவிலியத்தின் ஆசிரியர்கள்

#### அ. நூலும் ஆசிரியனும்

நூலகங்களைச் சந்தித்தால், அங்கே ஆயிரக்கணக்கிலே நூல்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம். ஒரு நூலை எடுத்ததும் அது எதைப்பற்றிக் கூறுகின்றது என அதன் தலையங்கத்தைப் பார்க்கின்றோம். அடுத்தது அந்த நூலை யார் எழுதியுள்ளார் என அறிந்துகொள்கின்றோம். ஒவ்வொரு நூலுக்கும் அதை எழுதிய ஆசிரியன் ஒருவன் இருந்தேயாக வேண்டும். நூல் ஆசிரியனின் படைப்பு. ஒரு ஆசிரியன் பல நூல்களை எழுதியிருக்கலாம். அதேவேளை பல ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்தும் ஒரு நூலை எழுதியிருக்கலாம். எழுதப்பட்ட நூலிலே ஆசிரியனின் கற்பனை, அறிவு, ஆள்தன்மை, அனுபவங்கள் எல்லாம் நிறைந்து கிடப்பதைக் காணலாம். ஒரு ஆசிரியனைக் கொண்டு அவன் எழுதிய நூலை அறிந்துகொண்டு அதன் ஆசிரியனை அறிந்துகொள்ளலாம்.

திருவிவிலியத்தை எடுத்துக்கொண்டால், அதன் ஆசிரியர் யார், என்ற வினா எழுகின்றது. திருவிவிலியத்தை எழுதியது இறைவன் என்று நாம் கூறும்போது, இறைவன் எப்படி மனித மொழிகளில் அதை எழுத முடியும்? அவர்தான் இன, மத, மொழி, காலங்களுக்கு அப்பாற்பட்டவராக இருக்கின்றாரே! அதை மனிதர்கள்தான் எழுதினார்கள் என்றால், பின் ஏன்தான் அதை இறைவார்த்தை என்று கூறவேண்டும்? மனிதனே அதை எழுதியதாகக் கொண்டால் மனிதன் எழுதிய நூல்கள் எல்லாம் மனித வார்த்தை என்றல்லவா கணக்கிடப்படவேண்டும். மனிதனும் இறைவனும் இணைந்து எழுதினார்கள் என்றால், ஏன் நாம் வாழும் இக்காலத்தில் அப்படியான கூட்டுமுயற்சி இடம்பெறுவதில்லை? இவ்வாறாக திருவிவிலியத்தையும் அதன் ஆசிரியரையும் பற்றி நாம் பல்வேறு வினாக்களை விடை காணமுடியாத அளவுக்கு அடுக்கிக்கொண்டே செல்லலாம். அவ்வாறாயின் திருவிவிலியத்தின் ஆசிரியர் யார் என்ற வினாவும் விடையின்றியே இருந்துவிடும்.

#### ஆ. விவிலிய ஆசிரியர்கள் மனிதர்களே

திருவிவிலியம் 73 நூல்களைக் கொண்ட ஒரு நூலகம். எல்லா நூல்களையும் சேர்த்து அது ஒரு நூலாக இருந்தபோதிலும், ஒவ்வொரு நூலும், தனித்தன்மை வாய்ந்தவையாகவும் குறிப்பிட்ட சிறப்பான இலக்கியப் பண்புகள் நிறைந்தவையாகவும் இருக்கின்றது. இதனாலேதான் திருச்சட்டம், இறைவாக்கினர், வரலாறு, கவிதை நூல்கள் என்று பழைய ஏற்பாடும், நற்செய்தி ஏடுகள், வரலாறு, திருமுகங்கள், திருவெளிப்பாடு என்று புதிய ஏற்பாடும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் மேலும் சிறிது சிறிதாக பிரிக்கப்படும்போது தனி நூல்கள் தம் சிறப்புத் தன்மையைக் காட்டுகின்றன.

திருவிவிலியம் எழுத்து வடிவம் பெற 1500 ஆண்டுகள் எடுத்திருக்கின்றன். மோயீசன் காலத்திலேதான் பழைய ஏற்பாடு எழுத ஆரம்பிக்கப்பட்டது. அவர் கி.மு. 1300 ஆண்டளவிலேதான் வாழ்ந்தவர். முதுபெரும் தந்தையர் (பிதாப்பிதாக்கள்) பற்றிய வரலாறும் அவர்களுடைய விசுவாச வாழ்வும் வாய் மொழியாக இருந்து எழுத்து வடிவம் பெற்றது இவரது காலத்திலேதான். மோயீசனைப்பற்றிய குறிப்புகள் அவர் காலத்தின் பின்புதான் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

புதிய ஏற்பாடு எழுத்து வடிவம்பெற்று முடிந்த காலப்பகுதி கி.பி. 2ம் நூற்றாண்டில் முற்பகுதியென விவிலிய வல்லுனர்கள் சொல்லுகின்றார்கள். அவ்வாறாயின் திருவிவிலியம் மனித எழுத்துக்களில் எழுதப்பட 1500 ஆண்டுகள் எடுத்திருக்கின்றன. ஒரு ஆசிரியர் தனிப்பட இக்கால எல்லையில் இந்த நூல்களை எழுதியிருக்க முடியாது. பல மனித ஆசிரியர்களே அவற்றை எழுதியிருக்க வேண்டும்.

மேலும் திருவிவிலியத்தின் கதை, கவிதை, உரை நடைகள், காவியம் போன்ற வெவ்வேறு இலக்கியப் பண்புகள் இருப்பதாலும் வெவ்வேறு சூழ்நிலைகளில் (உ+ம்) அரசர்கள், ஆட்சி, அடிமைத்தனம் போன்ற சூழ்நிலைகளில் அவை எழுதப்பட்டதாலும், எபிரேயம், கிரேக்கம் போன்ற மொழிகளிலே அவை முதன் முதல் எழுதப்பட்டாலும் நிச்சயமாக திருவிவிலியத்திற்குப் பல மனித ஆசிரியர்கள் இருந்திருக்க வேண்டும்.

(அடுத்த பக்கம் பார்க்க...)

# திருவிவிலியத்தை வாசிக்க முன்!

(9ம் பக்கத் தொடர்ச்சி...)



### இ) விவிலிய ஆசிரியன் இறைவனே

திருவிவிலியத்திற்கு எத்தனை மனித ஆசிரியர்கள் இருந்த போதிலும் இணையற்ற தனிப்பட்ட ஆசிரியர் இறைவன் ஒருவரே. மனித ஆசிரியர்கள் திருவிவிலியத்தின் பல நூல்களை வெவ்வேறு காலத்திலும் வெவ்வேறு சூழ்நிலைகளிலும் எழுதினார்கள். என்பதோடு மட்டும் நின்றுவிடாது இது ஒரு தெய்வீக நூல் என்பதால் இறைவன் சார்பாகவே இவற்றை எழுதினார்கள் என்று, இறைவன் சார்பாகவும் இவற்றை நோக்க வேண்டும்.

மனித ஆசிரியர்கள் திருவிவிலியத்தின் பல நூல்களை எழுதியது இறையூக்கத்தினாலேயே அன்றி, தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்காக அல்ல. திருவிவிலியம் மனிதனின் படைப்பு மட்டும்தான் என்று கணித்தால் அதற்கு எந்தவொரு மரியாதையும் மதிப்பும் இல்லை. ஆனால் இறைவனே அதன் மூல கர்த்தாவாக இருப்பதால், இறைவன் விரும்பியதையே மனிதர்கள் எழுதினார்கள். திருவிவிலியம் இறைவனின் படைப்பு என்று விளங்கிக்கொள்ளும்போதுதான் அதன் சிறப்பு மிகவும் பெருமை மிக்கதாயும், இறையாற்றல் உள்ளதாயும் இருக்கின்றது. வேதாகமத்தின் எல்லா நூல்களும் 'மீட்பு' என்ற மையப் பொருளைக்கொண்டு, ஒன்றுசேர்க்கப்பட்டிருப்பதால் அதை ஒரு நூலாகவும் ஒரே ஆசிரியராகவும் கணிக்கவும் வேண்டும்.

இறைவன் மனித ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தி அவர்கள் விருப்பத்துக்கு மாறாக அவர்களை வற்புறுத்தி திருவிவிலியத்தை எழுதுவிக்கவில்லை. மனிதனின் சுதந்திரத்தில் எள்ளளவும் தலையிடாது மனித ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன்தான் திருவிவிலியத்தை எழுதினார். இறைவனுடைய வார்த்தையை விவிலிய ஆசிரியர்கள் எழுத்தில் வடித்தார்கள். எபிரேய, கிரேக்க பண்பாடு, மொழி, கலாச்சாரம், வாழ்க்கை முறை, சிந்தனைத்திறன் என்பவற்றுக்கேற்ப, இறைவன் எந்தச் செய்தியை கொடுக்க விரும்பினாரோ அதையே எழுதினார்கள். இறைவனின் செய்தி 'மீட்பு' என்று அமைந்திருந்ததால், மனித மீட்புப் பற்றிய இறைவனின் செய்தி மாறுபடாத ஒன்றாகும்.

மனிதன் காலத்திலே வாழ்பவன். எனவே அவனுக்கு வரலாறு உண்டு. இறைவனோ காலங்களுக்கு அப்பாற்பட்டவர். எனவே அவருக்கு வரலாறு இல்லை. வரலாற்றில் உள்ள மனிதன் இறைவெளிப்பாட்டைப் படிப்படியாகவே தெரிந்துகொள்கின்றான். எனவே மனித எழுத்துக்களில் அவற்றைப் பொறிக்கும்போதும் வெளிப்பாட்டின் வளர்ச்சி படிப்படியாக வளர்ந்து கிறிஸ்துவில் நிறைவுறுவதையும் அவதானிக்கலாம். எனவே திருவிவிலியத்திற்கு ஆசிரியர்கள் இறைவனும் மனிதனுமே.

முழுத்திருவிவிலியமும் இறைவனின் வார்த்தையென்று கூறுவதுபோல முழுத்திருவிவிலியமும் மனிதனின் ஆக்கமும் என்றும் கொள்ளவேண்டும். இம்மறையுண்மையைப் புரிந்து கொள்ளக் கிறிஸ்துவின் பிரசன்னம் நமக்கு மேலும் ஓர் உதவியாக இருக்கும். கிறிஸ்துவை இறைவன் என்போமா? அவர் இறைவன்தான். அவர் மனிதன்தான். அவர் கூடிய அளவில் இறைவனாகவும் குறைந்த அளவில் மனிதனாகவும் இருக்கின்றார் என்று சொல்ல முடியாது. எந்த அளவுக்கு அவர் இறைவனாக இருக்கின்றாரோ அந்த அளவுக்கு அவர் மனிதனாகவும் இருக்கின்றார். எந்த அளவுக்கு அவர் மனிதனாக இருக்கின்றாரோ அந்த அளவுக்கு அவர் இறைவனாகவும் இருக்கின்றார்.

திருவிவிலியத்தின் கதையும் இதுதான். எந்த அளவுக்கு இதை இறைவார்த்தை என்று சொல்லுகின்றோமோ அந்த அளவுக்கு அது மனிதனின் வார்த்தையே. எந்த அளவுக்கு இறைவன் அதன் ஆசிரியராக இருக்கின்றாரோ அந்த அளவுக்கு மனிதர்கள் அதன் ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். எந்த அளவுக்கு மனிதர்கள் அதன் ஆசிரியர்களாக இருக்கின்றார்களோ அந்த அளவுக்கு இறைவனே அதன் ஆசிரியனாக இருக்கின்றார். சுருங்கக்கூறின் திருவிவிலியத்தின் ஆசிரியத்தன்மை ஒரு மறைபொருள். இறைவனின் துணையோடுதான் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். எவ்வாறு கிறிஸ்து ஒரு மறைபொருளோ அவ்வாறே திருவிவிலியமும் ஒரு மறைபொருளே.

## 05. விவிலியத்தில் இறையூக்கம்

இறையூக்கம் என்ற சொல்லை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இறை + ஊக்கம் என்பதே அதன் பிரிவுகள். இறைவன் ஊக்குவித்தார், இறைவன் தூண்டிவிட்டார் என்பது அதன் விளக்கமாகும். எனவே இறையூக்கத்தை "இறைத்தூண்டல்" என்றும் அழைக்கலாம். திருவிவிலியம் இறைவனையும், மனிதனையும், ஆசிரியர்களாகக் கொண்ட ஒரே நூல். திருவிவிலியத்தில் சில பகுதியை இறைவனும், வேறு சில பகுதியை மனிதனும் எழுதினார்கள் என்றல்ல. மாறாக முழு வேதாகமமுமே இறைவனுடையவும் மனிதனுடையவும் படைப்பு என்று கொள்ளவேண்டும்.

திருவிவிலியம் இறைவனுடைய நூலாக அமைவதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. ஒன்று திருவிவிலியத்தின் கருத்துக்கள் இறைவனிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டன. அடுத்து கருத்துக்களை மட்டுமல்ல, அவற்றை எழுதுவதற்கு இறைவன் உதவிசெய்தார். அத்தோடு இறைவன் தன் கருத்துக்களையும் தன் உதவியையும் கொடுத்ததோடு, மனிதனுடைய உதவியையும் பெற்றுக்கொண்டார். இவ்வாறாக எழுந்த திருவிவிலியம் இறைநூலாக (மறை நூல்) நமக்குக் கிடைத்துள்ளது.

இறைவனின் ஆவி மறைநூல் ஆசிரியர்களை எழுதத் தூண்டினார், எழுதவும் செய்தார். தாம் கட்டளையிட்டவற்றை மட்டுமே அவர்கள் சரிவர உணர்ந்து, உணர்ந்தவற்றை உள்ளபடியே கூறவிரும்பி, அறிந்துகொள்ளக்கூடிய வகையில் அறிவிக்க உதவினார். இந்த இறையுதவியே "இறையூக்கமாகும்" என்று 13ம் சிங்கராயர் பாப்பரசர் கூறுகின்றார்.

எந்தச் செயல்களிலும் முதற்காரணம் துணைக்காரணம் என்று இரு காரணங்கள் இருக்கின்றன. துணைக்காரணங்கள் ஒன்றாக அல்லது பலவாக அமையலாம். நான் கடிதம் எழுதும்போது என் கடிதத்தின் முதற்காரணமாக இருப்பது நானேதான். துணைக்காரணமாக இருப்பது நான் எழுதும் பேனா, திருவிவிலியத்திலே முற்காரணமாக இருப்பது இறைவனேதான். துணைக்காரணமாக இருக்கும் மனிதன் ஒரு பொருளாகச் செயற்படாமல், அறிவு மனம் போன்ற உள்ளுணர்வுகளையும், நினைவு, கற்பனை, மொழி, பண்பாடு, போன்ற மனிதத் தன்மைகளையும் கொண்டு சுயாதீனத்தோடும், சுதந்திரத்தோடும் திருவிவிலியத்தை எழுதினான். மனிதன் கருத்துக்களை ஒன்று சேர்த்தான். இலக்கிய வகைகளையும் நடைகளையும் தெரிந்தெடுத்து எழுதுவதால் அவனும் திருவிவிலியத்தின் ஆசிரியன் ஆகின்றான். இவ்வாறு திருவிவிலியம் இரு ஆசிரியர்களைப் பெற்றுள்ளது.

### அ) பழைய ஏற்பாட்டில் இறையூக்கம்

பழைய ஏற்பாட்டிலே பல இடங்களில் இறையூக்கத்தைப் பற்றிக் காணக்கூடியதாக இருந்தாலும், சிறப்பாக இறைவாக்கினரைப் பற்றிய பகுதி இதனைக் குறிப்பாக வெளிப்படுத்துகின்றது. இறைவாக்கினர்களின் அழைப்பைப்பற்றி விபரிக்கும் பகுதிகள் இறைவன் பெயரால் அவர்கள் பேசுவதற்கு அவரால் தூண்டப்படு-வதையும், ஊக்குவிப்பதையும் உதவி செய்யப்படுவதையும், எடுத்துக் காட்டுகின்றது.

எசாயா இறைவாக்கினர் ஆலயத்தில் இறைவனின் மாட்சியைக் கண்டார். அவர் கண்ட காட்சியில் இறைவன் பரிசுத்தர் என்று கூறப்படுவதைக் கேட்டார். "ஐயோ அசுத்த உதடுகள் கொண்டு இறைவனைக் கண்டதால் இதோ அழிந்தேன்" என்றார். அப்போது வானதூதர் நெருப்புக் கொள்ளியால் அவர் உதடுகளைச் சுட்டுத் தூய்மைப்படுத்தி ஆண்டவர் பெயரால் பேசத்தூண்டப்பட்டார். (எசாயா 6:1-3) இவ்வாறே எல்லா இறைவாக்கினரின் அழைப்பிலேயும் இறைவனின் ஊக்கமும் தூண்டுதலும் இருப்பதைக் காணலாம். பேசுவதற்காக இறையூக்கம் பெற்ற இறைவாக்கினர்கள் தமது சொல்லாலும், செயலாலும், தாம் பெற்றுக்கொண்ட இறைவனின் கருத்துக்களை அவரது உதவியைக்கொண்டும் தம் சுதந்திரத்தைக்கொண்டும் இறைவாக்குரைத்தனர். இதனால் பேசுவதற்கு மட்டும் இறையூக்கம் கிடைத்தது என்று சொல்லுவதற்கில்லை. எழுதுவதற்கும் இறையூக்கம் கிடைத்துள்ளது. விடுதலைப் பயணம், இணைச்சட்டம் ஆகிய நூல்களிலே மோயீசனுக்கு எழுதி வைக்கும்படி கூறிய பகுதிகள் உண்டு. "இதை ஞாபகமாக நீ புத்தகத்தில் எழுதி யோசுவா கேட்கும்படி வாசிப்பாய்" என்று கூறியுள்ளார் (யாத் 17:14, உப 31:19).

### ஆ) புதிய ஏற்பாட்டில் இறையூக்கம்

பழைய ஏற்பாடு இறையூக்கம் பெற்றுள்ளது என்பதை புதிய ஏற்பாடு அதிகமாக எடுத்துக் கூறுகின்றது. இயேசுவும் திருத்தூதர்களும் பழைய ஏற்பாட்டில் காணக்கிடைக்கும் சொற்களையும், வாக்கியங்களையும் பல இடங்களில் பயன்படுத்துகின்றனர். இயேசு தாவீதைப் பற்றிக் குறிப்பிடும்போது "தாவீது பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு, 'நான் உம்முடைய எதிரிகளை உனது காலடியில் போடும் மட்டும் நீர் என் வலப்பக்கத்தில் அமரும்' என்று ஆண்டவர் என் ஆண்டவருக்குச் சொன்னார். (சங் 109:1) என்று குறிப்பிடுகின்றார். மேலும் இயேசுதாமே இறையூக்கம் பெற்றவர் என்பதை லூக்காஸ் பல இடங்களில் இயேசு பரிசுத்த ஆவியால் இயக்கப்படுவதைக் காட்டுகின்றார்.

"இறைவனை ஏற்றுக்கொள்பவன் நற்செயல் புரியவும் உத்தமனாவதற்கும் தேவ ஏவுதலால் எழுதப்பட்ட (எல்லா) மறைநூலின் ஆகமங்கள் அவனுக்கு போதிப்பதற்கும் கண்டித்துத் திருத்துவதற்கும், நீதி நெறியில் நடத்துவதற்கும் உதவியாய் உள்ளன" என்று புனித சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு குறிப்பிடுகின்றார் (2தீமோ. 1-16). தேவ ஏவுதலால் என்ற சொல் இறையூக்கத்தையே குறித்து நிற்பது குறிப்பிடத்தக்கது. மக்கள் வாழ்வைச் சீர்ப்படுத்த மறைநூல் பயனுடையது. தேவ ஏவுதலால் எழுதப்பட்டதால் இறையூக்கமுடையதென்றும் எழுதப்பட்டுள்ள மறைநூலுக்கு இருக்கின்ற இறையூக்கத்தைப் பற்றி பேசுகின்றார். "இறைவாக்கானது எக்காலத்திற்கும் மனிதனுடைய மனத்தினால் உண்டானது அல்ல. இறைவனின் ஆவியால் இறைவாக்கினர் ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேதுரு 1:21) என்று பேதுரு தமது கடிதத்தில் குறிப்பிடுகின்றார். இவ்விடத்தில் "இறைவாக்கு" என்று கூறப்படுவது பழைய ஏற்பாட்டின் இறைவாக்கினர் பகுதியை மட்டுமன்று முழு மறை நூலையுமே குறிக்கும் ஒரு சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைவனின் அதிகாரத்தாலும் உதவியாலும் அது பேசப்பட இறையூக்கம் பெற்றுள்ளது எனக் குறிப்பிடுகின்றார்.

புனித யோவான் தமது திருவெளிபாட்டு நூலில் தான் கண்ட காட்சி இறைவனிடம் இருந்து புறப்படுவதைக் குறிப்பிடுகின்றார். (திவெ 1:1) இறைவனிடம் இருந்து புறப்படுவது இறையூக்கம் பெற்றுள்ளது என்று கூறுவதற்குச் சமமாக இருக்கின்றது.

## 06. விவிலியத்தின் திருத்தொகை

"கனன்" என்ற கிரேக்கச் சொல்லின் தமிழாக்கமே 'திருத்தொகை' என்று அழைக்கப்படுகின்றது. 'கனன்' என்ற சொல் அளவுகோலைக் குறிக்கும். இது நாளடைவில் வேதாகம நூல்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாயிற்று. திருத்தொகை என்ற சொல்லை முதன்முதல் பயன்படுத்தியவர் 'ஒரிஜன்' என்ற திருச்சபைத் தந்தையாவார். திருத்தொகையின் அதாவது எண்ணிக்கையில் அடங்கும் வேதாகம நூல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், அவை எல்லாம் இறைவனின் அதிகாரம் கொண்டவை என்றும் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

பழைய ஏற்பாட்டில் திருத்தொகையைத் தீர்மானிக்கும் பணி (ஜெருசலேம் தரை மட்டமாக்கப்படுமுன்) கி.மு. 586ம் ஆண்டுக்கு முன்னதாகவே தொடங்கப்பட்டிருக்க வேண்டும். முதலில் பழைய ஏற்பாட்டு நூல்கள் சட்ட நூல்களுக்கொன்றும், இறைவாக்கினர்-களுக்கொன்றும், பரிசுத்த ஆகமங்களுக்கொன்றும் மூன்று திருத் தொகையாகக்கப்பட்டது. ஜெருசலேம் தரை மட்டமாக்கப்பட்டபோது மக்கள் இதை திட்டவட்டமாக ஏற்றுக்கொண்டனர். புதிய ஏற்பாட்டுக்கென தனியான ஒரு திருத்தொகை ஏற்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு நூலாகப் பழைய ஏற்பாட்டு நூல்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. புதிய ஏற்பாட்டின் நூல்தொகை அப்போஸ்தலரின் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட நூல்களின் தொகுப்பாகவே பழைய ஏற்பாட்டு நூல் தொகையுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. எழுதப்பட்டவை யெல்லாம் எழுதியவரையன்று, இயேசுவையே மையமாகக் கொண்டு எழுதப்பட்டன. இந்த நூல்கள் ஆதித்திருச்சபையின் வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முழுத் திருவிவிலியத்தின் திருத்தொகையை கி.பி. 397ல் கார்த்தேச் நகரில் நடைபெற்ற பொதுச்சங்கமும் தொடர்ந்து கி.பி. 15ம் நூற்றாண்டில் புளோறன்ஸ் நகரில் நடைபெற்ற திருச்சங்கமும் மீண்டும் உறுதிப்படுத்தின.

## 07. விவிலியமும் மொழிபெயர்ப்புக்களும்

இஸ்ராயேல் மக்கள் எபிரேய மொழியையே பலஸ்தீனாவில் பேசினார்கள். ஒருசில பகுதிகளைத் தவிர பழைய ஏற்பாட்டின் பெரும் பகுதி எபிரேய மொழியிலேயே எழுதப்பட்டன. பபிலோனுக்கு அவர்கள் நாடுகடத்தப்பட்ட பிற்பாடு எபிரேயம் அந்நிய மொழிகளுடன் கலந்து அரமைக் மொழி உண்டாயிற்று. எனவே பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகள் அரமைக் மொழியிலும் எழுதப்பட்டன. எபிரேய மொழியையும் அரமைக் மொழியையும்விட அக்காலத்துப் பண்பாட்டின் விருத்தியாலும், உரோமருடைய ஆட்சி ஆதிக்கத்தாலும் கிரேக்க மொழியே மத்தியதரைக் கடலைச் சூழ்ந்துள்ள நாடுகளில் பொது அரச மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே அன்றைய வேதாகமமாகிய பழைய ஏற்பாடும் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டியதாயிற்று. இது 'செப்துவாஜிந்து' அதாவது 70 பேர் சேர்ந்து மொழிபெயர்த்தது என்று அழைக்கப்படும்.

இயேசு எபிரேய மொழி பேசினாலும் புதிய ஏற்பாடு எழுதப்பட்டபோது எல்லா நூல்களும் கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டன. எனவே திருச்சபையின் ஆரம்ப காலத்தில் திருவிவிலியம் முழுவதும் கிரேக்க மொழியிலேதான் இருந்தது. உரோமருடைய உத்தியோக மொழி இலத்தீனாக இருந்ததாலும். பிற்காலத்தில் உரோமர் இலத்தீனை அரச மொழியாகக் கொண்டதாலும் இலத்தீன் மொழிக்கு விவிலியத்தை மொழி பெயர்க்கவேண்டியதாயிற்று. முழுத்திருவிவிலியமும் கிரேக்க மொழியிலிருந்து புனித ஜெரோம் என்பவரால் இலத்தீன் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பை 'வல்கேற்' என்று அழைப்பார்கள், இலத்தீன் மொழியிலிருந்து பல்வேறு மொழிகளுக்கு இப்போது திருவிவிலியம் மொழிபெயர்க்கப்-பட்டுள்ளது. ஆனால் கிரேக்க மூலத்தையே ஆதாரமாகக்கொண்டு வெளிவரும் மொழி பெயர்ப்புக்கள் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. நமது தமிழ் மொழியில் வேதாகமம் முதலில் இலத்தீன் மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாயிருந்தாலும், தற்போது நமது கைகளில் தவழும் திருவிவிலியம், கிரேக்க மூலத்திலிருந்தே மொழிபெயர்க்கப்பட்டது.

## 08. விவிலியமும் விளக்கவுரைகளும்

முற்றாகவும், முழுமையாகவும் விளக்கிக்கொள்ள முடியாத நூல் திருவிவிலியம். இந்நூலை விளங்கிக்கொள்ள உதவிகள் வேண்டும். பரிசுத்த ஆவியின் துணையுடன் பல்வேறு உதவிகளைப் பெற்றே நாம் அதை விளங்கிக்கொள்ள வேண்டும். எனவேதான் விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஆங்கில மொழியில் அதிகமான விளக்கவுரைகள் வந்துள்ளன. தமிழ் மொழியில் இப்போது ஏராளமான விளக்கவுரைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

விளக்கவுரைகளைத் திருவிவிலியம் என்று கொள்ளக்கூடாது. அவை திருவிவிலியத்தை பல்வேறு கோணங்களிலிருந்து நோக்கவும், திருவிவிலியச் செய்தியை விளங்கிக்கொள்ளவும் ஓர் உதவியாக மட்டுமே கொள்ளவேண்டும். இதற்காக விளக்கவுரைகள் இன்றி திருவிவிலியத்தைப்பற்றி அறிந்து திருவிவிலியத்தைப் படித்தால் அதை மேலும் ஆழமாக படிக்க உதவியாக இருக்கும். விளக்கவுரைகளில் குறிப்பிடப்படுகின்ற எல்லாக் கருத்துக்களையும் விவிலியத்தின் பொருள் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அவற்றை அபிப்பிராயங்களாகவே கொள்ளவேண்டும். வெவ்வேறு விளக்கவுரைகளைப் படிக்கும்போது விவிலியத்தின் பொருள் எதுவாக இருக்கலாம் என ஊகித்துக்கொள்ள முடியும்.

மேலும் சொல்லுக்குச் சொல் விளக்கம் தரும் விளக்கவுரை-களைப் பயன்படுத்தக்கூடாது. அவை திருவிவிலியத்தின் உண்மை-யான பொருளிலிருந்து தப்பான வழிக்கு நம்மை இட்டுச்செல்லும், திருவிவிலிய நூல்களை எழுதிய ஆசிரியர்கள் ஆரம்பத்தில் என்ன கருத்தைக்கூற முயன்றார்கள். எப்படிக் கூறினார்கள் என்ற வினாக்களை எழுப்பி வேதாகம நூல்கள் எழுதப்பட்ட சூழ்நிலைகளை மனதில்கொண்டே விளக்கவுரைகளில் இருந்து கருத்துக்களை எடுக்க வேண்டும். ●

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

தேசிய சமாதானப் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்.

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## சமாதான சிரமதானப் பணி மூலம் பழுதடைந்த வீதி புனரமைப்பு



"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பார்கள். ஆம், இதன் உண்மையை எங்களுடைய வாழ்க்கையில் நாம் கண்டுணர்ந்து கொள்ளலாம். ஒரு மனிதனின் தனிமையான வாழ்விற்கும் கூட்டிணைந்த வாழ்விற்கும் நிறைய வித்தியாசங்கள் இருப்பதை நாம் பல்வேறு சம்பவங்களின் ஊடாகக் கண்டுகொள்ள முடிகிறது.

இதனடிப்படையில் அண்மையில் முருங்கன் பள்ளக்கமம் கிராம மக்கள் எல்லோரும் இணைந்து தங்களுடைய பிரதான வீதியைப் புனரமைக்கும் பணியைச் சிரமதானப்பணி மூலம் மேற்கொண்டனர். மழையினால் மிகவும் பாதிக்கப்பட்டு, மக்கள் நடமாட்டத்திற்கு மிகவும் தடையாக இருந்த இவ்வீதி கிராம மக்களின் ஒருங்கிணைந்த முயற்சியினாலும், மன்னார் வாழ்வுதயத்தின் தேசிய சமாதானப் பிரிவின் அனுசரணையாலும் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

பொன்தீவுகண்டல், களிமோட்டை, பரிகாரிகண்டல், முருங்கன் கமம் போன்ற கிராம மக்கள் வைத்திய சேவைகளுக்காகவும், பிள்ளைகளின் கல்விப் பணிகளுக்காகவும் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளுக்காகவும் இவ்வீதியை பயன்படுத்தி வருகின்றனர் என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

இச்சிரமதானப் பணிக்கான எல்லா நடவடிக்கைகளையும் வாழ்வுதயத்தின் முருங்கன் பகுதி கள ஊக்குவிப்பாளர் திரு. சி. சுஜிவன் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ அன்பின் உறைவிடம் குடும்பம் - அருட்பணியாளர் யூட் குரூஸ் -

எமது குடும்பத்தில் அன்புடனும், ஒற்றுமையுடனும் நாம் வாழவேண்டுமென்றால் அந்த அன்பு எமது உள்ளங்களிலிருந்து ஊற்றெடுக்க வேண்டும். அந்த அன்பின் உறைவிடமாக இருப்பது எமது குடும்பமே என அருட்பணி. அ. யூட்குரூஸ் அவர்கள் மன்னார் பிரதேச வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதானச் செயலமர்வில் குறிப்பிட்டார்.

சாந்திபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்ற செயலமர்வின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இன்றைய காலத்தில் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான புரிதலும், அவர்களுக்கிடையிலான உறவு முறைகளும், மற்றும் அவர்களுக்கிடையிலான பாசபந்தங்களும் அருகிவருகின்ற நிலையினை காணக்கூடியதாக இருக்கின்றது. தொலைக் காட்சியினுடைய மோகம் இன்று குடும்ப அங்கத்தவர்களை அதிலும் பெண்களை ஆட்டிப்படைக்கின்ற நிலைமையும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும் என தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், தொலைக் காட்சியினுடைய மோகம் இன்று குடும்பங்களை ஆட்கொண்டுள்ளதால் கணவன் மனைவிக்கிடையிலான பிரச்சினைகள் பிள்ளைகளின் தேவைகளில் அக்கறை செலுத்தாத தன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளால் பல குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. மேலும் குடும்ப வாழ்வில் இல்லத் தலைவிகளின் பங்களிப்பு என்ன என்பதை சீராக் ஆகமத்தினதும் மற்றும் விவிலியத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் ஆதாரபூர்வமாக தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து வாழ்வுதய சமாதானப் பிரிவின் இணைப்பாளர் திரு. C. M. A ஜெயதாஸ் அவர்கள் "நீதியும் சமாதானமும்" பற்றி விவிலிய வார்த்தைகளை ஆதாரங்காட்டி விளக்கப்படுத்தினார். அதாவது (லேவி 19:15, இணைசட் 1:16, யாத்.23:6, ஏரே.22:3) ஆகிய பகுதிகளை ஆதாரங்காட்டி நீதிக்காக போராடுவதை விடுத்து, நீதிக்காக உழைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சாந்திபுரம், பள்ளிமுனை, எமில்நகர் 65 காணித்திட்டம், குழந்தை யேசுபுரம், தரவன்கோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கிராமிய விழிப்பூட்டல் குழு அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

## மன்னார்க் கோட்ட வாழ்வுதய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சமாதானக் கருத்தமர்வும் சமாதானக் குழு உருவாக்கமும்

மன்னார் மறைக்கோட்ட வாழ்வுதய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சமாதானக் கருத்தமர்வும், சமாதானக் குழு உருவாக்கமும் கடந்த 17.11.2007 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயக் கேட்போர் கூடத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது.

நாட்டின் சமாதானத்தைப்பற்றிச் சிந்திப்பதற்கு முன்னதாக எமது தனிவாழ்வில் எவ்வாறு சமாதான விரும்பிகளாக நாம் வாழலாம் என்ற தலைப்பில் வாழ்வுதயப் பணியாளர் திரு. ஜோர்ச் குரூஸ் அவர்களால் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர் அவர்கள் கலந்துகொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான தனது செய்தியை வழங்கினார்.

பின்னர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சமாதானக்குழு உருவாக்கப்பட்டதுடன் எதிர்காலங்களில் எமது செயற்பாடுகளின்போது எவ்வாறு குழுவாக செயற்படுவது என்பது பற்றியும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அத்துடன் கறிற்றாஸ் நிறுவனத்தின் 40வது ஆண்டு நிறைவின்போது முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளில் எவ்வாறு செயற்படுவது என்றும் கலந்துரையாடி முடிவுகள் எட்டப்பட்டன. இந்நிகழ்விற்கு வாழ்வுதய சமாதானப் பிரிவு இணைப்பாளர், கல்விப்பிரிவு இணைப்பாளர்கள் கலந்துகொண்டதுடன் 26 முன்பள்ளி ஆசிரியர்கள் பங்கெடுத்துப் பயன்பெற்றனர்.

## மன்னார் மறைக்கோட்டப் பங்குகளின் அன்பிய இணைப்பாளர்களுக்கான பயிற்சிப் பாசறை

மன்னார் மறைக்கோட்டப் பங்குகளின் அன்பிய இணைப்பாளர்களுக்கான முழுநாள் "செபவாழ்வு" குறித்த பயிற்சிப்பாசறை மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. கடந்த 17.11.2007 அன்று சனிக்கிழமை, காலை 9.00மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை இந்தப் பாசறை நடைபெற்றது.

அன்பிய ஆணைக்குழுவுடன் வாழ்வுதய நீதி சமாதானப் பணிக்குழுவும் இணைந்து பயிற்சிப் பாசறையினை நெறிப்படுத்தினார்கள். அன்பியங்களின் இணைப்பாளர்கள் செபவாழ்வில் ஈடுபாடுகொண்டு செயற்படும் தூண்டுதல் பெற இப்பயிற்சி வழங்கப்பட்டது.

06 பங்குகளிலிருந்து 79 இணைப்பாளர்கள் இதில் பங்குபற்றியிருந்தார்கள். மன்னார்ப் பேராலயப் பங்கின் 06 வலயங்கள் மற்றும் தாழ்வுபாடு, கீரி, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார் ஸ்ரேஷன், பேசாலை, காட்டாஸ்பத்திரி, பள்ளிமுனை, தோட்டவெளி ஆகிய பங்கு மற்றும் துணைப்பங்குகளில் இருந்து ஊக்குவிப்பாளர்கள் இதில் பங்கு பற்றினார்கள்.

### செபவாழ்வுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

- ஏழு படி நற்செய்தி இறைவார்த்தைப் பகிர்வு குழுக்களாக இடம்பெற்றது.
- இறைவார்த்தை வழங்கும் நீதி, அமைதி, சமாதான வாழ்வு குறித்து திரு. ஜெயதாஸ் உரை வழங்கினார்.
- தோழமைக் குழுக்களில் திருப்பாடல் பயன்பாடு குழுப்பயிற்சி குறித்து திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் அறிவுறுத்தினார்.
- "புண்ணிய பூமி" பயண அனுபவம் குறித்து திருமதி. கிறிஸ்ரி ஆகத்தா அவர்கள் பகிர்ந்துகொண்டார்.
- செபவாழ்வும், குழுவாழ்வும் குறித்து அருட்பணி. யூட் குரூஸ் அடிகளார் உரை வழங்கினார்.

இந்த ஒரு நாள் இணைப்பாளர் பயிற்சி பயனுள்ளமுறையில் பி. ப.3.30 மணியளவில் நிறைவெய்தியது.

## மாதாந்த சமாதான தியான நிகழ்வு

வாழ்வுதய இல்லப் பணியாளர்களுக்கான மாதாந்த சமாதான தியான நிகழ்வானது கடந்த 16.11.07 அன்று வாழ்வுதயச் சிற்றாலயத்தில், அருட்தந்தை வசந்தகுமார் அவர்களால் நடாத்தப்பட்டது.

உளவளத்தின் தேவை பற்றியும், யுத்தத்தினால் அவதிப்பட்டு அல்லலுறும் மக்கள் மத்தியில் எவ்வாறு அவர்களது பிரச்சினைகளை அறிந்துகொள்வது எனவும், தன்னார்வப் பணிகளில் ஈடுபடுவோர் மக்களுக்கு எவ்வாறு ஆறுதலளிக்கும் வகையில் - நம்பிக்கை ஊட்டும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் அடிகளார் விளக்கிக் கூறினார்.

இறுதியில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆராதனைகளும் நடைபெற்றன. பலதரப்பட்ட மக்கள் மத்தியில் பணிபுரியும் பணியாளர்களின் களைத்துப்போன மனங்களை உத்வேகம் ஊட்டும் வகையில் அமைந்த இந்நிகழ்வில் அனைத்துப் பணியாளர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## மன்னார்க் கோட்ட வாழ்வுதயக் கல்வி உதவிபெறும் மாணவர்களுக்கான சமாதான ஒன்றுகூடல்

மன்னார்க் கோட்ட மாணவர்களுக்கான சமாதான ஒன்றுகூடலானது கடந்த 17.11.2007 அன்று காலை 10.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

சமாதானத்தை எவ்வாறு மாணவர் மத்தியில் ஏற்படுத்துவது என்ற தலைப்பில் வாழ்வுதயப் பணியாளர் திரு. ஜோர்ஜ் குரூஸ் கருத்துக்களை வழங்கினார். வாழ்வுதய இயக்குனர் இந்நிகழ்வில் கலந்து உரைநிகழ்த்தினார்.

பின்னர் மாணவர்களது எதிர்கால நிகழ்வுத்திட்டங்கள் பற்றியும், கல்வி ஊக்குவிப்பு செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. "மாணவர் மட்டில் சமாதானத்தை உருவாக்குவோம்" என்ற தலைப்பிலான சித்திரப் போட்டிக்கான விதிமுறைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு சமாதானப் பிரிவு இணைப்பாளர் மற்றும் கல்விப்பிரிவு இணைப்பாளர்களும் கலந்துகொண்டதுடன் 35 மாணவர்கள் இதில் கலந்து பயன்பெற்றனர்.



## சமாதானக் கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டத்தின் பிரதிபலிப்பு





மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் தரம் 7ல் கல்வி கற்றுவரும் மாணவியான செல்வி து. கமிலியா என்பவர் மன்னார்க் கோட்ட வாழ்வுதய மாணவ சமாதானக் குழுவில் அங்கத்தவராக இருப்பதுடன் சமாதானக் கல்வித் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வி ஊக்குவிப்புச் செயற்திட்டங்களில் தவறாமல் பங்குபற்றி வந்ததனால் அதன் பிரதிபலிப்பாக பாடசாலையில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் திறமைச்சித்தி பெறுவதுடன் தொடர்ச்சியாக வகுப்பில் முதல்தர மாணவியாகி வருவதுடன். பாடசாலை மட்டங்களில் நடாத்தப்பட்டுவரும் ஓவியப் போட்டிகளிலும் திறமையாகச் செயற்பட்டு மூன்று தடவைகளுக்கு மேல் முதலாம் இடத்தைப்பெற்றுப் பல பரிசில்களையும் பெற்றுள்ளார்.

இவருக்கு வழங்கப்படுகின்ற சமாதானக் கல்வி ஊக்குவிப்புச் செயற்திட்டங்களின் பெறுமதிமிக்க பிரதிபலிப்புக்களே இவையாகும்.

கறித்தாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk

# கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கு விவசாயத்திற்கான கடன் வழங்கல்

கடந்த மாதம் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களில் இரு கிராமங்களைச் சேர்ந்த 5 கிராமியக் குழுக்களுக்கு விவசாயத்திற்கான ஊக்குவிப்புக் கடன் பணம் வாழ்வுதய இயக்குனர் S.J பெப்பி சோசை அடிகளாரினால் வழங்கப்பட்டுள்ளது.

செட்டிக்குளம் பங்கிற்குட்பட்ட முதலியார் குளம் கிராமத்தில் இயங்கும் 10 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவுக்கும் கொக்குப்படையான் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து பொன்தீவுகண்டலில் தங்கியுள்ள 4 கிராமியக் குழுக்களில் 24 உறுப்பினர்களுக்கும் தலா 10.000/= ரூபாய்ப்படி மூன்று இலட்சத்து நாற்பது ஆயிரம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் உதவிகள் அந்தந்தப் பிரதேச கிராமியக் குழுக்களினால் தேவையின் நிமித்தம் தெரிவுசெய்யப்பட்டோருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவியின் மூலம் இக்குழு உறுப்பினர்கள் விவசாயத்திற்கான



ஊக்குவிப்பைப் பெற்றுள்ளதோடு இக்குழுக்களின் சமூகப் பொருளாதார விழிப்பூட்டல் செயற்பாடுகளுக்கும் இந்த உதவி ஊக்குவிப்பாக அமைவது குறிப்பிடத்தக்கது. இந்த உதவிகள் வழங்கப்படுவதற்கு முன்னர் அந்தந்தப் பிரதேச கிராம அலுவலகர்கள் மற்றும் பங்குத்தந்தையின் சிபாரிசுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

# வாழ்வுதய புனர்வாழ்வு புனரமைப்பு பிரிவின் மனிதநேயப் பணிகள்

கடந்த மாதம் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவினரால் பல்வேறுபட்ட மனிதநேயப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களுக்கே இவ்வுதவிகள் வழங்கப்படுகின்றன.

முசலி, முள்ளிக்குளம் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து மன்னாரில் தங்கியுள்ள 156 குடும்பங்களைச் சேர்ந்த 564 நபர்களுக்குத் தேவையான உலர் உணவு வழங்கப்பட்டுள்ளது. அரிசி 116 kg, மா 493 kg, சீனி 220 kg, கோப்பி 160 kg, பயறு 160 kg , கடலை 160 kg, பருப்பு 160 kg, மீன் ரின் 274, தேயிலை 156 பைக்கற் இவற்றைவிட வீட்டுப்பாவனைப் பொருட்களாக பிளாஸ்ரிக் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன

இவற்றோடு வறுமைக்கோட்டின்கீழ் வாழும் ஆதரவற்றோர், முதியோர் போன்றோருக்கும் வாழ்வுதயக் காரியாலயத்தில் 21 நபர்களுக்கு அரிசி 421kg, மா 153kg, சீனி 103kg , பருப்பு 53kg, மீன் ரின் 55, சோயா 103 பைக்கற் தேயிலை 21 பைக்கற், பால் மா 26 பைக்கற் போன்றவைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றோடு 8 நபர்களுக்கு வைத்தியச் செலவுக்கொடுப்பனவுகளும், மாதாந்த மேலதிக சிகிச்சைக்காக வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் நோயாளிகள் இருவருக்கு பிரயாணச் செலவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு பருவப்பெயர்ச்சி மழையினால் அல்லல்படும் 10 குடும்பங்களுக்கு மன்னாரில் 65,695/= பெறுமதியான கிடுகுகளும், முசலிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து மன்னாரில் தங்கியுள்ள 22 குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைக்கான பைப், சீற், கயிறு மற்றும் தேவைப்படும் சிறு பொருட்களும், 220 கட்டுக் கிடுகுகளும், 24 தகரங்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சொந்தப் பலத்தில் நம்பிக்கையுடன் செயற்படுங்கள்

## இயக்குனர் அருட்தந்தை S.J. பெப்பி சோசை அடிகளார்

அண்மையில் வாழ்வுதயத்தின் தொழிற்பயிற்சிப் பிரிவினரால் மன்/மாவிலங்கேணிக் கிராமத்தில் இயங்கும் வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கு உணவுப்பண்டம் தயாரிப்பதற்கான பயிற்சி வழங்கும் ஆரம்ப நிகழ்விலேயே இயக்குனர் தந்தை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், நாம் எமது சுயமுயற்சியில் நம்பிக்கைகொண்டு நாமே எமது பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டியுள்ளது. நாம் எமது அனுபவத்திலும் எமது பலத்திலும் நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். இன்றைய இளம் சமுதாயம் தனது பலத்தில் நம்பிக்கைகொண்டு பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். வெறுமனே ஒருசில தொழில் முயற்சியை மட்டும் நம்பியிருக்கிறோம். இவற்றை மட்டும் நம்பாமல் பல்வேறு தொழில் முயற்சிகளையும் எமது கிராமங்களுக்கு அறிமுகம் செய்து, குறிப்பாக இவ்வாறான சிற்றுண்டி உணவுகள் தயாரித்து எமது கிராமத்திலே தேவை உள்ளவர்களுக்கு விற்பனை செய்யவேண்டும். நாமே இவற்றைத் தயாரிக்கும்பொழுது சுகாதாரமாகவும், சுத்தமானதாகவும் தயாரிக்க முடியும். அத்தோடு கூட்டு வாழ்வும், ஒன்றிணைந்த உணர்வும் எமது சமூகத்தில் பலப்படும். எனவே இன்றைய நாளில் நீங்கள் கற்றுக்கொள்ளும் பயிற்சியை ஏனையவர்களுக்கும் கொடுத்துப் பயன்பெற வேண்டும் என்று கூறி ஆசி வழங்கித் தனது உரையினை நிறைவு செய்தார்.



இப்பிரதேசக் குழுக்களுக்கு பகோடா, மிக்சர், மஸ்கட், தொதல் போன்றவைகள் சிக்கனமாகவும் சுகாதாரமான முறையிலும் எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாகப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. இந்த ஆரம்பப் பயிற்சிக்கென ரூபா 30,000/= நிதி செலவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட வாழ்வுதய தொழிற்பயிற்சி பிரிவினரால் மன்னார் மாவட்டத்தில் 13 இளைஞர்களுக்கு சாரதிப்பயிற்சியும் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. AD சாரதி அனுமதி பத்திரம் பெற்றோர் 3 பேர், CCID சாரதி அனுமதி பத்திரம் பெற்றோர் 10 பேர். இவ்வாறான பயிற்சிகள் மூலம் இவ்விளைஞர்களும் சுயமாக தொழிலை மேற்கொள்கின்றனர்.

# இன மத மொழி வேறுபாடு இன்றி இயங்கும் வாழ்வுதயமே வளர்க பல்லாண்டு!

## வாழ்வுதய முன்பள்ளி ஆசிரியைகள் தேவறாஜ் நேசமலர், டெனிஸ்தாஸ் சர்மிலா

கடந்த கால யுத்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்துவந்த நாம் எமக்கு ஓர் சொந்த இடத்தை அமைத்து வசித்து வருகின்றோம். எமது கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. அம்மக்களின் ஜீவனோபாய தொழிலாக கூலித்தொழிலே காணப்படுகின்றது.

இங்கு வசித்துவரும் மக்களின் நிலமையை கருத்திற்கொண்டு மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் சிந்தனைக்கொப்பவும் வாழ்வுதய இயக்குனர் அவர்களின் முயற்சியின் பிரகாரமும் எமது கிராமத்திற்கு முன்பள்ளிக் கட்டிடம் ஒன்றினைப் புதிதாக அமைத்துத் தந்தார்கள். அவ்வேளையில் எமது கிராமத்தைச் சார்ந்த 48 மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதற்கு 2 ஆசிரியைகள் வாழ்வுதயத்தினால் நியமிக்கப்பட்டார்கள். அவற்றோடு ஆசிரியர்களுக்கான கொடுப்பனவையும், மாணவர்களுக்கான தினசரிச் சத்துணவையும் வாழ்வுதயமே வழங்கியது. இவ்வாழ்வுதய பணியில் இணைந்த நாம் வாழ்வுதயக் குடும்பப் பிள்ளைகளாகவும் வாழ்வுதயத்தினால் வழங்கப்பட்ட பயிற்சியினாலும் அச்சிறார்களை நல்ல முறையில் நெறிப்படுத்தி இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக மாறுவதற்கு - நல்லதொரு எதிர்காலத்தை எமது கிராமத்தில் கட்டியெழுப்புவதற்கு எமக்கு வாழ்வுதயம் அடித்தளமிட்டுள்ளது.

ஒதுக்கப்பட்டு ஆதரவற்ற நிலையில் நாங்கள் இருந்தபோது வாழ்வுதய நிறுவனம் தனது பணியை ஆரம்பித்த பின்பு ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது பணியினை இங்கு ஆரம்பித்தனர். அதனையிட்டு நாம் வாழ்வுதய நிறுவனத்துக்கே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். 2004ஆம் ஆண்டு வாழ்வுதயத்தினால் எமது கிராமத்தில் இரண்டு கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் வெளிக்கள உத்தியோகத்தர் திரு. விமலநாதன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுக்களுக்கான சமூக, பொருளாதார, கலாச்சார, ஆன்மீக விழிப்பூட்டல்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன்பின் எமது கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்தார்கள். இளைஞர்களுக்கான திறன்களை வளர்க்கும் செயற்பாடுகளும் அங்கு முன்னெடுக்கப்பட்டது. எமது கிராமிய குழுக்களுக்கு வாழ்வுதயம் சேமிப்புத்திட்டத்தையும் ஆரம்பித்தது. அந்த இரு குழுக்களுக்கும் பெயர் சூட்டப்பட்டு தற்பொழுதும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இவற்றைவிட கணவரால் கைவிடப்பட்டவர்கள், தாய்தந்தை இல்லாத சிறுவர்கள், விசேட தேவையில் உள்ளோர் போன்றோருக்கும் தேவையான மனித நேயப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அத்தோடு மழைக் காலங்களில் வீடு வேய்வதற்கான கிடுகுகளும் வழங்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது கிராமத்தில் எம்மோடு இருந்து ,எமது செயற்பாடுகளுக்கு எமது பங்குத்தந்தை சகாயநாதன் அடிகளார் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் எமது முன்பள்ளிப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து வழிநடாத்தும் வாழ்வுதய நிறுவன இயக்குனர். அருட்தந்தை S. J பெப்பி சோசை அடிகளாருக்கும் வாழ்வுதயப் பணியாளர்களுக்கும் எமது கிராம மக்கள் சார்பான நன்றிகளை பெருமனதோடு கூறிநிற்கின்றோம்.

வாழ்க... கறிற்றாஸ் வாழ்வுதயம்,
வளர்க... பல்லாண்டு உன் பணி

# மனிதன் மனிதனை மனிதனாகப் பார்க்க வேண்டும்

## வவுனியா மறைக் கோட்ட முதல்வர் செபமாலை அடிகளார்

அண்மையில் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் மீளாய்வு ஒன்றுகூடலிலேயே அருட்தந்தை மேற்கண்டவாறு கூறினார்.

தந்தை அவர்கள் மேலும் கூறுகையில் மனிதர்கள் ஒற்றுமையுடன் ஒன்றுகூடும் இடம்தான் சமூகம். இந்தச் சமூகத்தில் நாம் அனைவரும் பல்வேறு இடர்களைச் சந்திக்க நேரிடுகிறது. இவ்வாறான இடர்கள், தடைகளைத் தாண்டி முகம் கொடுத்து வாழ்வதுதான் சிறந்தது. குறிப்பாக அடிமட்ட மக்கள் மத்தியில் கூடுதலாக மனிதம் சிதைக்கப்படுவதை நாம் காண்கின்றோம். நாம் மனிதனை மனிதனாக மதிக்கும்போதுதான் மனிதம் வாழ்வு பெறுகின்றது என்று தனது கருத்துக்களை விரிவாகக் கூறினார்.

அத்தோடு கறிற்றாஸ் வாழ்வுதயம் முன்னெடுக்கும் கிராமிய விழிப்பூட்டல் நிகழ்வுகள் மனித வாழ்வில் சமூக மாற்றத்தை கொண்டுவரவல்லது. எதிர்காலத்தில் இவ்வாறான விழிப்பூட்டல் செயற்பாடுகளால் எமது சமூகம் அன்புச் சமூகமாக மாற்றம்பெறும் எனவும் கூறி, வாழ்வுதய இயக்குனர் மற்றும் பணியாளர்களுக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறினார்.

இவ்வாறான கிராமியக் குழுக்களின் மீளாய்வுகள் மன்னார் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் கடந்த மாதம் வாழ்வுதயத் திட்ட இணைப்பாளர். திரு. S. செல்வின் நிமல்றாஜ் அவர்களினாலும் கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் திரு. S. அன்ரன் ராஜகாரியர் அவர்களினாலும் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் 2007ம் ஆண்டுக்குரிய மீளாய்வை வைத்துக்கொண்டு 2008ம் ஆண்டுக்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கிராமியக் குழுக்களின் செயற்பாடுகள் கறிற்றாஸ் சிறிலங்கா தேசிய மட்டத்தில் அனைத்து மறைமாவட்டங்கள் ஊடாகவும் முன்னெடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மளுவராயர் கட்டையடம்பனில் பாடசாலைக் கட்டடம்

மளுவராயர் கட்டையடம்பனில் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் நிரந்திர வீட்டுத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது 44 வீடுகளின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளது. மிகுதி 96 வீடுகளுக்குரிய நிர்மானப்பணிகளும் நடைபெற்று வருகின்றன. இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், பல்வேறு சுயதொழில் பயிற்சிகளும், கடன்திட்டங்களும் மேலும் கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகளும். முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இக்கிராமத்தில் கல்வி கற்கும் 450 மாணவர்கள் தற்காலிகக் கொட்டகையிலேயே தமது பாடசாலைக் கல்வியை முன்னெடுத்து வருகின்றனர். இம்மாணவர்களின் நலன்கருதி 100'x 25'அளவுடைய 30 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை கட்டுமானப் பணிகளை கறிற்றாஸ் வாழ்வுதயம் ஆரம்பித்துள்ளது.

செய்தித் தொகுப்பு :
**எஸ். அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

தருவது தஞ்சை டோமி



**தொடர் - 05**

**05) கத்தோலிக்கர்கள் ஏன் செபமாலைக்கு மிக முக்கியத்துவம் வழங்குகிறார்கள்? அதில் 50 முறை 'மரியே வாழ்க' என்று மரியைப் போற்றுகிறார்கள். ஆனால், இறைவனை 11 முறைதான் வாழ்த்துகின்றார்கள். ஜெபமாலை என்ன விவிலிய மாலையா?**

நம் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தமது பாப்பிறைப் பணியின் வெள்ளி விழாவின்போது 'கன்னிமரியின் செபமாலை' என்ற அப்போஸ்தலிக்க மடலை வெளியிட்டு அந்த ஆண்டகை (ஒக் - 16 - 2002 – ஒக் - 16 - 2003) ஜெபமாலை ஆண்டாக அறிவித்துப் புனிதப்படுத்திச் செபமாலைப் பக்தியில் வளர அழைத்துள்ளார்.

**வரலாற்றில் செபமாலை:** செபமாலை, திருச்சபையின் வாழ்விலும், திருப்பணியாளர்களின் வாழ்விலும் நிறைவாழ்வை நோக்கிய பயணத்தில் வழித்துணையாக அமைந்தது என்றால் மிகையாகாது. செபமாலை முதலில் துறவிகளின் பக்தி முயற்சியாகத்தான் இருந்தது. துறவிகள் 150 திருப்பாடல்களையும் படித்துச் செபிக்க வேண்டும். படிக்கத் தெரியாதவர்கள் 150 முறை கர்த்தர் கற்பித்த செபத்தைச் சொல்ல வேண்டும். செபமாலை செபிக்கும் பழக்கத்தை புனித சுவாமிநாதர் 1220இல் தொடங்கினார். திருத்தந்தை 5ஆம் பத்திநாதர் 1571ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதியை செபமாலை அன்னையின் விழாவாக அறிவித்தார். செபமாலைப் பக்தியானது 1716ஆம் ஆண்டு திருத்தந்தை 13ஆம் சிங்கராயரால் அறிவிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒக்டோபர் மாதம் செபமாலைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம்.

**செபமாலையும், இரண்டாம் அருள் சின்னப்பரும்:** திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் '*மரியன்னையின் திருத்தந்தை*' என்று அழைக்கப்படுகிறார். மரியன்னைமீது ஆழ்ந்த பக்தியுடையவர். இவர் திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற 19 ஒக்டோபர் 1978 அன்று "செபமாலையே எனக்குப் பிடித்த செபம்" என்று கூறி ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் வத்திக்கான் வானொலியில் செபமாலையைச் செபித்தார். 1986 ஓகஸ்ரில் 1987ஆம் ஆண்டை மரியன்னையின் ஆண்டாக அறிவித்தார். 'Redemptoris Mater' 'மீட்பரின் தாய்' என்ற சுற்று மடலை வெளியிட்டார். தமது இறையாட்சிப் பணியின் வெள்ளி விழா ஆண்டைச் செபமாலை ஆண்டாக அர்ப்பணித்தார். ***கன்னி மரியாயின் செபமாலை*** என்ற அப்போஸ்தலிக்க மடலையும், ஒளியின் மறையுண்மைகளையும் அறிமுகப்படுத்தி அன்னையை மகிமைப்படுத்தியுள்ளார்.

**செபமாலை என்பது...**

- தூய ஆவியால் வழிநடத்தப்படும் செபம்
- புனிதர்களினால் அன்புசெய்யப்பட்ட செபம்.
- திருச்சபையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள செபம்.
- நற்செய்தியை முழுமையாகக் கொண்ட செபம்.
- மரியாவுடன் அமர்ந்து இயேசுவின் அழகைத் தியானிக்கும் செபம்.
- மீட்பு வரலாற்றின் மறையுண்மைகளைச் சிந்திக்க அழைக்கும் செபம்.

**செபமாலை :**

"செபமாலை விவிலியத்தில் இல்லை, எதற்காகச் செபமாலை செபிக்கவேண்டும்" என்று பிதற்றுபவர்களும் உண்டு. செபமாலை இரண்டாம்தரப் பக்தி முயற்சிதானே என்று கூறி அதனைக் குறைத்து மதிப்பிட்டு பெரும் தவறு செய்பவர்களும் உண்டு. ஆனால் உண்மையில் செபமாலையை, இயல்பில் தெளிவாக மாமரியை நோக்கிய செபமெனினும், சூழ்நிலையில் இது கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாகும். நற்செய்தியின் அனைத்துக் கருத்துக்களையும் கொண்ட செபமாலையை நற்செய்தியின் சுருக்கம் என்றுகூடக் கூறலாம்.

திருப்பலியில் மூவொரு இறைவனை மகிமைப்படுத்தி இயேசுவின் பாடுகளையும் தியானிக்கின்றோம். நம் ஆண்டவரின் பாடுகளின் பலனையும், கீழ்படிதலின் மகத்துவத்தையும், திரு உடல் திரு இரத்தப் பலனையும் இறைஇரக்கத்தையும் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். அதேபோல் செபமாலை தேவ இரகசியங்களைத் தியானித்து மீட்பு என்னும் பெரும் கொடைக்காக நன்றி செலுத்தும் புகழ்ச்சிப் பலியாகும். செபமாலை இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று வாய்ச்செபம், அடுத்தது மனச்செபம். செபமாலையில் மனச் செபம் என்பது இயேசுவின் அன்னை மரியாவின் வாழ்வு, மரணம், மகிமை ஆகிய திருநிகழ்ச்சிகளின் தியானமாகும். வாய்ச்செபம் என்பது அருள்நிறை செபத்தைப் பத்து பத்து மணிகளாக, ஒவ்வொரு பத்து மணிக்கு முன்னால் ஒரு பரலோக மந்திரத்துடன் சொல்வதாகும். பரலோக மந்திரமும், கர்த்தர் கற்பித்த செபமும் இயேசு மற்றும் மரியாவின் வாழ்வு, துயரம், மகிமை ஆகிய திருநிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளதால் இச்செபத்தை இயற்றியது நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்துவே. செபமாலை தாவீதரசனின் சங்கீதங்களிலும், உன்னத சங்கீதங்களிலும் கூறப்படும் எல்லா அழகிய வசனங்களின் சுருக்கமாக அமைந்துள்ளதாக புனித சிப்பிரியன் கூறுகிறார்.

**செபமாலையில் விவிலிய மேற்கோள்கள்**

| | |
|---|---|
| மத் 6:9-13 | பரலோக மந்திரம் |
| லூக் 1:26-46 | மங்கள வார்த்தைச் செபம், கபிரியேல் தூதரின் வார்த்தைகள். |
| லூக் 1:28 | 'அருள் நிறைந்தவளே வாழ்க' |
| லூக் 1:28 | 'ஆண்டவர் உம்முடனே' |
| லூக் 1:42 | 'பெண்களுக்குள் ஆசிர்வதிக்கப்பட்டவர் நீரே' |
| லூக் 1:42 | 'உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டவரே' |

அருள் நிறை செபத்தின் முதல் பாகத்தை மூவொரு இறைவன் நமக்கு வெளிப்படுத்தினார். அதன் பிந்திய பகுதியைப் புனித எலிசபெத் தூய ஆவியால் ஏவப்பட்டு உரைத்தார். இறுதிப் பகுதியை கி.பி. 430இல் திருச்சபை நமக்குத் தந்தது (எபேசு பொதுச் சங்கம் நெஸ்டோரியுன் தப்பறைக் கொள்கையை எதிர்த்தது) "அர்ச்சிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கின்ற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்" என்று மன்றாடும்படி திருச்சபை பணித்தது.

விவிலியத்தின் மையமாக விளங்கும் நம் ஆண்டவரைப் பற்றி தியானித்தவர்களாய் மேலே குறிப்பிட்டவாறு விவிலிய வசனங்களை மீண்டும் மீண்டும் சொல்லிச் செபிக்கின்ற செபமாலையை நாம் 'விவிலிய மாலை' என்று அழைப்பது பொருத்தமானதே! படைப்புகள் அனைத்தும் மரியாவைப்போல் கிறிஸ்துவை அறிந்துகொள்ளவும், அவரைப் பகிரங்கமாக அறிவிக்க செபமாலை ஒரு வழியாகிறது. அது கிறிஸ்துவின் இருதய விருப்பத்திற்கேற்ப கிறிஸ்தவர்களை உருவாக்குகிறது. செபமாலை செபிப்போம். கிறிஸ்துவை அறிந்து அறிவிப்போம். ஆவே மரியா! மரியே வாழ்க!.

(தொடரும்...)

# பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை

## இறைவார்த்தை ஆண்டையொட்டிய சிந்தனைக் கட்டுரைத் தொடர் – 2

– திரு. மாட்டின் டயஸ், [பேசாலை] இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் –

இறைவார்த்தையை வைத்திருத்தலை (**Owning the word of God**) இரு வகையாகக் காணலாம்.

**ஒன்று : பௌதீக ரீதியாக அதை வைத்திருத்தல் (Physical Ownership)** அது இறைவார்த்தையை – வேதாகமத்தை நூல்வடிவில் வைத்திருத்தல். நமது வீட்டில் நூறு புத்தகங்கள் உண்டு. பிள்ளைகள் பயிலும் பாடநூல்கள் பல உண்டு. வீடுகளில் நாவல்கள், கதைப்புத்தகங்கள், அறிவு நூல்கள், குறிப்புப் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள் போன்றவை உள்ளன. இறைவார்த்தை நூல் பத்தோடு பதினொன்றா? பாடப் புத்தகங்களோடு மேசையிலா? அப்படியானால் இறைவார்த்தைக்கும், ஏனைய புத்தகங்களுக்கும் என்ன வித்தியாசம்?

இறைவார்த்தைக்கான தனித்துவம் பௌதீக வைத்திருத்தலிலும் பேணப்பட வேண்டும். அரங்கேற்றம் செய்யப்பட வேண்டும். ஆலயத்தில் பரிசுத்த பகுதி (Sanctuary) போன்று வீட்டிலும் வேண்டும். வசதி இருந்தால் ஒரு தனி அறை அல்லது ஒரு சிறு பகுதி இதற்காக ஒதுக்கப்பட வேண்டும். புதிய வீடுகள் அமைப்பின்போது இதற்கான ஒரு பகுதியைத் திட்டமிட்டுக்கட்டல் நம்மை இறைவார்த்தையின் மக்களாக அடையாளப்படுத்தும். அவ்விடயத்தைத் தூய்மையின் இருப்பிடமாகப் பேணலும் நம்மோடிருக்கின்ற இறைப்பிரசன்னத்தை வலுப்படுத்தும்.

**இரண்டு: இறைவார்த்தையை ஆன்மீக (உணர்வு) ரீதியாக வைத்திருத்தல் (Spritual Ownership).**

இது உள்ளத்தோடும், உணர்வுகளோடும் சம்மந்தப்பட்டது. நம்மில் பலருக்கு வாழ்வில் பல்வேறு விடயங்கள் உயர் இலட்சியங்களாகக் கோவில் கொண்டிருக்கின்றன. பிள்ளைகள், இளைஞர்கள், கணவன் மனைவி, தாய் தந்தை என அவரவர் நிலைக்கேற்ற குறிக்கோள்கள் மேலோங்கி நிற்கின்றன.

பிள்ளைப் பருவத்தில் - நல்ல கல்வி

இளைஞரிடம் - நல்ல தொழில் வாய்ப்பு, காதல் - பொருத்தமான வாழ்க்கைத் துணை.

கணவன் மனைவியிடம் - மகிழ்வான வாழ்வு, பிள்ளைச் செல்வங்கள்.

தாய் தந்தையரிடம் - பொருளீட்டல், பிள்ளைகளின் கல்வி – எதிர்காலம், திருமணம்.

இவை எல்லாம் தவறானவை அல்ல. மனித வாழ்வின் கடமைகளும் பொறுப்புக்களும்தான். இவற்றை எல்லாம் நிறைவு செய்யும்போது இறைசித்தத்தையே நிறைவுசெய்கின்றோம், எமது நிலைக்குரிய பொறுப்புக்களை நிறைவுசெய்கின்றோம் அப்படியானால் இந்த வாழ்வு நீரோட்டத்தில் இறைவார்த்தையை எங்கே அடையாளப்படுத்துவது? அல்லது எப்படி இனம் காண்பது?


இப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இறைவார்த்தை ஒளியில் வழிகாணும்போது - இறைவார்த்தை வழியில் பூரணத்துவப்படுத்தும்போது அங்கு இறைசித்த நிறைவேற்றம் சிறப்பாக அமையும். இதுவே இறைவார்த்தையை நாம் உள்ளத்தில் உணர்வுகளில் வைத்திருப்பதாகும் - வாழ்வதாகும்.

இறைவார்த்தையை நமக்குள் நிலையாக வைத்திருப்பதற்கு நாம் அதை அறிந்திருத்தல் அவசியம். அதை வாசிக்காதுவிட்டால் - யோசிக்காதுவிட்டால் நாம் அறிந்திருக்க முடியாது. நாம் இறைவார்த்தையை வாசிக்கிறோமா? நாம் ஒவ்வொருவருமே தனித்தனியாக நமக்கு நாமே விடைசொல்லிக்கொள்ள வேண்டும். இருப்பினும் நமக்காக இறைவார்த்தையை வாசிப்பது, போதிக்கப்படுவது எங்கே? எப்போது?

ஆலயத்திலே வழிபாட்டு வேளைகளிலே – திருச்சடங்குகளின்போது இறைவார்த்தை மக்களுக்குப் பகிரப்படுகின்றது. சிறப்பாகத் திருப்பலியில் - நாளாந்தத் திருப்பலியில் இரு வாசகங்களும் ஞாயிறு திருப்பலியில் மூன்று வாசகங்களும் நமக்கு இறைவார்த்தையையே தருகின்றன. இந்த இறைவார்த்தைகளைத் தழுவியதாகவே அன்றைய சிந்தனைகளும், மறைபோதகத்திலே தரப்படுகின்றன.

இவை யாவும் கேட்டலோடு மட்டும் நின்றுவிட்டால், உணர்வுபூர்வமாக உள்வாங்கப்படாவிட்டால், நம் வாழ்வில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாவிட்டால் நாம் வழிபடும் கிறிஸ்தவர்களாகவே இருப்போம். வாழும் கிறிஸ்தவர்களாக மாட்டோம். இறைவனும், இறைவார்த்தையும் கோவிற் சுவர்களுக்குள்ளேயே அடங்கிவிடும்.

வாசிக்கப்படுகின்ற வார்த்தைகளைத் தியானித்தால், உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொண்டால், நாம் அதை வாழ முயற்சிப்போம். உதாரணமாக, "நீ பலிசெலுத்தச் செல்லும்போது உன் அயலவன் ஒருவன் உன்னோடு கோபமாக இருக்கின்றான் என உணர்ந்தால் உன் பலிப்பொருளை பீடத்திலே வைத்துவிட்டு முதலில் அவனுடன் உறவாடச் செல்" எனக் கூறுகின்ற இறைவார்த்தையை வாழ முயற்சித்தால் நமக்கு எந்தக் பகைவனும் இருக்கமாட்டான். நாமும் எவருக்கும் பகைவராக இருக்கமாட்டோம்.



இறைவார்த்தை அங்கு வாழப்படத் தொடங்கிவிட்டது என்றாகிவிடும்.

இதனால் முதலில் பலனடைவது நாமாகவே இருக்கும். நம் மனதில் தெய்வீக அமைதி ஆட்சி செய்யத் தொடங்கும். நாம், நம் குடும்பத்தில் ஒவ்வொருவரையும் அவரவர் பெலவீனங்கள், திறமைகளுடனும் குறைகள் நிறைவுகளோடும் ஏற்றுக்கொள்ள ஆரம்பிப்போம். இது நமது குடும்பத்தில் மகிழ்வையும், அமைதியையும் தரும். இதுபோன்று ஒரு சமூகத்தில் பலர் வாழத் தொடங்கினால் அச்சமூகம் இறைவாத்தைச் சமூகமாக மாறும். ஆவியின் கொடைகள் என்றும் நிறைவாக அச்சமூகத்திலே தங்கும். சமூக அமைதி நிலைக்கும். இறைப்பிரசன்னத்தில் வாழும் சமூகமாக மாறி மகிழ்ச்சி நிறைந்திருக்கும். இவைதான் இறைவார்த்தையை வாழ்வதால் கிடைக்கும் பயன்கள்.

மார்கழி மாதம் மகிழ்ச்சி குடிகொள்ளும் காலம். கிறிஸ்மஸ் விழாவும், புதுவருடப் பிறப்பும் நம் எண்ணத்தில் நடைமுறைகளில் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கச் செய்யும். விழாக்கள், பலவித வண்ண ஆடை, அணிகள், பரிசுக்கள் என்பன நம்மை வந்துசேரும்போது அவற்றைப் பற்றி – அவற்றின் வண்ணம், பெறுமதிபற்றி எத்தனை நண்பர்கள் மற்றும் உறவினர்களோடு பகிர்ந்துகொள்கின்றோம்.

இறைவார்த்தையை வாழ்ந்து சுவைத்த அனுபவங்கள் - இறைபிரசன்னத்தை உணர்ந்து மகிழ்ந்த சந்தர்ப்பங்கள் நம்வாழ்வில் நிறையவே உண்டு. அந்த அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்துகொள்கின்றோமா? அப்படி நாம் பகிர்வோமேயானால் அயலவரோடு புதிய இறையுறவைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பமாக அது அமையாதா?

நாம் நம் நண்பர்களை உறவினர்களைச் சந்திக்கும்போது எத்தனை விடயங்களைப் பேசி மகிழ்கின்றோம். எண்ணிப்பார்த்தால் அவற்றில் பல செய்திகள் தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படுவதால் எந்தப் பயனும் யாருக்கும் விளைவதில்லை. வெறும் வெற்றுப் பேச்சுக்கள். இவற்றிற்குப் பதிலாக நாம் இறையனுபவங்களை, இறைவார்த்தை அனுபவங்களைப் பகிர்ந்து வாழ்ந்தால், ஆரோக்கியமான இறையுணர்வு மிகுந்த சமூகமாக நாம் வாழும் பங்கு மாறுமல்லவா? ●

சிறுகதை

# நூலில் தொங்கும் விருதுகள்

*2007ம் ஆண்டு நடைபெற்ற கலைப் பெருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற திறந்த பிரிவுக்கான சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சிறுகதை.*

- அ. மன்னார்மணி -

மேல்கூரை வழியாக வானம் நன்றாகவே தெரிந்தது. கார்மேகங்கள் விரைவாக பயணிப்பது மழை வருவதற்கான கட்டியம் கூறுவதுபோலிருந்தது. காற்றும் சற்று வேகமாக சுழன்று அடித்து மேல்ஓலைக் கூரையை தூக்கித்தூக்கி விட்டுக்கொண்டிருந்தது. மழை ஒழுக்கில் நனைந்துவிடப் போகின்றதே என வீட்டு மூலையில் குவித்துவைத்திருந்த தனது ஆக்கங்களைப் பார்த்துப் பார்த்து ஒழுகாத பக்கமாக எடுத்து அடுக்கிக்கொண்டிருந்தான் வசந்தன்.

கொழும்பு, வெள்ளவத்தையில் சைவக்கடையொன்றில் சிப்பந்தியாக வேலை செய்துகொண்டிருந்த காலத்தில் எழுதிய கவிதைகள் சில அவன் கண்ணில் பட்டது.

"கற்பனையை ஆரம்பிச்சாச்சா? கதை கவிதையென்றாக் காணும். இதா உங்களுக்கு சோறுபோடப் போகுது. மழையும் வரப்போகுது. வீடு மேயாம எல்லாம் நனைஞ்சு தொலையப் போகுது..."

அவனது மனைவி கீதா வழமையான கீதத்தைப் பாடத்தொடங்கிவிட்டாள். ஏ. எல். வரைக் கல்வி கற்ற வசந்தன் வீட்டின் வறுமை காரணமாக வேலைக்காகக் கொழும்புக்குச் சென்றிருந்தான். கதை, கவிதை அவனது பொழுதுபோக்கு மட்டுமல்ல, அவற்றைத் தனது இலட்சிய வேள்வியாக ஈடுபடுத்திக் கொண்டான். ஏதோ ஒரு சீர்திருத்தக்கரு அவனது ஆக்கங்களில் அடங்கியிருக்கும்.

அவனது பெற்றோரின் அழைப்பின்பேரில் இயற்கை வளம் சூழ்ந்த தனது சொந்த ஊரான செந்நெல் கிராமத்தை வந்தடைந்தான். பருவ காலத்து வேளாண்மையை நம்பி வாழ்ந்த வசந்தன் தனது சொந்த மைத்துணியான கீதாவை மனங்கொண்டு, இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையானான். வாழ்க்கைச் செலவு ஏற்றத்தில் அவனது உழைப்பிற்கான ஊதியம் போதவில்லை, வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்க முடியாது அவதியுற்றான். இருப்பினும் அவனது இலக்கியச் சிந்தனை சிறகடித்தது. எழில் கொஞ்சும் கிராமத்து வாழ்க்கை இலக்கிய வேள்விக்குத் தீனி போட்டது.

கதை கவிதைகளில் மட்டுமல்ல, விழாக்களில் அவனது மேடைப் பேச்சுக்களிலும் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் மிளிர்ந்து விளங்கும். வண்ணத் தமிழை அள்ளியெடுத்து வடிவழகாய்க் குழைத்தெடுத்துப் பேசுவான். கவிதை நயம் சொட்டும் தென்றலையொத்த அவனது மேடைப் பேச்சுப்பற்றி அறிந்த அப்பிரதேசத்தின் ஏனைய கிராமத்தவர்களும் அவர்களது விழாக்களிலே பிரதம பேச்சாளராக அழைத்துச் சிறப்பித்தனர்.

இவனது ஆக்கங்கள் ஆரம்பத்தில் சர்ச்சையை உண்டாக்கி சலசலப்பை ஏற்படுத்தினாலும் இறுதியில் ஒரு சமூகத் தீர்வைக் காண ஏதுவாய் அமையும். அதை நினைந்து அவனது கவிதா நெஞ்சம் புளகாங்கிதமடையும். அந்த இலக்கிய வெற்றியை தனது இலட்சிய வெற்றியாகக் கருதினான். இலக்கியத்தால் சமூகமாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற உறுதிப்பாட்டிற்கு வந்தான்.

வீட்டின் பக்கமாக செழித்துச் சடைத்து நின்ற மாமரத்திலிருந்து இரு மாங்குயில்கள் எதிரும் புதிருமாக இருந்து இசை பாடிக்கொண்டிருந்தது அவன் காதுகளுக்கு இதமாக இருந்தது. வாடைக்கு எதிர்ப்புறமிருந்து வீசிய காற்று கருக்கட்டிய மழைமேகங்களை படிப்படியாகக் கலைத்துவிட்டிருந்தன. ஆத்மார்த்தமாக இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டான்.

அவனது இரு பிள்ளைகளும் மாமரத்திலிருந்து அணில் கோந்தி விழுந்த மாங்கொட்டைகளை ஒன்றுசேர்த்து அடித்து விளையாடிக்கொண்டிருந்தனர். அவனது தகப்பன் சூசைமுத்தர் மண்வெட்டியால் வளவுக்குள் முளைத்துச் செண்டாகியிருந்த புற்பற்றைகளை துப்பரவாக்கிக்கொண்டிருந்தார். கீதா மீண்டும் சத்தம்போடத் தொடங்கினாள். "ஆண்டவன் செய்த உதவி வந்த மழையும் ஒரு மாதிரிப் போயிட்டுது. எங்கேயாவது போய் கடன்பட்டாவது கிடுகு வாங்கி வந்து இந்த வெறிப்போடையாவது மேஞ்சுபோடுங்க. பிள்ளைகள் வீட்டுக்குள்ள ஈரத்துக்குள்ள கிடக்கப்போகுதுகள். கண்டறியாத கதை கவிதை..." வாய் திறந்தால் விபரீதமாகுமோ என்று மௌனியானான் வசந்தன்.

குசினி அடுப்புச் சாம்பலுக்குள் சுருண்டு கிடந்த அவனது வீட்டு நாய் வள் வள்ளென்று ஏறிப்பாய்ந்தது. குரைத்த சத்தத்தைக் கேட்டு கீதா தனது ஓங்கார ஒலிகளை நிறுத்திக்கொண்டாள். அப்பிரதேசத்து தூரத்துக் கிராமமொன்றின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வசந்தனைத் தேடி அழைப்பிதழுடன் வந்திருந்தார். தங்கள் கோயில் திருவிழா அன்று இரவு நாட்டுக் கூத்து நிகழ்வாம். அன்றைக்கு சிறப்புரையாற்ற வரும்படி அழைப்பு.

வறுமையைச் சாட்டியும் மறுக்கமுடியாத நிலையில் அழைப்பை ஏற்றுக்கொண்டான். விவசாயத்தையே வாழ்க்கை ஆதாரமாகக் கொண்டு குளங்களை அண்டி உருவான குடியிருப்புக்கள்தான் அப்பிரதேசக் கிராமங்கள். எவ்வேளையிலும் இயற்கை எழில் சூழ அமைதியாகத் தோற்றமளிக்கும் அப்பிரதேச மக்கள், தங்கள் கோயில் திருவிழாக்களையொட்டி, பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்தை நாடகமாக்கி ஆடிக்காண்பிப்பார்கள்.

மத அனுஷ்டானங்களோடு பின்னிப்பிணைந்து பாரம்பரியப் புலவர்களால் இயற்றப்பெற்ற இந்நாட்டுக் கூத்துக்களை நிண்ணயமாக ஒறுத்தல் முயற்சிகளோடு பாடினால் மாதமும் மாரிபொழிந்து செந்நெல் விளையும் என்பது அப்பிரதேச மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

விழாவிலிருந்து வீடுவந்து சேர்ந்ததும் இன்ப அதிர்ச்சி ஒன்று அவனுக்குக் காத்திருந்தது. அவன் எழுதி வெளியிட்டிருந்த கவிதை நூலொன்றுக்கு சாகித்தியப் பரிசு கிடைத்திருந்தது. அப்போதுதான் அவன் மனைவி கீதா லேசாகச் சிரித்தாள். அடுத்தநாள் கொழும்பில் ஏற்பாடாகியிருக்கும் விழாவில் வைத்து விருதும் பணப்பரிசும் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

கையில் ஒரு சதக்காசும் இல்லாத நிலையில் எப்படிக் கொழும்பிற்குப் போவது... அவரது கவலை மனைவிக்குப் புரியாமலா இருக்கும்...?

இந்தாங்க இந்தத் தோட்டை இலுப்பையடிவளவு அன்னம்மாக்காவிடம் ஈடுவைத்து காசுவேண்டி முதல்ல கொழும்புக்குப் போய் பரிசு வாங்கிக்கிண்டு வாங்க..." என்று கூறியபடியே தனது ஒரு காதில் கிடந்த பவுண் தோட்டைக் கழற்றிக் கொடுத்தாள்.

அவ்வாறே ஈடுவைத்துப் பணத்தைப் பெற்று கொழும்பிற்குச் சென்று சாகித்திய விழாவிலே விருதையும் பணப்பரிசையும் பெற்று ஊருக்கும் வந்து சேர்ந்துவிட்டான். தனது கவிதை இலக்கியத்திற்குக் கிடைத்த வெற்றியாகக் கருதி பிறவிப்பயனை அடைந்துவிட்டதாக உவகைகொண்டான். கிடைத்த பணப்பரிசிலைக் கொண்டு கிடுகு வாங்கி ஒருவாறு வீட்டை வேய்ந்து முடித்தான். விருதினை எந்நேரமும் பார்க்கக்கூடியதாக, எலிகள் வெட்டி விடாமல் வீட்டு முகட்டு வளையில் நூலினால் கட்டித்தொங்க விட்டான்.

வசந்தன் சாகித்திய விருதுபெற்ற செய்தி அப்பிரதேசம் முழுவதும் பரவியது. பத்திரிகைகளிலும் அவனது புகைப்படத்துடன் செய்தி வெளியாகியிருந்தது. அப்பிரதேச கலாச்சாரப் பேரவையினால் அவனைப் பாராட்டிக் கௌரவிக்கத் தீர்மானித்தனர். அவனது சொந்த ஊரான செந்நெல் கிராமத்திலே அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருக்கும் பாரம்பரிய நாட்டுக்கூத்து மேடையிலே கௌரவிப்பதென ஏற்பாடாகியிருந்தது.

சொன்னபடி அப்பிரதேச மக்கள் வசந்தனின் வீட்டுவளவில் ஒன்றுகூடினார்கள். குளக்கட்டுப் பக்கமாக அவனது வீடு அமைந்திருந்தது. குளப்புலவு சிறுபோக வேளாண்மைப் பயிர்கள் பச்சைப் பசேலெனத் தோற்றமளித்தமை கண்களுக்கு மிகவும் ரம்மியமாயிருந்தது. மாலைக் கதிரவனின் ஒளிக்கீற்று நிரம்பி வழியும் நிலையில் அசைந்துகொண்டிருக்கும், குளத்து நீரில் பட்டுத்தெறித்தது. அதில் தவழ்ந்து வரும் தென்றல் காற்று அங்கு கூடியிருந்த மக்களை அணைத்தெடுத்து புத்துணர்ச்சி ஊட்டியது. வேட்டி உடுத்து சால்வையால் தலைப்பாகை கட்டி, மத்தளமடித்து "மா மனை தன்னை நாடியே... வனசமுக மா மயிலே..." போன்ற நாட்டுக் கூத்துப் பாடல்களைப் பாடி, வசந்தனை விழா மேடைக்கு அழைத்துச் செல்லும் காட்சி எல்லோர் மனங்களையும் தொட்டது.

குளக்கட்டு நெடுகே செழித்து வளர்ந்து சடைத்து நின்று மருத நிலச் சூழலை நினைவுறுத்தும் மருத மரங்கள் இடையில் வானோங்கி நிற்கும் இலுப்பை மரம், பூச்சீசன் நறுமணம் மூக்கைத் துளைத்தது. சின்னவனாயிருக்கும் காலத்தில், தினமும் விடியப்புறம் அம்மா எழுப்பி ஓலைப் பெட்டிக் குட்டானைத் தந்தனுப்பி, இதே இலுப்பை மரத்தின்கீழ் குந்தியிருந்து, வெள்ளைப் புடவை விரித்தாற்போல் கொட்டிக் கிடக்கும் இலுப்பப்பூக்களை அவசர அவசரமாகப் பொறுக்கி, அம்மாவிடம் கொடுத்து பாணி காய்ச்சி கஞ்சியுடன் சாப்பிட்ட அந்த நினைவுகள் அவன் நெஞ்சை நிறைத்தன. ஊர்ச்சனம் மேடையை வந்தடைந்தது.

சம்பிரதாயபூர்வமாக பிரமுகர்களால் குத்துவிளக்கேற்றி விழா ஆரம்பமானது. பலரும் பலவாறாகப் புகழ்ந்து பேசினார்கள். ***கவித்தென்றல்*** எனப் பட்டமளித்து அப்பிரதேச பிரமுகர் ஒருவரால் பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்க விருது அணிவிக்கப்பட்டது. பிறந்த மண்ணின் மக்களால் வழங்கப்பட்ட தங்க விருதை இலக்கியம் மூலம் இலட்சியத்திற்குக் கிடைத்த வெற்றியாகக் கருதி அதனை ஒருதரம் முத்தமிட்டான். தொடர்ந்து, முழு இராக் கதையாகப் பாடப்பெற்ற நாட்டுக் கூத்துபாடி ஆடப்பட்டது. அதில் வசந்தன், மங்கள இராசாவிற்கு நடித்திருந்தான். கிழக்கு வெளித்துவர, அன்றைய நாட்டுக் கூத்தின் இறுதிக்கட்டமான மங்களம் இடம்பெற்றது. ஏடு கட்டப்பட்டது. நடிகர்கள் அதே வேஷங்களுடன் பக்கமாக அமைந்திருந்த கோயிலுக்குள் சென்று வழிபட்டு பின் வேஷங்கலைத்து வீடு திரும்பினர்.

வசந்தன், மனைவி பிள்ளைகள் தங்கப்பதக்க விருதை எடுத்து ஒன்றரைப் பவுண் மட்டில் இருக்குமெனக் கூறிக் குதூகலித்தனர். "என்ர கழுத்தும் மூழியாக் கிடக்கு. ஈடுவைச்ச என்ர ஒரு காதுத் தோட்டையும் எடுக்கவேணும். திருநாளும் வருது. இந்தப் பதக்கத்தை அழிச்சு ஒரு சின்னச் சங்கிலியும் செய்ய வேணும்." இது கீதாவின் கோரிக்கை. பள்ளிக்கூடத்திற்கு ஒவ்வொரு நாளும் நடந்துபோறதால் லேட்டாப் போகுது. கட்டாயம் எனக்கு ஒரு சைக்கிள் வாங்கவேணும். மூத்தவன் அடம்பிடித்தான். எனக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போடறதிற்கு சப்பாத்தில்லை. அழுது கொண்டே கேட்பான் இளையவன்.

நினைவுச் சின்னமாகக் கிடைத்த இந்தத் தங்கப் பதக்கத்தை நான் செத்தாலும் என் நினைவாக வைத்து பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை. இதை ஒருகாலமும் அழிக்கக் கூடாது. வசந்தன் சூளுரைத்தான். அவலக் குரலொன்று கேட்டு வெளியில் வந்து பார்த்தான். வேலை செய்துகொண்டிருந்த அவனது தந்தை மயங்கி விழுந்து கிடந்தார். அவசர சத்திர சிகிச்சை செய்யக்கருதி கொழும்பிற்கு கொண்டுசெல்லும்படி வைத்தியர்கள் பணித்திருந்தனர். வேறு வழியின்றி தங்கப் பதக்கத்தை ஈடுவைத்து வைத்தியச் செலவை ஈடுசெய்து, பின்னர் அதனை மீட்டெடுத்து வைத்துக்கொள்ளலாம் என நினைத்தான். அப்பணமும் செலவுக்குப் போதாததால் அதனை விற்று தந்தையைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

தம் எதிர்காலக் கனவுகள் சிதறடிக்கப்பட்ட நிலையில் வசந்தன், மனைவி, பிள்ளைகள் அதிர்ச்சிக்குள்ளானார்கள். தனது ஒரு காதின் தோடு அணிந்திருந்த காதுத் துவாரம் தூர்ந்து போகாதிருக்க வேப்பங்குச்சியெடுத்து காதுத்துவாரத்தில் செருகிக் கொண்டாள் கீதா. குப்பை மேட்டில் வீசி எறிந்திருந்த தனது பிய்ந்த சப்பாத்துக்களைத் தேடி எடுத்து, கழுவித் துடைத்து, ஊசிநூலினால் தைத்து, அடுத்தநாள் பள்ளிக்கூடம் செல்வதற்கு அணியவென வெண்சோக்குக்கட்டியை எடுத்து பூசிக்கொண்டிருந்தான் இளையவன். நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்படவேண்டிய தங்கப்பதக்க விருதை இழந்தநிலையில், நூலில் தொங்கும் விருதுகளாகத்தான் நம் பிரதேசத்து இலக்கியவாதிகளின் நிலையும் உள்ளதே என வேதனையுற்று வசந்தனது இதயம் மௌனமாக அழுதுகொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

## இளைஞர் மொழிவு

# மனத்துணிவை நோக்கி



சவால்களும், பிரச்சினைகளும் மலிந்து கிடக்கும் இன்றைய உலகில் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு மனத்துணிவு அவசியமாகும். எடுத்த காரியத்தை விடாமுயற்சியுடன் செய்து முடிப்பதற்கு வேண்டிய பலமே மனத்துணிவாகும். உடல் திண்மையுடையதாக இருந்தால் அதை உடல் வலிமை என்கிறோம். பிரச்சினைகள் திடமானதாக இருந்தால் மனவலிமை என்கின்றோம். பிரச்சினைகள் மத்தியில் நீச்சலடிப்பதற்கு உடல் வலிமையைவிட மனவலிமையே இன்றியமையாததாகும். மனத் துணிவைப் பெறுவதற்கு தெளிவு, உந்துசக்தி, அமைதி, அர்ப்பணம், திறன், பொறுமை என்பன அடிப்படைகளாக விளங்குகின்றன.

"பொறுமை என்பது ஒரு கசப்பான காய், அது கனிந்தால் இனிய பழமாகும்" என்பது அறிஞர் கருத்து. கொப்பனிக்கஸ் தனது கண்டுபிடிப்பை நிறைவுசெய்ய முப்பது ஆண்டுகள் தொடர்ந்து செலவழித்தார். சாள்ஸ் டார்வின் தனது பரிணாமக் கொள்கையை ஆராய்ந்து முடிக்க இருபது ஆண்டுகள் தொடர்ந்து செலவழித்தார். இவர்களை பல இன்னல்கள், இடையூறுகள் குடும்பப் பிரச்சினைகள் எதிர்நோக்காமல் இருந்திருக்குமா? அவர்களின் ஆய்வில் எதிர்ப்புக்களும் தோல்விகளும் ஏற்படத்தான்செய்தன. இறுதிவரை அவர்களுடைய பொறுமைதான் அவர்களை மனவலிமையில் உயர்த்தி வெற்றிகாண வைத்தது. இடர்பாடுகள் எதுவரினும் எதையும் தாங்கும் இதயம் உடையவனே மனத்துணிவு மிக்கவன். மனதிலே அமைதியை இழந்தவன் மனவலிமையை இழந்துவிடுகின்றான். மனத்துணிவே விடாமுயற்சியின் நண்பன், மனத்தில் துணிவுள்ளவன் வீரன், துணிவில்லாதவன் கோழை என்றே மதிக்கப்படுகின்றான். முயற்சியைக் கைவிடாமலிருக்க ஒருவனுக்குத் தன்னம்பிக்கை தேவை. எடுத்த காரியத்தை என்னால் சாதிக்க முடியும் அதற்கு தேவையான சக்தியும் திறமையும் என்னிடம் உள்ளது என்ற நம்பிக்கை வேண்டும்.

வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள் வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் உயர்ந்த நோக்கத்தோடு செய்தால் சிறப்பான பயன்களைப் பெறமுடியும். சாதாரண ஏழையாக இருந்தும் பல எதிர்ப்புகள், கொலைப்பயமுறுத்தல்களுக்கு மத்தியிலும் பணக்காரவர்க்கத்திற்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டி அடிமைத்தனத்தை வென்றெடுக்க ஆபிரகாம் லிங்கனுக்குக் காரணமாக அமைந்தது அவரின் மனவலிமையும் அஞ்சாநெஞ்சமும்தான். பாரத நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராக அகிம்சைப் போராட்டத்தை நடத்தி சுதந்திரம்பெற வழிவகுத்தது காந்திமகானின் மனத்துணிவும் அஞ்சா நெஞ்சமுமே ஆகும். "நான் மனதில் பண்படும் நிலையை அல்லது சிறப்பியல்பை உருவாக்குவதற்கே முதலிடம் கொடுத்துள்ளேன்" என்றார் காந்தியடிகள்.

இன்றைய மாணவர்கள் எதிர்காலத் தலைவர்கள். இவர்களிடம் கோழைத்தனம் முற்றாக நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவரிடத்தும் மனத்துணிவை ஏற்படுத்த வேண்டியது பெற்றார், ஆசிரியர், சமூக நிறுவனங்களின் கடமையாகும். இன்று பாடசாலைகளில் மனத்துணிவை வளர்க்கும் பல சந்தர்ப்பங்கள் உண்டு. மாணவர்களிடத்து ஆளுமைப்பண்பு, தலைமைத்துவப் பண்பு ஆகியவை வளர்க்கப்படுதல் வேண்டும். மனத்துணிவு என்பது ஒருவனுடைய ஆளுமை அமைப்பின் ஒரு கூறாகும். தலைமைத்துவம் முற்றிலும் பிறவியில் வருவதொன்றல்ல. கல்வி, பயிற்சி, விடாமுயற்சியால் அதனை வளர்த்துக்கொள்ள முடியும். "தைரியமும் சுறுசுறுப்பும் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியூட்டும்" என்றார் ரஷ்யச் சிந்தனையாளர் தோல்ஸ்தோய்.

### பாடசாலைகளில் மனத்துணிவை வளர்க்கும் சந்தர்ப்பங்கள்:

- ❖ அறிஞர்கள், பெரியவர்கள், அரசியல்வாதிகள், மகான்கள், மனத்துணிவோடும் தைரியத்தோடும் விடாமுயற்சியோடும் செயற்பட்டு வெற்றியீட்டிய வரலாற்றைக் கதைகளாக் கூறுதல்.
- ❖ பட்டி மன்றங்கள், விவாதங்களில் பங்குகொள்ளும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- ❖ வகுப்புத் தலைவர்கள் பதவியை சுழற்சி முறையில் அனைத்து மாணவர்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்தல்.
- ❖ சமூக நிறுவனங்கள், அரச நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடுதல். இன்று உயர்தர மாணவர்களின் தனியாள், குழு ஆய்வுச் செயற்பாடுகள் இதற்கு வழிசமைக்கின்றன.
- ❖ காலைக்கூட்டங்கள், மன்றங்களில் நற்கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ❖ ஒவ்வொரு மாணவனும் தன் திறமையைத் தானே அறிந்து தன் வருங்காலத்தை ஒளிமயமானதாக அமைப்பது பற்றிய சிந்தனை உடையவனாக விளங்கி மனத்துணிவுடன் வாழ்வை வெல்லலாம்.

துணிந்து நில், துணிந்து செல் தோல்வி கிடையாது.

வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை
இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

# வாழ்வும் வழிபாடும்

தொடர் - 13

தருவது வலண்டின் ஜோசப்

## தெருக்களில் திருப்பலியா?

இன்று அருட்பணியாளர் பலர் கத்தோலிக்கக் கிஸ்தவ மக்கள் வாழும் தெருக்களில் அன்பியக்கூட்டங்களில் சில இறைமக்களின் வீடுகளில் திருப்பலி நிறைவேற்றுகின்றனர். இது சரிதானா? திருப்பலியின் மேன்மைக்கும் மறைபொருள் தன்மைக்கும் இதனால் பாதிப்பு ஏற்படாதா? என்று எத்தனையோ இறை மக்கள் கேள்விகள் எழுப்புகின்றனர்.

"இறைவன் மனிதர்களால் எழுப்பப்படும் கட்டடங்களில் உறைவதில்லை: மனிதர்களின் இதயங்களில் வாழ்கின்றார்" (தி.வெ 7:48). என்பது திருமறையின் அடிப்படைக்கொள்கை. "இயேசு ஆவியிலும் உண்மையிலும் ஆண்டவனைத் தொழும் புனித நிலைக்கே நம்மை அழைக்கிறார்" (யோவா. 4:24) என்பதை விவிலியம் தெளிவாகக் காட்டுகிறது. இயேசு தன்னையே ஆலயமாக, தன்னுடைய ஆவியானவரையே மக்களை ஒன்று கூட்டும் சக்தியாக இறைமக்களுக்கு இனங்காட்டியிருக்கிறார் (மாற் 14:58). எனவே கிறிஸ்தவ ஆலயம் என்பது இறை மக்கள் கூடுகின்ற இடம். இறைமக்களின் கூட்டமே ஆலயம்.

### மக்கள் கூடும் இடமே ஆலயம்

ஆதித்திருச்சபையில் 'ஆலயம்' என்பது மக்கள் கூடுகின்ற இடமாகத்தான் இருந்திருக்கின்றது. வீடுகளில்கூடி திருவிருந்து கொண்டாடிய செய்திகளை விவிலியத்திலேயே வாசிக்கின்றோம். முதன் முதலாக வீட்டு ஆலயம் கி.பி. 232 ஆண்டுதான் உருவாகியிருக்கிறது. வீடு மக்களின் வசதிக்காக ஆலயமாக உருமாற்றப்பட்டிருக்கிறது. யூத செபக்கூடப் பாணியில் அமைக்கப்பட்ட அந்த ஆலயம் இறைமக்கள் கூடுகின்ற இடம் என்றதொரு பண்பைத்தான் மையமாகக் கொண்டு திகழ்ந்ததே தவிர, தன்னிலேயே புண்ணியத் தலமாகக் கருதப்படவில்லை. காலப்போக்கில் உரோமை அரசின் அரங்கங்கள் ஆலயங்களாக உருமாற்றப்பட்டன. குருக்கள், பொதுநிலையினரிடமிருந்து பிரிக்கப்பட்டனர். 'புனித இடம், புனிதப் பொருட்கள்' என்ற பண்பாடு எல்லாம் தலைதூக்கத் துவங்கிவிட்டது.

இன்று கிறிஸ்தவ ஆலயங்கள் இறைமக்கள் கூடுவதற்கும், வழிபடுவதற்கும் பயன்படும் இடங்கள் என்ற பழைய கொள்கை புத்துயிர் பெற்றிருக்கிறது. அவர்கள் ஓர் இடத்தில் ஒன்று கூடுகின்றனர். (தி.ப. 2:1) என்பதுதான் முக்கிய இடம்பெற வேண்டுமேயொழிய குறிப்பிட்ட இடத்தில்தான் ஒன்றுகூட வேண்டும் என்ற கருத்து முக்கியமானதல்ல.

எனவே தெருக்களிலும், மக்கள் கூடுகின்ற அரங்குகளிலும் திருப்பலி நிறைவேற்றுவதில் தவறு இல்லை. மக்கள் இயேசுவின் உடலாக தன்னுணர்வுபெற வழிசெய்யும் எந்த இடமும் ஆலயமே! மக்கள் நடுவே இறைவன் இருக்கிறார் என்ற அனுபவத்தைத் தருகின்ற இடமே ஆலயம். தெருக்களில் கொண்டாடும் திருப்பலிகள் இத்தகைய உணர்வுகளைத் தருகின்றனவா என்று எண்ணிப்பார்க்க வேண்டிய பொறுப்பு மறைமாவட்டத்திற்கு உண்டு. சில சமயங்களில் திருமணம் போன்ற நிகழ்சிகளில் சொந்தப் பெருமைக்காக, குருக்களைக் கூட்டிவந்து திருப்பலி நிறைவேற்றுகின்ற நபர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். பணக்கார வீடுகளில் சென்று திருப்பலி நிறைவேற்றும் சோதனை காலங்காலமாக திருச்சபையின் பணியாளர்களுக்கு இருந்திருக்கிறது.

இன்று ஆலயத்திற்கு வரமுடியாத நோயாளிகளுக்காக வீடுகளில் திருப்பலி நிறைவேற்றுவது வரவேற்கப்படும் செயல். பங்குத்தந்தையின் அனுமதியின்பேரில் இந்தப்பணி செய்யப்படுதல் போற்றப்படும் செயலாக அமையும். இத்தகைய நற்செயலுக்கு யாரும் தடைசொல்லப் போவதில்லை. அதே சமயம், அரங்குகளிலோ, தெருக்களிலோ நிறைவேற்றும் திருப்பலிகளுக்கு ஆயர் அனுமதி பெறவேண்டும் என்பதை அண்மையில் வெளிவந்த திருச்சபையின் ஆவணம் வலியுறுத்துகிறது. மேய்ப்புப்பணிக் கண்ணோட்டமுள்ள எந்த ஆயரும் இதற்குத் தடைவிதிக்க மாட்டார். மக்கள் பங்கேற்பு, ஒற்றுமை, மக்களின் முயற்சிகள் என்ற முறையில் இத்தகைய செயல்களை ஆயர்கள் நிச்சயமாக ஊக்குவிப்பார்கள்.

### தேவை கவனம்

தெருக்களிலும், அரங்குகளிலும் நிறைவேற்றப்படும் திருப்பலிகளினால் பங்குத்திருச்சபைக்கு எந்தவிதப் பங்கமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது பணியாளர் மற்றும் இறைமக்களின் பொறுப்பு. ஞாயிறு திருப்பலி மற்றும் திருநாள், திருப்பலிகள் பங்கு மக்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பொதுவான இடத்தில் அமைய வேண்டும். தெருத்திருப்பலிகள் வைத்து பங்குத் திருப்பலியின் பங்கேற்பைக் குறைத்துவிடக்கூடாது.

தெருக்களில் நடைபெறும் திருப்பலிகளில் அனைத்துத்தரப்புப் பங்கு மக்களும் பங்கேற்க வாய்ப்பளிக்க வேண்டும். சாதியத் திருப்பலிகளாகவோ அல்லது குறிப்பிட்ட வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் திருப்பலியாகவோ அது மாறிவிடக்கூடாது. வீண் பெருமைக்காக நடத்தப்படும் திருப்பலிகளாக மாறிவிட எள்ளளவு இடம்கொடுப்பதும் தவறு.

ஆலயங்கள் கட்டுவதற்காகக் கோடி கோடியாய்ப் பணம் செலவிட்டு மக்களை இழுப்பதற்குப் பதிலாக, மக்களைக் கட்டியெழுப்புவதில் அதிக கவனம் செலுத்தி ஆலயங்களை மக்கள் கூடுகின்ற இடங்களாக வடிவமைப்பதே சிறந்தது. கண்ட இடத்தில் எல்லாம் சிற்றாலயங்களும், இந்துக் கோவில்களும், மசூதிகளும் பெருகி மக்களை பிளவுபடுத்தும் இந்தக் காலகட்டத்தில் 'மக்கள் கூடுகின்ற இடங்களே ஆலயங்கள்' என்ற புதிய இறைவாக்குச் சிந்தனையை மக்கள் மத்தியில் உருவாக்குவது நமது பணி.

### ஆலயங்கள் தேவையில்லையா?

இத்தகைய சிந்தனைகள் எழுகின்ற நேரத்தில் ஆலயங்கள் தேவையில்லை என்று சொல்வதாக யாரும் தவறாக நினைத்துவிடக் கூடாது. ஆலயங்கள் மக்கள் கூடுகின்ற இடங்களாக மாற வேண்டும் என்பதே நமது ஆதங்கம். நாம் கட்டிவைத்திருக்கும் ஆலயங்கள் அத்தனையும் இறைமக்களிடையே உறவையும் ஆன்மீக உயிரையும் வளர்க்கின்ற இடங்களாக அமையவேண்டும். ஆலய அர்ச்சிப்புச் சடங்கு முறையில்கூட, "இறைமக்களே ஆலயங்கள்" என்ற கருத்துத்தான் மைய இடம் பெறுகின்றது. புதிய ஆலயங்கள் அர்ச்சிக்கப்படுகின்ற நேரத்தில் மக்கள் சிறப்பான விதத்தில் நினைவுகூரப்படுகின்றனர்.

ஆலயங்கள் இறைமக்கள் பயன்படுத்தி இறையருள் பெறுவதற்கு ஏற்ற இடங்களாக அமைவது அவசியம். மேலைநாட்டுக் கட்டடக் கலைகளை அப்படியே இறக்குமதி செய்து கட்டப்பட்ட ஆலயங்கள்தான் நம்மிடம் அதிகம் உள்ளன. இப்போது புதிதாகக் கட்டப்படும் ஆலயங்கள்கூட மேலைநாட்டு வடிவங்களையே பிரதிபலிக்கின்றன.

நம்முடைய பண்பாடு, கலை வடிவங்கள், மக்களின் மனநிலைகள், பங்கேற்புத் திறன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆலயங்கள் அமைவது இன்றைய தேவை. தமிழகத்தில் இன்னும் சில ஆலயங்களில் சாதிய ரீதியாகப் பிரித்துவைக்கும் நிலை தொடர்வதாக சில கருத்துக் கணிப்புக்கள் சொல்லுகின்றன.

சில இடங்களில் பிரித்து வைக்கும் நிலை வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மக்கள் இயல்பாகவே பிரிந்து நிற்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகளும் வருகின்றன. பிரித்தாளும் பண்பை வளர்க்கின்ற அத்தனை ஆலய அமைப்புக்களும் மாற்றப்பட வேண்டும். ஆலயத்திற்கு வருகின்ற இறைமக்கள் நடுவே திருப்பணிகள் காரணமாக மட்டுமே சில வேறுபாடுகள் உண்டு. பாடகர் குழு ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் இருக்க முடியும். அருட்பணியாளர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தங்களுக்கென்று வைத்துக்கொள்கின்றனர். இது தவிர எந்தவித வேறுபாடுகளும் இருக்க முடியாது.

### ஆலயத்தில் சில அடையாளங்கள்

கிறிஸ்தவ ஆலயம் சில அடையாளங்களைத் தாங்கியுள்ளது. அந்த அடையாளங்களில் முதலிடம் பெறுவது திருச்சிலுவை. திருப்பலி கொண்டாட்டத்தில் முக்கிய இடம்பெறுவது திருச்சிலுவையே! இயேசுவின் கல்வாரிப் பலி இங்கு தொடர்கின்றது என்பதைக் காட்டும் அடையாளம் திருச்சிலுவை.



அடுத்த நிலையில் உள்ள நான்கு வகைப் பீடங்களைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். பலிப்பீடம், வாசக மேடை, திருப்பலிப் பொருட்கள் தயாரிப்பு மேசை, தலைமைப் பணியாளரின் இருக்கை ஆகியவை வெறும் பயன்பாட்டுப் பொருட்கள் மட்டுமல்ல, சீரிய அடையாளங்களும்கூட.

சில ஆலயங்களில் நற்கருணைப் பேழை ஆலயத்தின் மைய இடத்தைப்பெறுகிறது. வேறு சில ஆலயங்களில் தனியான ஒரு இடத்தில் ஆராதனை செய்யும் நோக்கத்தில் அதற்குரிய சூழலில் வடிவமைக்கப்படுகின்றது. நற்கருணைப் பேழை ஆலயத்தின் மைய இடத்தைப் பெறுவதே சிறந்தது என்று அண்மைக்காலத்து திருச்சபையின் பரிந்துரைகள் அமைந்துள்ளன.

### பாடகர் குழு

அண்மையில் கட்டப்பட்ட ஆலயங்கள் சிலவற்றில் பழைய முறைப்படி பல்கனியில் பாடகர் குழு அமைந்திருப்பது வேதனை தருகிறது. பாடகர் குழுவின் பணியே அனைவரையும் பாட வைப்பது. தேவையான உற்சாகமும் உதவியும் செய்து இறை மக்களைப் பங்கேற்க வைப்பது பாடகர் குழுவின் நோக்கம். அதற்கு ஏற்ப அனைவரும் பார்க்கின்ற வகையில் பீடத்திற்கு அருகில் பாடகர் குழு இருந்தால் அதுவே சிறப்பானது.

### திருமுழுக்குத் தொட்டி

ஆலயத்தில் உள்ள மற்றொரு சிறப்பான அடையாளம் திருமுழுக்குத் தொட்டி. இந்தத் தொட்டியிலிருந்து திருமுழுக்கு கொடுக்கப்படுகின்றது என்பது மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் நம்முடைய திருமுழுக்கை நினைவுகூர இது உதவுகிறது என்பதே இந்த அடையாளத்தின் தனிச்சிறப்பு.

உயிர்ப்பு திருநாளில் திருவிழிப்புத் திருப்பலியில் திருமுழுக்குத் தொட்டிக்குப் பவனியாகச் சென்று திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்துக்கொள்வதுதான் திருச்சபையின் வழக்கம். இன்று பல ஆலயங்களில் திருமுழுக்குத் தொட்டி இடத்தை அடைக்கின்ற ஒன்றாகக் கருதப்படுகின்றது. அதன் உண்மையான அர்த்தங்களை உணரும் நேரத்தில் அது வழிபாட்டிற்கே சிறப்புச் சேர்க்கும்.

### புனிதர்களின் திருவுருவங்கள்

கத்தோலிக்க ஆலயங்களை 'மாதா கோயில்கள்' என்று அழைப்பது மக்கள் வழக்கு. நமது ஆலயங்கள் அன்னை மரி, புனிதர்கள் திரு உருவங்களைத் தாங்கி நிற்கின்றன. இவை ஆன்மீக வாழ்வுக்குச் சிறந்த அடையாளங்கள்தான். வழிபாட்டில் அவற்றின் பங்கு என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

வழிபாட்டில் நாம் விண்ணகத் திருச்சபையோடு இணைகிறோம். புனிதர்களின் தோழமையில் இறைபுகழ் பாடுகின்றோம். புனிதர்களின் நினைவு இறைவனின் அரும் பெரும் செயல்களை அறிக்கையிட உதவுகின்றது அந்த அளவில் புனிதர்களின் திருவுருவங்கள் ஆலயத்தில் இடம்பெறவேண்டும். வழிபாட்டுக்கு வருகின்ற மக்களின் கவனம் முழுவதையும் ஈர்க்கின்ற வகையில், வழிபாட்டின் மேல்உள்ள கவனத்தையும் பங்கேற்பையும் சிதறடிக்கும் வகையில் அவை அமையக்கூடாது. சில ஆலயங்களில் வழிபாட்டின் நேரங்களில் புனிதர்களின் திருவுருவங்களுக்கு மின்னிமறையும் மின் விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர். இவை தவிர்க்கப்பட வேண்டும்.

### ஆலயமணி

ஆலய மணி அருமையான ஓர் அடையாளமாக உள்ளது. இறை மக்களை வழிபாட்டிற்கு அழைப்பதற்கும், வழிபாட்டின் புகழ் கீதங்களோடு இணைவதற்கும் சிறப்பான விதத்தில் பயன்படுகின்றது. அதன் பயன்பாடும் திருவழிபாட்டின் இயல்போடு ஒன்றிணைந்து செல்ல வேண்டும். வழிபாட்டிற்கு அணி செய்யவும், வழிபாட்டின் முக்கிய நேரங்களில் பங்கேற்பை வலுவுள்ளதாக மாற்றவும் அவை பயன்படுவது சிறப்பு.

இன்னும் எத்தனையோ அடையாளங்களில் ஆலயங்களை நாம் சிற்ப்பிக்கலாம். ஆனால் அத்தனை அடையாளங்களும் திருவழிபாட்டில் மக்களை இணைக்கும், பங்கேற்பை அதிகரிக்கும் ஒருங்கிணைந்த கலை வடிவங்களாக அமைவதே சிறப்பு.

(தொடரும்...)

# நெஞ்சினில் நிறைந்தவர்

## மேரி பஸ்ரியன் அடிகளார் பற்றிய நினைவுகள்

மேசி பற்றிக்
மறையாசிரியர்,
மன்னார்

"நல்லவர்கள் இவ்வுலகில் நீண்டநாள் வாழ்வதில்லை" வரலாற்றில் 'இடம்பிடித்தவர் அருட்பணி. மேரிபஸ்ரியன். சாவை வென்ற சத்தியன் வழியில் நித்தமும் பணிசெய்தவர். 1975இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு தான் பிறந்த யாழ்நகர் விட்டு எம் மன்னார் மண்ணை விரும்பி பணிவாழ்வுக்காய் இங்கு வந்த குருமணியாவார்.

பல ஆண்டுகளுக்கு முன் இவர் தந்தையார் மன்னார் விவசாயத் திணைக்கள அதிகாரியாகப் பணிபுரிந்தவர். எனவேதான் இவர் குடும்பம் நாம் வாழும் பகுதியாகிய சின்னக்கடையில் குடியிருந்தனர். இறை அன்பும் பிறரன்பும் கொண்ட ஒரு சிறிய குடும்பம். எண்ணிப் பார்க்கையிலே நெஞ்சம் இனிக்கிறது. ஆடம்பரத்தை விரும்பாத அடக்கமான அன்பிற்கு எடுத்துக்காட்டான சிறப்பானதொரு குடும்பம்.

நம் நற்குரு பஸ்ரியனைத் தந்த உன்னத குடும்பம் அது. பெற்றாரின் பண்பினைத் தன்னில் பிரதிபலித்த அரும் வள்ளல் அவர். முத்தான மூன்று மக்களை உலகிற்கு அளித்து அதில் முதல் கனியான மகனை இறைபணிக்கு அளித்தனர் என்றால் அவர்களின் தியாகம் நிறைந்த வாழ்விற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

எனவே குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு சில நாட்களுள் அதாவது 1976இல் தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையான 6 மாதங்களாக மன்னாரில் உதவிப்பங்குத் தந்தையாகப் பணிபுரிந்தார். வார்த்தையாலே வாலிபரை தன்வசப்படுத்தி அவர்களை இறைவழியில் நடத்திச்சென்ற ஒரு அன்பர் இவர். எப்போதுமே அவரோடு சில இளைஞர் கூட்டம் இருக்கும்.

அவர் பணியாற்றிய காலப்பகுதியில் மன்னார் நகரிலே மிகவும் பயங்கரக் காய்ச்சல் பரவியது. அக்கட்டத்தில் எம் குடும்பத்திற்கு வந்து எம் அனைவருக்கும் தூய யோசவாஸ் போன்று அன்புப்பணிபுரிந்து எம் குடும்பத்தின் இடர்தீர்த்த பாசமான குருமணியாவார்.

எம் தந்தைக்கு ஒரு மகனாக, எமக்கு பாசமிகு சகோதரனாக, துன்பத்தில் நண்பனாக, எம் குடும்பத்தினருக்கு வருத்தம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் உதவிய வள்ளலை எம்மால் மறக்க முடியாது.

எம் குடும்பத்தில் இரு சகோதரிகள் இறந்தவேளையிலே நம் கிறிஸ்துவின் அன்பினை குடும்பத்தில் பிரதிபலிக்கச் செய்த மாணிக்கம் என்றுகூடக் கூறலாம். மேரி பஸ்ரியன் என்று அவருக்கு இட்ட பெயர் எத்துணை பொருத்தமானது! மரியின் நாமத்தைக் கொண்டதனால் மரியாளின் அத்தனை பண்புகளும் அவரில் மிளிர்ந்தன. அவரின் சகோதரி ஆன் பற்றிமா என்னுடன் ஒன்றாகப் படித்தவர். என்னுடைய உற்ற சிநேகிதி. இதைப்பற்றி இன்று நினைக்கையிலே உள்ளம் மகிழ்கின்றது. சகோதரனை நினைக்கையிலே அவனது குறும்புச் செயல்கள் எம் கண்முன்னே நிழலாடுகின்றன. அக்குடும்பமே ஒரு தனி அழகு, குதூகலமான குடும்பம் அது.

1980இல் மன்னாரில் முதல் முதல் மறையாசிரியருக்கான 3 மாதப்பயிற்சி நடந்தது. எனவே அந்த மாணவர்களை யாழ் நகருக்கு அழைத்துச்சென்ற வேளையிலே தந்தையவர்கள் மானிப்பாய் பங்கிலே பணியாற்றினார். எம் அனைவரையும் அன்போடு தனது பங்கிற்கு அழைத்து உணவளித்து உபசரித்து மகிழ்ந்த நிகழ்ச்சி நேற்றைய தினம் நடந்ததுபோல் உள்ளது.

மன்னார் மாவட்டம் புதிதாக மலர்ந்த வேளையிலே மீண்டும் மாற்றமாகி வங்காலைப் பங்குக்குரவராக வந்தார், அரும்பணி பல ஆற்றினார். கயவர்கள் கண்ணில் சிக்கிவிட்டார், எனவே அவர்கள் கொடூரமான முறையிலே அவரைப் பழிதீர்த்தனர்.

1985 தை திங்கள் 5ம் நாள்! அந்த நாள் ஏன் விடிந்தது என்பது பலருடைய கேள்வி. அந்த நாள் நம் விடிவெள்ளியாம் நம் அருள் ஒளியை இழந்த கறுப்பு நாள்.

அவர் சத்தியம் தவறாத வீரன். ஊழியப் பாதையிலே உயர்ந்து நின்ற ஒளிவிளக்கு. அவர் எம் மண்ணிற்கு சேவையாற்ற வந்தது நாம் செய்த பாக்கியமே.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 48

சொல்லின் செல்வர்
இளவாலை அமுது

## உலகில் செல்வாக்குள்ள பெண்மணி

ஆபிரிக்கக் கண்டத்தின் செங்கடல் அருகேயுள்ளது எத்தியோப்பியா நாடு. தாங்கமுடியாத கடும் வரட்சியினால் வடக்குப் புறத்தில் வாழும் இலட்சக்கணக்கான மக்களைப் பஞ்சம் அச்சுறுத்தியது. பலர் பஞ்சத்துக்குப் பலியானார்கள். அன்னை திரேசா கல்கத்தாவிலிருந்து கொண்டுசென்ற உணவுப் பொருட்களும், மருந்து வகைகளும் அங்கே உப்புப் போடவும் காணாது. வேறுபல இடர்தீர்க்கும் இயக்கங்களும் நிவாரணத் தொண்டில் ஈடுபட்டனர். ஆயினும் அவற்றிடையே ஒற்றுமையாக திட்டங்கள் இல்லாமையால் தடுமாற்றம் கூடிவிட்டது. மலைப்பாதைகளும், செப்பனிடாத வீதிகளும் உதவி நேரத்துக்குப் போய்ச் சேர்வதற்குத் தடைச் சுவர்களாயின. கல்கத்தாவுக்கு திரும்பிய அன்னை திரேசா, மேலும் எத்தியோப்பியாவிற்கு நெருக்கடி ஏற்படாதவாறு சகோதரிமாருடன் செப வேண்டுதல் செய்தார்.

அவருக்குள்ளே இருந்த சிந்தனைத் திரியை எதுவோ தூண்டிவிட்டது. உடனே அமெரிக்க ஜனாதிபதிக்கு எத்தியோப்பிய நிலைமையை விளக்கி எழுதினார். ஜனாதிபதி றீகன் அன்னை அவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டார். தனது சார்பிலும் அமெரிக்க மக்கள் சார்பிலும் நன்றி பாராட்டினார். உடனடியாக எத்தியோப்பியாவுக்கு வேண்டிய உதவிகள் அளிக்கப்படுமென்றும் அந்த நாட்டின் பெருமூச்சு நீங்கும் என்றும் உறுதியளித்தார். எத்தியோப்பியாவுக்கு உணவுப் பொருட்களும் மருந்து வகைகளும் விரைந்தன.

அந்த நாட்களில் இந்திய அரசியல் அமைப்பில் உயர்ந்த இடம்பெற்றிருந்த நெவின் சோலா என்பவர் அன்னையைக் கண்டு பகிடிபோல உண்மை ஒன்றினைக் கூறினார். "நீங்கள்தான் உலகில் இன்று ஆற்றலும் செல்வாக்குமுள்ள பெண் என்று நம்புகிறோம்" - என்றார். அன்னை சிரித்துக்கொண்டு, "அப்படி இருக்கவே நான் விரும்புகிறேன். அதனால் உலகம் அனைத்திலும் சமாதானத்தைக் கொண்டுவர முடியும்" என்றார். பாரத நாட்டில் பிரதமர் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி என்போரும் அன்னையிடத்தில் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனர்.

இந்தியாவில் மாத்திரம் அன்னைக்கு அரசியல் பீடங்கள் கதவு திறந்ததோடு எல்லாம் முடிந்துவிடவில்லை. வெளிநாடுகளிலும் அன்னை எங்கே சென்றாலும் பட்டினத்துப் பிதாக்களோ, அரசியல் சக்கரத்தில் உட்கார்ந்திருப்பவர்களோ அன்னையை வரவேற்கவும், அவருடைய தேவையை அறியவும் பின்நிற்பதில்லை. தன் சொந்த அலுவலாக வருவதில்லை என்றும் ஏழைகள் சார்பாக அவர் வருகிறார் என்றும் அவர்களுக்கு விளங்கும். அங்கே, அன்னை புகுந்தபோதே வழமையான ஆடம்பரங்கள் அடங்கிய, கொஞ்சநேரத்திற்கு மரியாதை கலந்த அமைதி உண்டாகும்.

பிரான்சிய அதிபர் மிற்றெரண்ட், பிரித்தானியப் பிரதமர் மேஜர், ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதிகள் றீகன், புஷ், கிளிங்டன், பெல்ஜிய நாட்டு மன்னர், ஸ்பானிய நாட்டு அரசர்... இவ்வாறு அரசியல் வானில் சுடர்விடும் தாரகைகள் எல்லாம் அன்னைக்கு உள்ளத்தில் ஆசனமிட்டிருந்தனர். அரசியல் தலைவர்களும் அரசும் நாட்டுக்கு இருக்கும் தலையிடியை அன்னையிடம் தெரிவிக்க அஞ்சுவதில்லை. பலர் அன்னையைத் தரிசிப்பதனால் தங்கள் மதிப்புக்கே சந்தனம் அரைத்துப் பூசிக்கொள்வதாயிருக்கும் என்பதை அறிவார்கள். நாட்டுத்தலைமையைச் சுமக்கும் சிலர், தங்கள் பிரச்சினைகளை உண்மையின்படி திறந்து பேசத்தக்கவர்களைச் சந்திப்பதில்லை.

அப்படிப்பட்டவர்கள் தங்கள் இதயத்தின் கதவைத் திறந்து அன்னையுடன் உரையாடுவார்கள். இளவரசர் சாள்ஸ் - டயானா என்போர் அன்னையின் அன்பிற்குரியவர்களாய் இருந்தனர் என்பது நாம் அறிந்ததே! அன்னையிடம் கூறப்பெறும் விடயங்கள் வெளியிலே காற்றுப்படாதபடி மூடப்பட்டிருக்கும் என்பது யாவரும் அறிந்ததே!

பாக்கிஸ்தானுக்கு ஏதோ அவசரத் தேவை ஒன்றைக் கருதி அங்கு செல்ல விரும்பிய அன்னை திரேசா, டெல்கியிலுள்ள பாக்கிஸ்தான் தூதுவருக்குக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பம் செய்தார். உடனே கடவுச்சீட்டு கிடைத்தது. அத்தோடு முடிந்ததா? இல்லை. பாக்கிஸ்தான் ஜனாதிபதி சியா – உல் - ஹக் என்பார் தனது சொந்த விமானத்தையும் அனுப்பி பாக்கிஸ்தானில் எங்கு செல்ல விருப்பமோ அங்கு செல்ல வசதிகள் செய்து விரும்பிய இடங்களில் பணிமனைகளை ஆரம்பிக்கவும் அனுமதியளித்தார். 1991 வைகாசி, மாதம் சூறாவளியும் கடற்பெருக்கும் வங்காளதேசக் கரையோரங்களைச் சித்திரவதை செய்தன. இதனால் மூன்று இலட்சம் மக்களுக்கு கரையோரங்களே சவக்காலையாயின.

இருதய நோயாளர் வைத்தியசாலையில் இருந்து அப்போது வெளியில் வந்த அன்னை, வைத்தியர்கள் தடுத்தபோதும் கேளாமல், இரு சகோதரிகளுடனும் சில மருந்துப்பெட்டிகளுடனும் டாக்கா, விமானநிலையத்தைச் சென்றடைந்தார். அங்கே இருந்த சகோதரக் கன்னியர்களும் அன்னை வருவதை அறியவில்லை. நோயாளியான அன்னை, வங்காளதேசத்தில் தாக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிடச் செல்வதாக செய்திகள் உலகில் பரவின. வங்காள தேசப் பிரதமர் கடோசியா அம்மையாரும் உலங்குவானூர்தி (Helicopter) ஒன்றில் பல இடங்களையும் சுற்றிவந்தபோது காலநிலை சீரில்லாமையால் ஓர் இடத்தில் வானூர்தி தரிக்கவேண்டியதாயிற்று. உலக அந்தங்கள் எல்லாம் அன்னையின் செய்தி அம்பலமாயிற்று. மேற்கு நாடுகள் உதவியளிக்க முன்வந்தன.

“நான் அங்கே நேரில் சென்றதையிட்டு மிகவும் திருப்தி. அங்கே மனிதனுடைய அவல நிலையினையும் துன்பத்தையும் காண்பது மிகவும் சோகமான அனுபவமாகும். உணவுப் பொருட்களும், மருந்துப்பொருட்களும், மருந்து வகைகளும், நீரைச் சுத்தமாக்குவதற்கேற்ற வழிவகைகளும் அவசியத் தேவை” என்று அறிக்கைவிட்டதோடு அன்புப் பணியாளர் சபைச் சகோதரிகளை அந்தந்த இடங்களுக்குச் சேவை புரியுமாறு பணித்தார். துன்பப்படும் இடங்களில் அன்னையின் தலை தெரியும்போது, அங்கே உடனடியாக உலகின் பல பாகங்களிலிருந்தும் உதவிக்கரங்கள் நீட்டப்படுவதைக் காணலாம்.

அன்னை திரேசாவுக்கும் கத்தோலிக்க திருக்கூட்டத்தின் தலைவரான பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கும் நல்ல உறவுண்டு. *தூய தந்தையார்* (Holy Father) என்றே அன்னை பாப்பரசரை அழைப்பார். ஆனால் சொந்தத் தந்தையெனவே உருகுவார். பாப்பரசரின் எளிமை அன்னையாரை மிகவும் கவர்ந்தது. வத்திக்கானில் அன்புப் பணியாளர் சபைக்கு இடம் ஒதுக்கிக்கொடுத்தமையால் அங்கே கைவிடப்பட்ட ஏழைகளுக்கு கஞ்சி வார்க்க வாய்ப்புக் கிடைத்தது.

அந்த இடத்தில் அன்புப் பணியாளர் சபைக்கு இடம் கொடுத்தமை, அன்னை திரேசாவையும் ஏழைகளையும் மதித்ததிற்கு எடுத்துக்காட்டாயிற்று. 1986இல் பாப்பரசர் கல்கத்தாவுக்கு சென்றபோது விமான நிலையத்திலிருந்து நேரே அன்னை திரேசாவிடம் சென்றார். அங்கே ஏழைகளின் உணவையும், தண்ணீரையும் அருந்தி அகமகிழ்ந்தார். உலக நாடுகள் பிரச்சினைகள் இல்லாமல் வெல்வெற் துணியால் மூடியிருக்கவில்லை. கல்லும் முள்ளும் மனித வாழ்க்கையை உறுத்துகின்றன. சமாதானத்தின் கழுத்து திருகப்படுகின்றது. ஆயுதங்களும், போராட்டங்களும், பொய்யும், புரட்டும் அரசியல் வயல்களில் அறுத்துக் குவிக்கப்படுகின்றன. பல நாடுகளில் அகதிகளாலேயே பிழைப்பு நடக்கிறது. இவற்றைக் கண்டு அன்னையவர்கள் கண்ணை மூடிக் கொண்டிருப்பதில்லை. பல நாடுகளுக்கு அரசியல் சக்கரத்தைச் செலுத்தும் பலருக்கு அவர் உண்மை புலப்படக் கடிதம் எழுதுவதுண்டு. உடனுக்குடன் பதிலும் பறந்து வரும்.

ஈராக்கும், அமெரிக்க ஐக்கிய நாடும் பயங்கரமான போரில் ஈடுபட்டவேளையில் அன்னை அவர்கள் 2.1.1991இல் இரு பகுதியினருக்கும் எழுதிய மடலில் இந்த ஆபத்தான போரினால் ஏற்படும் வெற்றியும் தோல்வியும் கொஞ்சக் காலத்துக்கே நின்றுபிடிக்கும். இந்தப் பயங்கரமான போரினால் ஏற்படும் துயரங்களையும், நோய், துன்பங்கள், உயிரிழப்புக்களையும் நீதி நியாயத்தின் தராசில் நிறுத்தி உங்களால் ஈடுசெய்ய முடியுமா? ஒருபோதும் முடியாது எனக் குறிப்பிட்டார். யுத்தம் முடிவுற்றதும் ஈராக் நாட்டின் உடல்நல மந்திரியிடமிருந்து நல்ல பதில் வந்தது. அந்த நாட்டில் பணியகம் ஒன்றில் பணிபுரியுமாறு அன்னையைக் கேட்டிருந்தார்.

பட்டத்துக்கும், பதவிக்கும், மதிப்புக்கும் கைநீட்டித் திரியும் இந்த மண்ணில் அவற்றுக்கு மாறான திசையில் செல்பவர் அன்னை அவர்கள். அன்னைக்கு குவிக்கப்பெற்ற பரிசில்களையும், பாராட்டுக்களையும், பட்டங்களையும், தாய்மனையிலே முறையாகப் பதிந்து வைத்திருக்கவும் தவறிவிட்டார்கள். ஒருவருடத்தில் மாத்திரம் இருபது இடங்களிலிருந்து உயர்ந்த மதிப்பார்ந்த பட்டங்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன. அவை எல்லாம் பதிவேடுகளில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

உண்மையில் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறத்தக்க வரிசையில் அன்னை திரேசா பெருந்தொகைப் பட்டங்களைப் பெற்றுள்ளார் என்று அன்னை திரேசாவைப் பற்றி எழுதிய நூலொன்றின் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அன்னை அவர்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் படித்ததில்லை. ஆனால் அவருக்குக் கொடுக்கப் பெற்ற பட்டங்கள் நீண்ட வரிசையில் செல்கின்றன. புகழ் பூத்த பல்கலைக்கழகங்கள் இதில் ஈடுபட்டன. இந்தியாவில் சென்னை பல்கலைக்கழகம் அன்னைக்கு (Doctorate of Law) சட்டக் கலாநிதி பட்டம் அளித்துப் பாராட்டியது. கவிஞர் தாகூரால் அடியிடப்பெற்ற சாந்தி நிகேதன் பல்கலைக்கழகமும் கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்தது.

இங்கிலாந்தில் பழமையும், புகழும் வாய்ந்த கேம்பிறிச் சர்வகாலசாலை வேதசாஸ்திரக் கலாநிதி (Ph.D) பட்டமளித்தது. அமெரிக்க கார்வாட் (Harvard) பல்கலைக்கழகங்களும், மியாமி, பென்சில்வேனியா, ரொலடோ, நியூயேர்சி பல்கலைக்கழகங்களும் சர்வகலாசாலைகளின் உயர்ந்த கௌரவப் பட்டங்களை அளித்துப் போற்றினர்.

அவை விரிப்பின் பெருகும். கணக்கற்ற பருவ வெளியீடுகள் (பத்திரிகைகள்) ஆண்டுதோறும் நடாத்தும் வாக்குப் பதிவுப் போட்டிகளில் ஆண்டின் சிறப்புவாய்ந்த பெண்மணியாக அன்னை திரேசா தெரிவுசெய்யப் பெற்றிருக்கிறார். *இல்லத்தின் மங்கள நாதம்* என்ற அமெரிக்க வெளியீடு மூன்று ஆண்டுகளாக ஜாக்கி, கென்னடி, நாடக மங்கை மடோனா, எலிஸபெத் இராணி என்பவருடன் அன்னை திரேசாவையும் சேர்த்து நடாத்திய *உலகில் பாராட்டுப் பெறும் பெண்மணி* என்ற போட்டியிலும் அன்னை திரேசாவே போற்றப்பெற்றார்.

இந்தப் பத்திரிகையில் ஆச்சரியமான உடைகளும், பிரமிப்பு ஊட்டும் இல்லங்களும், அழகுசாதனப் பொருட்களும் விளம்பரம் செய்வது வழக்கம். ஆனால் முகத்தில் பலவாறான கோடுகளால் சுருங்கிய, ஒரு டொலர் பெறுமதியில்லாத சேலையணியும் பெண்ணைப் போட்டியில் தெரிவது ஆச்சரியமன்றோ? சுவீடன் நாட்டிலும், இந்தியாவிலும், ஒல்லாந்திலும் அன்னை திரேசாவின் முத்திரைகள் வெளியாகியிருக்கின்றன. இந்திய அரசு பத்மஸ்ரீ என்ற உன்னதமான கௌரவப் பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டியது. பிலிப்பைன் தீவுகளின் அரசு இராமேருன் மக்ஆகசே பரிசை அளித்துப் போற்றியுள்ளது. யோசப் கென்னடி நினைவுப் பரிசையும் அன்னை திரேசா பெற்றுக்கொண்டார். பிரித்தானிய முடி அரசி எலிஸபெத் அவர்கள் அதி உயர்ந்த British Monarch, the Order of Merit கௌரவம் அளித்துப் போற்றினார்.

பிரித்தானிய அரசின் இளவரசர் பிலிப் அவர்கள் காலங்கண்ட ரெம்பிள்டன் பரிசை (சமய வளர்ச்சிக்காகக் கொடுக்கப் பெறுவது) கொடுத்துப் போற்றியுள்ளார். அதற்கு 80 நாடுகளிலிருந்து 2000 பேர் தெரிவுப்பட்டியலில் இருந்தனர். இறுதியாக நோபல் பரிசு பெற்றார் அன்னை திரேசா. அதையடுத்து இந்தியாவில் பாரத இரத்தினா என்ற விருதையும் பெற்றுக்கொண்டனர். எனவே உலகில் செல்வாக்குமிக்க பெண்மணியெனக் குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

*(கங்கை தொடர்ந்து பாயும்...)*

## உங்களுக்குத் தெரியுமா?
### மறையறிவுப் பகுதி இல.56

தை பிறந்துவிட்டது. புதிய புதிய எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கைகளும்கூட நம்மில் மலர்ந்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக நம்மில் இந்நாட்களில் மேலோங்கி நிற்பது, இந்த ஆண்டாவது எமக்கு நிரந்தரமான - நீதியோடுகூடிய சமாதானத்தைக் கொண்டுவருமா என்பதுதான். இறைச்சித்தம் இருந்தால் எல்லாமே கைகூடும். அதற்காக இந்த ஆண்டில் விசேடமாக இறைவார்த்தையோடு இணைந்து செபிப்போம். இவ்வாண்டு இறைவார்த்தை ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே.

இனி வினாக்களுக்கு வருவோம். இம்மாத வினாக்கள் திருத்தூதர் பணி 9-11ம் அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்பட்டிருக்கின்றன.

1. “ஐயனேயா இயேசுக்கிறிஸ்து உம் பிணியைப் போக்குகின்றார். எழுந்து உம்படுக்கையை நீரே சரிப்படுத்தும்” என்று கூறியவர் யார்?
2. “எழுந்திரு” எனப் பேதிரு கட்டளையிட்டு யோப்பா நகரில் ஒருவரை உயிர்பெறச் செய்தார். அவர் யார்?
3. யோப்பா நகரில் பேதிரு எங்கே தங்கியிருந்தார்?
4. செசாரியா நகரின் கொர்னேலியு - நூற்றுவத்தலைவர் எந்தப்படைப் பிரிவில் இருந்தார்?
5. “உமது வேண்டுதல்களும், இரக்கச் செயல்களும் கடவுள் திருமுன் சென்றடைந்துள்ளன. அவற்றை அவர் நினைவில் கொண்டுள்ளார்” இவ்வார்த்தை யாரால் யாருக்குக் கூறப்பட்டன?
6. சீடர்கள் *கிறிஸ்தவர்கள* என்ற பெயரை முதன்முதலில் எங்கே பெற்றனர்?
7. யோவானின் மரணத்தின்பின் மக்கள் எங்கே சிதறிப் போனார்கள்?
8. அந்தியோக்கியாவில் மக்கள் பெருந்தொகையாக ஆண்டவரிடம் திரும்பியபோது அங்கு அனுப்பப்பட்ட சீடன் யார்?
9. சவுல் எந்த நகரத்திலிருந்து அந்தியோக்கியாவுக்கு அழைத்து வரப்பட்டார்?
10. பிற இனத்தவர்களிலிருந்து முதன் முதல் தூய ஆவியிலும், தண்ணீரிலும் திருமுழுக்கைப் பெற்றவர்கள் யார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 54 இற்கான கேள்விகளுக்கு 56 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத்**
**தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**பி. சோபா வாஸ்**
**குழந்தை யேசு புரம், தாழ்வுபாடு வீதி,**
**மன்னார்.**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**
**10 அதிஸ்ரசாலிகள்**

1. இ. நிறோஜனா, வேப்பங்குளம், நேரியகுளம்.
2. அருட்சகோதரி. மேரி பற்றீசியா, றம்பாவ, அனுராதபுரம்.
3. சு. லக்ஷ்மன், பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
4. பொ. டெஸ்மன், சிதரம்பரபுரம், வவுனியா.
5. வெ. கிஷானி, உயிர்த்தராசன் குளம், உயிலங்குளம்.
6. அ. ஷறோமி, பெரியமுறிப்பு, குஞ்சுக்குளம்.
7. ஆர். டயானா, தரம் 6, தலைமன்னார் கிராமம்.
8. அ. வெஸ்லிக்கா முரால், வீரபுரம், நேரியகுளம்.
9. செ. சுஜீவா, பிடாரிகுளம், முருங்கன்.
10. அ. டிறி அருணியா சோசை, 6ம் வட்டாரம், வங்காலை.

## குடும்பக் குவலயம்





# குடும்ப உறவும் அதில் ஏற்படும் விரிசலும்

தமிழ் சமுதாயத்தில் குடும்பங்கள் பெரும்பாலும் கணவன், மனைவி, பிள்ளைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. சிலவேளைகளில் இவர்களுடன் பாட்டன், பாட்டி, மாமன்மார், மாமிமார் போன்ற உறவுகள் இணைந்து காணப்படுகின்றன. இவ்வாறு பல அங்கத்தவர்களைக் குடும்பம் கொண்டிருக்கும் போது குடும்ப உறவு என்பது உறுதியைப் பெறுகின்றது.

ஒரு குடும்பத்தில் அங்கத்தவர்கள் ஒன்றாக இணைந்து வாழ்வதுடன் ஒருவருக்கொருவர் துணையாகவும், ஆதரவாகவும் இருக்கின்றார்கள். சிலர் மற்றவர்களுக்குப் பொறுப்பாக இருந்து தீர்மானங்களை எடுப்பவர்களாகவும் இருக்கின்றனர். தகப்பன் தீர்மானத்தை எடுப்பவராகவும், தாய் அதனைச் செயற்படுத்துபவளாகவும் காணப்படுகின்றாள்.

குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையில் புரிந்துணர்வு இருக்கும்போது குடும்ப உறவு நிலைபெறுவதுடன், குடும்ப இயக்கப்பாடு (Family Dynanic) சிறப்பாக அமையவும் அது வழிசெய்கிறது. அத்துடன் பிள்ளைகளுக்கு வேண்டிய "மாதிரி" [Sample] என்பது கிடைக்கின்றது. இதனால்தான் சான்றோர்கள் "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்று கூறியுள்ளனர்.

சமூகமயமாக்கலின் அடிப்படை நிறுவனமாக விளங்குகின்ற குடும்பங்கள் இன்று பல விரிசல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இவ்விரிசலுக்குப் பல காரணிகள் அடிப்படையாக உள்ளன.

அவையாவன :-

- ஆண், பெண் எதிர்பார்ப்பு
- சமூக அந்தஸ்து
- பிள்ளைகள் இல்லாத்தன்மை
- சீதனம்
- ஆணாதிக்கம்
- மது பாவனை

போன்ற காரணிகளாகும்.

இங்கு குடும்ப விரிசல் ஏற்படுவதற்கு தனித்து கணவனோ அல்லது மனைவியோ காரணம் அன்று, இருவரது செயற்பாடுகளுமே காரணமாக அமைகின்றன.

சீதனம் எனும்போது பெண்களுக்கு பெற்றோர் கொடுக்கின்ற வாழ்விற்கான ஒரு ஆதாரம் ஆகும். இன்று இந்நிலை மாறி அது ஒரு கட்டாயமான செயற்பாடாக மாறிவிட்டது. பெற்றோர்களால் பெண்ணுக்குக் கொடுப்பதாகக் கூறப்பட்ட சீதனம் திருமணத்தின் பின்னரும் கொடுக்கப்படாது இருக்கும்போது குடும்பத்தில் விரிசல் ஆரம்பிக்கத் தொடங்கும். அதாவது சீதனம் கேட்டு கணவனோ அல்லது கணவரின் உறவினர்களோ தொல்லை கொடுக்கும் தன்மை அதிகரிக்கின்றது. இந்நிலையில் பெண் பெற்றோரிடம் கேட்கமுடியாது தனக்குள்ளே அழுகின்றாள். இது நாளடைவில் அதிகரிக்கும்போது குடும்பப் பிரச்சினை உச்சமடைகின்றது.

சமூக அந்தஸ்து என்பது ஆண், பெண் இருவருக்கும் பிரச்சினையை ஏற்படுத்துகின்ற காரணியாக உள்ளது. இது பெரும்பாலும் தொழிலை அடிப்படையாகக்கொண்டு தோற்றம் பெறுகின்றது. அதாவது பெண் தனது தகுதிக்குக் குறைந்த தொழில் செய்யும் ஆணைத் திருமணம் செய்த பின், தனது அந்தஸ்துக்கு குறிப்பிட்ட நபர் பொருத்தமற்றவர் என்று தாழ்வுமனப்பான்மையைப் பெறுகின்றாள். இது இருவருக்குமிடையே கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தி குடும்ப விரிசலுக்குக் கொண்டுசெல்கிறது.

ஆண், பெண் ஆகிய இருபாலாரும் தமக்கு வரவேண்டிய எதிர்காலத் "துணை" எவ்வாறு இருக்க வேண்டும் என்று சில எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருப்பர். ஆனால், சீதனம், தொழில், வறுமை போன்ற காரணங்களால் குறிப்பிட்ட ஆணை அல்லது பெண்ணைத் திருமணம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இங்கு எதிர்பார்ப்பு என்பது உடைக்கப்படுகின்றது. இந்நிலையில் குடும்பத்தில் ஆரம்பத்தில் காரணமில்லாத முரண்பாடுகள் தோன்றி பின் விரிசல் நிலைக்குக் கொண்டுசெல்லும். இதற்கு எதிர்பார்ப்புக்கள் உடைக்கப்படுதலே காரணமாகவுள்ளது.

பிள்ளைகள் இல்லாத தன்மை என்பது ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் பிரச்சினையைக் கொடுத்தாலும் பெண் அதிகமாகப் பாதிக்கப்படும் தன்மை காணப்படுகின்றது. "மலடு" என்ற பட்டம் வழங்கப்படுகின்றது. ஆணில் குறைபாடு காணப்பட்டாலும்கூட பெண்ணினையே குறைகூறும் தன்மை காணப்படுகிறது. இங்கு கணவன், மனைவிக்கு இடையே முரண்பாட்டை ஏற்படுத்துவதில் சுற்றத்தார்கள் பெரும் பங்காற்றுகின்றனர்.

ஆணாதிக்கம் என்பது சமத்துவம் என்று கூறப்படும் தற்காலத்திலும் நிலைபெற்றுள்ளது. "பெண் அடங்க வேண்டியவள், பெண்ணுக்கு ஆண் அடங்கி நடப்பது அவமானம்" என்பது ஆண் அதிகாரச் சமூகத்தின் வாதம். மனைவியைக் கொடுமைப்படுத்தல், திட்டுதல், அடித்தல், மயிரறுத்தல், காயப்படுத்துதல், எரித்தல் போன்ற செயற்பாடுகளை கணவன் மேற்கொள்ளும்போது குடும்பம் என்ற உறவு நிலைபெறுவது சாத்தியமற்றதாக மாறுகின்றது. ஆணாதிக்க விளைவால் பெண் தற்கொலை செய்தல், விவாகரத்துப் பெறுதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன.

எனவே குடும்பத்தில் ஒரு பிளவு ஏற்பட்டால் அது ஒரு தனிப்பிரச்சினையாக ஆரம்பித்து, சமூகப் பிரச்சினையாக வளர்ச்சியடைகின்றது. அத்துடன் குடும்பத்தில் ஏற்படும் விரிசலானது, பிள்ளைகளைப் பெருமளவு உளரீதியாகவும், பயந்தவராகவும் வளர வழிசெய்கின்றது. மேலும் கணவன், மனைவி இருவரும் மனமுடைந்து போகவும் குடும்ப விரிசல் காரணமாகவுள்ளது.

எனவே கணவன், மனைவி ஆகிய இருவரும் தமக்கிடையே புரிந்துணர்வையும், விட்டுக்கொடுப்பையும் உடையவர்களாகக் காணப்படும்போது உறவு உறுதியாக இருக்கும். ●

# இயற்கையே மருந்தாய்...



திருமதி. ஜெனிவீ ஸ்ரீபன்
மன்னார்.

உடல், மனம், உயிர் மூன்றையும் உள்ளடக்கியதுதான் மனித வாழ்க்கை. உடலும், மனமும், சரியாக இருந்தால்தான் உயிர் உடலில் நிலைத்து நிற்கும். உடலானது எலும்பு, தோல், தசை போன்ற உள்ளுறுப்புக்களை உள்ளடக்கியது. அந்த உடல் இயங்க வேண்டுமெனில் முதலில் மனம் சரியாக செயற்பட வேண்டும். உடலும் மனமும் சரியாக இயங்க உயிர் இருந்தாக வேண்டும். இதனையே திருமூலர், "உடலை வளர்த்தேன் உயிர்வளர்த்தேன்" என்றார். மனம் பாதிப்பிற்கு உள்ளாகும்போது உடலும் பாதிப்படைகிறது. உடல் நோயுறும்போது மனம் பாதிப்படைகிறது.

உடல் கருவி போன்றது. அதனைக்கொண்டே வாழ்கிறோம். கருவி யாதொரு பழுதில்லாமல் சரியாக இயங்கினால் மட்டுமே மனிதன் மகிழ்ச்சியாக இருக்கமுடியும். உ+ம்:- மிகச்சிறந்த இசைக்கலை ஆற்றல் நிரம்பிய ஒருவரிடம் சரியாக இயங்காத பழுதடைந்த இசைக்கருவியைக் கொடுத்து வாசிக்கச் செய்தால் அந்த இசையை யாருமே கேட்கமாட்டார்கள். அதேபோல் உடலைப் பாதுகாத்து, நோயில்லாமல் இருப்பது மிகவும் அவசியம். அதனை எவ்வாறு செய்வது எனக் கற்பிப்பதுதான் இயற்கை மருத்துவம். "இயற்கையோடு இணைந்த வாழ்வு"தான் நோயின்றி வாழச் சிறந்த வழியாகும்.

ஒவ்வொருவரும் இயற்கையை நேசிக்கவும் அது நமக்குச் செய்யும் நன்மையைத் தெரிந்து உணரவும் வேண்டும். உடலின் சிறப்பு, உயிரின் சிறப்பு மற்றும் மனித வாழ்க்கையின் சிறப்புப்பற்றி எல்லாம் அறிந்துவைத்திருக்க வேண்டும். உடலைக் கோவில் போல எண்ணி அதனைத் தூய்மையாகவும் நலமாகவும் வைத்திருக்க வேண்டும். அதனால் தீய எண்ணங்கள் பழக்கவழக்கங்களை அறவே விட்டுவிட வேண்டும். உடல் நலத்தைச் சீராக வைத்துக்கொள்ளவேண்டிய மூன்று வழிமுறைகளைக் காண்போம்.

1. மனநிலை 2. உணவுப் பழக்கம் 3. உடற்பயிற்சி

### 1. மனநிலை :-

வாழ்க்கை என்பது ஒரு பயணம். யார் வருவார்கள், யார் பிரிவார்கள் என்று கணக்கிட முடியாத ஒரு பயணம். அந்தப் பயணம் நேர்மையாக, நிம்மதியாக இருக்க சுற்றுப்புறத்தையும், சந்திக்கும் மனிதர்களிடத்தினையும், சமூக உறவையும் மேம்படுத்த வேண்டும். அதன்மூலம் சிறந்த உறவினை உருவாக்கிக்கொள்ள முடியும். தனி மனிதர் மனதில் அழுக்கும், அகங்காரமும் தீய எண்ணங்களும், நிறைந்திருந்தால் அவருடைய எண்ணம் சுற்றி இருப்பவர்கள் அனைவரையும் பாதிப்படைய வைக்கும்.

எண்ணம், பேச்சு, நடவடிக்கை, செயல் அனைத்தும் நம்மை மட்டுமல்லாமல், நம்முடன் வாழ்க்கைப் பயணத்தில் பங்குபற்றும் அனைவரையும் பாதிப்படைய வைக்கிறது. எனவே நாம் நேரான எண்ணங்களை (Positive Thinking) வளர்ப்பது அவசியமானது.

1. எப்போதும் நேரான / நேர்மையான எண்ணங்களைப் பின்பற்ற வேண்டும்.
2. உடலைப் பாதிக்கக்கூடிய உணவுர்கள் கூடாது
   உ+ம் :- கோபம், உணர்ச்சிவசப்படுதல், பயப்படுதல், பேராசை, பொறாமை, சிற்றின்ப வேட்கை.
3. தேவையற்ற வீணான எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும்.
4. மற்றவர்களைப்பற்றிப் பேசாமல் தன்னையும், தன் முன்னேற்றத்திற்கான வழிகளைப் பற்றியும் எண்ணுதல் வேண்டும்.
5. நேர்மையான நல்ல வழிகளைப் பின்பற்ற வேண்டும்.
6. உள்ளத்தை மேன்மையாக்க வேண்டும்.
7. அறிவின் முழுமைமையை உணர்தல் வேண்டும்.

### 2. உணவுப் பழக்கம்

மனிதனுடைய முதன்மையான தேவைகளில் உணவு மிகவும் அவசியம். உணவு என்பது மனிதன் வாழ்வதற்காக மட்டுமே இருக்க வேண்டும். ஆனால் அந்த நிலை மாறி இப்போது உணவிற்காக வாழ்க்கை என்றாகிவிட்டது. மிகச்சிறந்த உணவு உடல் இயக்கத்திற்குச் சக்தியைக் கொடுப்பதாயும், நோய் எதிர்ப்பாற்றலை அளிப்பதாயும், நோய் வராமல் செய்வதாயும் இருக்க வேண்டும். இவ்வுணவே சிறந்த மருந்தாகவும் மாறுகின்றது. நோயின்றி வாழ உணவு அவசியம். எல்லா ஊட்டச்சத்துக்களும் தாதுக்களும் முழு வேதியியல் அமைப்போடு மட்டும் இருந்தால்தான் அது நோயைத் தீர்க்கும். மாறாக சமைக்கும்போது குறிப்பிட்ட வெப்பத்தில் வேதியியல் தன்மையை இழந்தால் அவ்வுணவு பயனற்றதாகிவிடுகின்றது.

மேலும் இயற்கை நமக்காக சூரிய ஒளியைக்கொண்டு, பச்சையம், நீர், மண் ஆகியவற்றின் உதவியுடன் ஏற்கனவே சமைத்து வைக்கிறது. இவற்றை நாம் சமைக்கவேண்டிய அவசியமில்லை. இயற்கையாகவே உள்ள உணவை நம் உடலில் உள்ள செல்கள் வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்து அதனதனுடைய வேலையை நடைபெறச்செய்கின்றது. இருப்பினும் இடையில் ஒருமுறை நாம் சமைப்பதனால் முக்கிய வேதிக்கூறுகள் உடைந்து உடலுக்கு பயனற்ற உணவாகி நோயை உருவாக்குகிறது. எனவே சமைக்காமல் உண்ணக்கூடிய காய்கறிகள் எவை உள்ளனவோ அவற்றைத் தினமும் ஒருவேளை சாப்பிடுவது சாலச்சிறந்தது. "எல்லாவற்றையும் சமைத்தே உண்ண வேண்டும்" என்ற நிலையை விட்டுவிட வேண்டும்.

**பழங்களின் மேன்மைகள் :-**

1. பழங்கள் அமிலத்தன்மையைச் சீராக்குகின்றன.
2. நார்ச்சத்து மலத்தை இலகுவாக்குகிறது.
3. செல்களின் முதிர்ச்சித் தன்மையைத் தவிர்க்கிறது.
   காரணம் அதில் உள்ள Lecithin என்னும் பொருள் ஆகும்.
4. பழங்களில் அனைத்துவகை ஊட்டச்சத்துக்களும், தாதுக்களும் அமினோ அமிலங்களும் கிடைக்கின்றன.
5. பழங்களில் 80-90% வரையிலான நீர்ச்சத்து நிரம்பியுள்ளது.
6. பிராண சக்தி நிரம்பிய உணவு இயற்கையான உணவாகும்.
7. நேரடியாகக் குடலினால் உறிஞ்சப்படுகின்றது.
8. இவை மென்மையான உணவு, மனதிற்கு அமைதி அளிக்கிறது.

**விலை மலிவான உணவு :-**

பொதுவாக முன்பெல்லாம், உணவில் நிறைய மூலிகைகளையும், மருத்துவப் பொருட்களையும் அதிகம் உபயோகித்து உணவை மருந்தாக அமைத்தார்கள். உ+ம் :- வாரம் ஒருமுறை விரதம் இருப்பது, தூதுவளை ரசம் வைத்துச் சாப்பிடுவது, ஏலம், கறுவா, சீரகம், வெந்தயம், உள்ளி போன்ற பொருட்களை சமயலில் அதிகம் சேர்ப்பது போன்றவையாகும்.

உணவினைக்கொண்டே நோயினைத் தீர்த்திடலாம், நோய் வராமல் காக்கலாம், உயிரை நீடிக்கலாம், மனநிலையை மாற்றலாம். இதுவே மூப்பினை ஒழிக்கும் மருந்துமாகும். புலால் உணவைக் குறைத்துத் தாவர உணவை அதிகம் உண்பதனால் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்க முடியும். இயற்கை உணவே மிகச் சிறந்த உணவு. ●

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
வெ. சசிகலா
மறைக்கல்வி நிலையம், மன்னார்.

### மாவலஸ் மைசூர் பாகு

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| சக்கரை | $-2$ கப் |
| கடலை மா | $-1$ கப் |
| நெய் | $-1\frac{1}{2}$ கப் |
| எண்ணெய் | $-\frac{1}{2}$ கப் |
| தண்ணீர் | $-\frac{1}{2}$ கப் |




**செய்முறை :**

இரண்டு கப் சக்கரையுடன் அரைக்கப் தண்ணீரைச் சேர்த்து அடுப்பில் வைத்து, சர்க்கரை கரைந்ததும் வடிகட்டி, திரும்பவும் கொதிக்க விடுங்கள். கொதித்ததும் சிறிது பாகு எடுத்து தண்ணீர் உள்ள தட்டில் விட்டுப் பாருங்கள். உருட்டினால் உருட்டவரும். வெளியில் எடுத்தவுடன் கரைந்துவிடும். இந்தப் பதத்தில் இருக்கும்போது ஒரு கப் கடலை மாவை சிறிது சிறிதாகத் தூவிக் கிளறுங்கள்.

மற்றொரு அடுப்பில் ஒன்றரைக் கப் நெய்யையும் அரைக் கப் எண்ணெயையும் ஒன்றாகக்கலந்து சூடாக்குங்கள். மாவுடன் பாகு நன்கு சேர்ந்துகொள்ளும்போது எண்ணெய், நெய் கலவையை சிறிது சிறதாக ஊற்றிக் கிளறுங்கள். மாவு இதை நன்கு இழுத்துக்கொள்ளும். மாவுக் கலவை பூத்து, நெய் கக்க ஆரம்பிக்கும்பொழுது தட்டில் கொட்டி, சற்றுச் சூடாக இருக்கும்போதே துண்டுகள் போடுங்கள்.

மணக்கும் மைசூர்பாகு, ரெடி. ●

# பெரியப்பா பதில்கள்





**கேள்வி : உலகில் சிறந்த ஓவியர் யார்?**
*- சிவநேசச் செல்வன், வவுனியா.*

பதில் : என்னைப் பொறுத்தவரை மாலை நேரத்துத் தொடுவானத்திற்கும், தினமும் பூக்கும் பூக்களுக்கும், கண்ணைப் பறிக்கும் அழகுள்ள வண்ணத்துப் பூச்சிகளுக்கும் வர்ணம் பூசுபவர்! நான் யாரைக் குறிப்பிடுகின்றேன் எனக் கண்டுபிடித்துவிட்டீர்களா?

**கேள்வி : பெரியப்பா, இன்றைய தமிழ்ச் சினிமாவின் போக்குக்குறித்துச் சொல்லுங்களேன்?**
*- மரியநாயகம், பேசாலை*

பதில்: நல்ல 'கதை' அம்சம் இருக்கிறது. அத்தோடு நல்ல 'சதை' அம்சங்களையும் சேர்த்து முகம் சுழிக்க வைக்கின்றார்கள்.

**கேள்வி : அண்மையில் நீங்கள் ரசித்த குடும்ப ஜோக்?**
*- அனுராதா ரமணன், யாழ்ப்பாணம்*

பதில்: ஒருவர் ஒரு வீட்டுக்கார அம்மாவிடம் வந்து , "உங்கள் வீட்டில் 'வோசிங் மெசின்' இருக்கின்றதா?" என்று கேட்கின்றார். அதற்கு அந்த அம்மா தனக்குப் பின்னால் கூனிக்குறுகி நிற்கும் தன் கணவனைப் பார்த்து, "இருக்கிறார்" என்று பதில் அளிக்கிறார்.

**கேள்வி : உழைத்து உழைத்து எதைக் கண்டோம்? சும்மா இருப்பதே சுகம் என்று நினைக்கின்றேன்?**
*- றோஸ் மேரி, அடம்பன்*

பதில்: நாம் வாழும் காலம் குறுகியது. ஆனால் நம்முள் உள்ள ஆன்மாவோ அழிவற்றது, நிலைபேறுடையது. ஒன்று மட்டும் நிச்சயம். என்றேனும் ஒரு நாள் நாம் இறக்கத்தான் வேண்டும். அந்த இறப்பு ஒரு உயர்ந்த குறிக்கோளுக்காக அமையட்டும்.

பெரியதொரு குறிக்கோளை, உன்னதமான கொள்கையை வாழ்க்கையின் நோக்கமாக ஏற்போம். அதை அடைய வாழ்நாள் முழுவதும் பாடுபடுவோம், உழைப்போம், பயனற்ற கோபத்திலும், எரிச்சல்படுவதிலும் நமது சக்தியை வீணாக்காது அமைதியோடும், ஆண்மையோடும் செயலாற்றுவோம். உழைப்பு! இதுவே நம்முடைய முடிந்த தீர்மானமாக இருக்கட்டும். இதுவே நமது தாரக மந்திரமாக இருக்கட்டும்.

**கேள்வி : "கடவுளை உன்னால் எனக்குக் காட்ட முடியுமா?" என்று என்னோடு வம்பு செய்யும் கடவுள் நம்பிக்கையற்ற நண்பனுக்கு நீங்கள் சொல்லும் அறிவுரை என்ன பெரியப்பா?**
*- அருட்பிரகாசம், பண்டிவிரிச்சான்.*

பதில் : இரவு நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்களைப் பார்க்கின்றோம். ஆனால் அவை பகலில் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனால் வானில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்ல முடியுமா? என உங்கள் நண்பரிடம் கேளுங்கள்.

**கேள்வி : இப்போது பணம் இருந்தால் எதையும் வாங்கலாம் என்று நினைக்கும் மனோபாவம் வளர்ந்து வருகின்றதே...?**
*- மரிய வளன், செட்டிகுளம்*

பதில் : பணம் இருந்தாலும் பெற முடியாதது பல உண்டு. இந்தப் பட்டியலைப் பாருங்கள்.
படுக்கையை வாங்கலாம்,
உறக்கத்தை வாங்க முடியாது.
புத்தகத்தை வாங்கலாம்,
அறிவை வாங்க முடியாது.
உணவை வாங்கலாம்,
பசியை வாங்க முடியாது.
ஆடம்பரத்தை வாங்கலாம்,
அழகை வாங்க முடியாது.
மருந்தை வாங்கலாம்,
ஆரோக்கியத்தை வாங்க முடியாது.



பகட்டை வாங்கலாம், பண்பாட்டை வாங்க முடியாது.
கேளிக்கையை வாங்கலாம், மகிழ்ச்சியை வாங்க முடியாது.
ஆயுதத்தை வாங்கலாம், வீரத்தை வாங்க முடியாது. மூக்குக் கண்ணாடியை வாங்கலாம், கண்பார்வையை வாங்க முடியாது.
நண்பர்களை வாங்கலாம். உற்ற நண்பனை வாங்க முடியாது.
வேலைக்காரர்களை வாங்கலாம், சேவகர்களை வாங்க முடியாது.
அமைதியான சூழ்நிலையை உண்டாக்கிக்கொள்ளலாம், ஆனால் மனச்சாந்தியை வாங்க முடியாது.
இப்போது புரிகிறதா? பணம் இருந்தால் எதையும் வாங்கிவிடலாம் என்று நினைப்பது எவ்வளவு தவறு என்று!

**கேள்வி : ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய முயன்று அலுப்பும், சலிப்பும் அடைந்து போகின்றேன். குறிப்பாக நேற்றையப் பிரச்சினைகளும், நாளைய கவலைகளும் என்னை அலைக்களிக்கின்றன. என்ன செய்யலாம் பெரியப்பா?** *- அருணோதயன், பேசாலை.*

பதில் : 'பிரித்து வெற்றிகொள்' என்ற ஒரு தத்துவம் உண்டு. இதைச் சற்று விபரமாகக் கூறட்டுமா?
"ஒரு சமயத்தில் ஒரு நாள் வாழ்க்கை போதும்" என்கிற கோட்பாடே இது! நாளைய பளுவை நேற்றைய பளுவோடு சேர்த்து இன்று தூக்க முயற்சிக்கும்போது பலசாலியும் தடுமாறுகிறான். இது எவ்வளவு உண்மை! எனவே உங்கள் வாழ்க்கையைத் தனித்தனி நாட்களாகப் பிரித்துக்கொள்ளுங்கள். நேற்றைய நாட்களை முற்றிலும் மூடிவிடுங்கள். நாளைய தினங்களின் கதவுகளையும் சாத்திவிடுங்கள். இன்று ஒருநாள் மட்டும் வாழக் கற்றுக்கொள்ளுங்கள். அப்போது நீங்கள் வெற்றிகொள்வதற்கு ஒருநாள் பிரச்சினைகள் மட்டும்தான் இருக்கும். ஒருநாள் பிரச்சினைகளை எவருமே இலகுவாக வெற்றிகொண்டுவிடுவர்.

**கேள்வி : பிரச்சினை... பிரச்சினை... ஏன் இந்தப் பிரச்சினை என்று அலுத்துக்கொள்கின்றேன் பெரியப்பா?**
*- நேசராசா, அளவக்கை*

பதில்: கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளை உங்களுக்கு விடையாகத் தருகின்றேன்.
"மனம் தர்மத்தோடு வாழ்வதற்கு எத்தணிப்பதும், உடல் அதர்மத்தோடு வாழ்வதற்குத் தத்தளிப்பதுமான இரட்டை நிலைதான் மனிதகுலத்தின் முடியாத பிரச்சினைகளுக்கு மூலம்."

**கேள்வி : இன்று நம் குடும்பங்களில் தாய்மை போற்றப்படுகிறதா? தூற்றப்படுகிறதா?**
*- கவிதாஞ்சலி, தாழ்வுபாடு*

பதில்: 'அன்னை இல்லம்' என்று வீட்டிற்குப் பெயர் வைத்திருப்பார்கள், ஆனால் அந்த வீட்டு அன்னை முதியோர் இல்லத்தில் இருப்பார்.

## கலாபூசணம் விருதுபெறும் மன்னார்க் கலைஞர்கள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

1972 தொடக்கம் ஆரம்பக் கல்வி ஆசிரியராகி, 1996ம் ஆண்டு தொடக்கம் மன்னார் வலயக்கல்விப் பணிமனையில் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 2000ம் ஆண்டு ஆவணி மாதம் தமது கல்விப் பணியில் 38 ஆண்டுகளை நிறைவுசெய்து ஓய்வுபெற்றார்.

2001ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் வாழ்வுதயம் நிறுவனத்தில் இணைந்து சமூக நீதி மற்றும் மனிதநேய மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டார். சமாதானப் பிரிவின் இணைப்பாளராகப் பொறுப்பேற்று தென்னிலங்கை மக்களுடன் உறவுப் பால நிகழ்வுகள் மற்றும் பல வேலைத்திட்டங்களில் ஈடுபட்டார்.

மாணவப் பருவம் தொடக்கம் பல நாடகங்களில் பாத்திரமேற்று நடித்தார். கலைப் பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்த இவர், தமது தந்தையார் அரங்கேற்றிய நாட்டுக்கூத்துக்கள் நாடகங்களில் நடித்துள்ளார். 18 வயது தொடக்கம் ஆசிரியர் பணிக்காக தாம் சென்ற இடமெல்லாம் முழு இரவு கலை விழாக்களை நடத்தினார். தமிழ் மொழி விழாக்களில் தமது மாணவர்களை பங்கேற்கச் செய்து மாவட்ட, மாகாணப் போட்டிகளில் பரிசில்கள் பெற வழிவகித்தார்.

விடத்தல்தீவில் முத்தமிழ் கலாமன்றத்தை உருவாக்கி அதன் மூலம் பல கலைநிகழ்வுகளை மேடையேற்றினார். நினைத்தவுடன் கவிபுனையும் திறன்பெற்றவராகவும் திகழ்கின்றார். வாழ்த்துப் பாமாலை, வரவேற்புப் பா, பிரிவுபசார நிகழ்வுகள் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளில் ***மன்னார் அமுது*** என்ற பெயரில் ஆக்கங்களை எழுதியுள்ளார். மன்னார் தூயர் துடைப்பு மறுவாழ்வு சங்கக் கீதம், மன்/ ஆண்டாங்குளம் றோ.க.பாடசாலைக் கீதம், மன்/ பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயக் கீதம், விடத்தல்தீவில் மரியன்னை பெயரில் பாடப்படும் ***அடைக்கல மாதாவே உமது புகழ்...*** என்ற இவரின் படைப்புக்கள் இன்றும் நிலைத்துநின்று இவரது புகழைப் பறைசாற்றுகின்றன, 1998ம் ஆண்டு ***பாலர் கவிதைகள் ஐம்பது*** எனும் சிறுவர் பாடல் நூல் இவரால் எழுதி வெளியிடப்பட்டது.

### திரு. க. இன்மானுவேல்

மன்னார் புதுக்கமம் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த திரு. கபிரியேல் இம்மானுவேல் அவர்கள் 23.09.1943ம் ஆண்டு பிறந்தார்.


பாடசாலைக் கல்வியை அதிகளவில் மேற்கொள்ளாவிட்டாலும் இயல்பாகவே கவிதை புனையும் ஆற்றல், வாய்க்கப்பெற்றவராய் இருந்தமையால் இவர் *புலவர்* என அன்னவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

1962ம் ஆண்டு தொடக்கம் நாட்டுக்கூத்து கலைத்துறையில் தன்னை ஈடுபடுத்தி வருகின்ற இவர், முதன் முதலாக *மகுடா அபிஷேகம்* என்ற வசன நாடகத்தை எழுதினார்.

மகுடா அபிஷேகம் என்ற நாடகம் வஞ்சியங்குளம் புனித இராயப்பர் ஆலயம் முன்றலிலும், அன்னையின் புதுமை (நாட்டுக்கூத்து) முதலைகுத்தி புனித லூர்து அன்னை கெபி முன்றலிலும், இரட்சகன் ஜனனம் (நாட்டுக்கூத்து) உயிலங்குளம் ஆலயம் முன்றலிலும், ஆசிதிருஞானசீலன் வாசாப்பு (ஒரு இரவுக்கதை) பெரிய குஞ்சுக்குளத்திலும், மரிஸ்ரெலாவின் மர்மம் (நவின நாட்டுக் கூத்து) நானாட்டான் ஆலய முன்றலிலும், புனித சூசையப்பர் வாசாப்பு (ஒரு இரவு) புதுக்கமத்திலும் மேடையேற்றப்பட்டன.

இதைவிட கோவில் கவிகள், ஆனந்தக் கவிப்பாக்கள், கல்வெட்டுக்கள் என இவருடைய கலை இலக்கியப் பங்களிப்புக்கள் பரந்துபட்டதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கலாபூசணம் விருதுபெறும் மன்னார் மண்ணின் கலைஞர்களான திரு. அந்தோனிமுத்து, திரு. இம்மானுவேல் ஆகியோரை மன்னா சார்பாக நாமும் வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.



## நன்றி நவில்கின்றோம்

எங்கள் அன்புத் தாயாரின் பிரிவின் போது, எங்கள் பக்கத்தில் ஆறுதலாய் நின்ற எமது உறவுகளுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அம்மாவின் மாணவர்கள், மலர் வளையம் சாற்றி மலரஞ்சலி செய்த மாவிலங்கேணி பள்ளித்தளிர்கள், ஆசிரியர்கள், திருப்பலி நிறைவேற்றி எம்மைத் தேற்றிய அருட்பணியாளர்கள், இரங்கலுரை ஆற்றிய பெரியோர்கள், தொலைபேசி மூலம் ஆறுதல் சொன்ன நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*ஜெயா பாலாஜி (மகள்)*
*மாவிலங்கேணி, முருங்கன்*

## நீங்காத நினைவுகள்

### 31ம் நாள் நினைவு



மலர்வு 17 - 06 - 1936

உதிர்வு 17 - 12 - 2007


**திரு. மேரியான் டபரேரா (முத்தரிப்புத்துறை)**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

மின்னாமல் முழங்காமல் இடியிடித்தது போன்று வந்ததோர் செய்தி அலை வழியாக! நம்பவில்லை, நாம் பற்றிப்பிடித்தோம் இறைவனை என்றாலும் அவர் சித்தம் நாம் ஏற்றோம்! மாதமொன்று கழிந்ததுவே நீங்கள் எமைப்பிரிந்து! மறக்கவும் முடியுமோ தங்கள் பாசமதை! அப்பா என்று அழைக்க இனி யாருமிலர் இவ்வுலகில்! வேண்டுகின்றோம் பரமனவன் தாள்பணிந்து விண்ணுலகில் மகிழ்ந்திடுவீர் இறைவனுடன்!

இவரது பிரிவில் எம்முடன் பங்குகொண்ட முத்தரிப்புத்துறை மக்கள், எமக்குப் புகலிடம் தந்த ஒலிமடு அரியரெட்ணம் குடும்பத்தினர், அனுதாபச் செய்தி அனுப்பிய ஆயர், அடக்க நிகழ்வில் பங்குகொண்ட அருட்தந்தையர், அருட்சகோதரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர், ஏனைய அனைவருக்கும் நன்றிகளைக் கூறிநிற்கின்றோம். இவரின் பிரிவால் துயருறும்:
*மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர். வி. ஏ. டபரேரா, சகோதரி. அருட்சகோ. அமலி டபரேரா*

### 25ம் ஆண்டு நினைவு







மலர்வு 17-11-1917 உதிர்வு 23-01-1983

மலர்வு 26.04.1976 உதிர்வு 27.01.1983

**திரு. சூசை சந்தியோகு பிகிறாடோ**
**(இளைப்பாறிய ஆசிரியர் - பள்ளிமுனை)**

**செல்வி. சூசை மேரி லெஸ்லின் பெரேரா**
**(ஆனந்தி)**

ஆண்டுகள் இருபத்தைந்து கடந்தாலும் ஆறுமோ உங்கள் நினைவுகள்!
கனியாத காவியமாய் கண்ணெதிரே நிற்கின்றீர்கள்.
என்றும் சிரித்த உங்கள் முகங்களும், உங்கள் இனிய வார்த்தைகளும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் உள்ளங்களை விட்டு நீங்காது!

*இவரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

*இவரின் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், மச்சான்மார், மச்சாள், மருமக்கள்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 69

## யோபு 9 - 16

உங்கள் விடைகளை 10. 02. 2008க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | 03 | | ★ | 04 | | | | |
| 05 | | | | | | | | 06 | | |
| | | 07 | ★ | | 08 | | | | | |
| | | | | 09 | | | | | 10 | |
| | | | | 11 | | | | | | |
| | | 12 | | | | ★ | 13 | | | ★ |
| | | 14 | | | | 15 | | | | |
| | 16 | | | | 17 | | | | | |
| 18 | | | 19 | | ★ | | | 20 | | |
| 21 | | | | | | | | | | 22 |

### இடமிருந்து வலம்

1. அவர்க்கு எதிராய்த் தம்மைக் கடினப்படுத்தி .................... வாழ்ந்தவர் யார்?
4. புரியாப் புதிர்களை இருளினின்று ..............ச் செய்கின்றார்.
5. இதோ அவர் மழையைத் தடுப்பாரெனில் அனைத்தும் .............. போம்.
8. உங்களுடைய மூதுரைகள் சாம்பலையொத்த முது.................
11. .............................. நோக்கிப் பாதுகாப்பில் ஓய்வீர்.
12. வஞ்சக ........................ நீர் தேர்ந்துகொண்டீர்.
18. அவன் ........................ தன் ஊனின் வலியையே.
21. உமது ..................... என்னைக் காண விழைவீர்.

### மேலிருந்து கீழ்

1. என்னை வனைந்து ............ உண்டாக்கின உம் கைகள்.
2. ............. திளைத்திருக்கும் நீங்கள் என்னை ஏளனம் செய்கின்றீர்கள்.
4. என் ................. முறையீட்டைக் கவனியுங்கள்.
10. உயர்குடி மக்கள்மீது வெறுப்பினைப் ............................
11. என் .................. முற்றும் இற்றிடச் செய்தீர்.
13. இருள் ....................... அண்மையில் உள்ளதென்று அறிவர்.
14. அதுவே எனக்கு ...............ச் சான்று ஆயிற்று.
15. ஏனெனில் பொறுமையே அவர்களது செயலுக்கு ................ யாகும்.

### வலமிருந்து இடம்

2. நான் நேர்மையாக ............ அவருக்குப் பதிலுரைக்க இயலேன்.
3. நான் உங்களுக்கு ............ இளைத்தவனல்ல. (2வது எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே நிற்கிறது)
6. .......... கூளத்தைக் கடிது விரட்டுவீரோ? (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
7. புழுதியில் என் ....................யைப் புதைத்தேன்.
9. ....................... வலிமையும் அவரிடமே உள்ளன.
10. குற்றமற்ற நேர்மையாளனாகிய நான் .................... நகைப்புப் ........................ ஆனேன்.
11. நான் குற்றம் புரிந்தால் அதை என்மீது .................... விடீர்.
22. ஓ, என்னைப் ..................... ஒளித்து வைக்கமாட்டீரா?

### கீழிருந்து மேல்

9. அவரே ............ மறைபொருளை உமக்கு அறிவிக்கட்டும்.
10. ஆனால் அதை ஒரு ....................க் கருதுவதில்லை. (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
16. இருப்பினும் வன் ............... என் கையில் இல்லை.
17. இன்னலைக் .............. அவர்கள் இடுக்கண் ஈன்றெடுப்பர்.
18. மலர்போல் பூத்து அவர்கள் ...................... போகின்றனர்.
19. என் உதீட்டின் ஆறுதல் உங்கள் .............க் குறைகுமே.
20. கடவுளின் ....................... கனிவான சொல்லும் உமக்கு அற்பமாயினவே.
22. எனவே அவர்களிடமிருந்து உம் .................. த் திருப்பும்.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 67ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
திருமதி. பி. ஜே.. ஆர். பற்றிக்
5/14, அச்சுக்கூட ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:**
க. கனிஸ்ரன்
இல.161, மடுக்கரை
நானாட்டான்,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
இராசன் சுதர்சினி
மதியா மடு
மாதா கோவிலடி
ஓமந்தை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 144 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 136 பேர்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.67ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
2. ஏ. பிறிற்றோ, மடுக்கோவில், மடு.
3. ஏ. யோண், முதலைகுத்தி, உயிலங்குளம், மன்னார்.
4. அ. கரோலின் கீர்த்திக்கா, பேராலய வீதி, திருகோணமலை.
5. பி. சோபா வாஸ், குழந்தையேசுபுரம், மன்னார்.
6. அ. மேரி ஜஸ்மின், இறம்பைக்குளம், வவுனியா.
7. அ. ஸ்டெலா, துட்டுவாகை, நேரியகுளம்.
8. ம. சொபியா, புதுக்கமம், உயிலங்குளம்.
9. ஜே. யூட் புஸ்பாந்தன், தாழ்வுபாடு வீதி, மன்னார்.
10. செ. வளன் நியூமன் துரம், மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்.
11. அ. லிவினரன், முதலைகுதது, உயிலஙகுளம.
12. ஏ. ஆர். நிறோசினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
13. ஆ. றட்நாதன், புனித வளனார் மாணவர் இல்லம், மன்னார்.
14. பி. ஜே. அஜந்தன், எழுத்தூர், மன்னார்.
15. ஜே. எஸ். சுகன்யா, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
16. அ. மேரி கொண்சீற்றா, மடுக்கோவில், மடு.
17. திருமதி. பாத்திமா பெனாஸ்டோ, கொட்டாஞ்சேனை, கொழும்பு.
18. றீற்றஸ் யசிந்தா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
19. ஜோ. பிரியதர்ஷினி, கங்காணிதீவு, நானாட்டான்.
20. ச. திரேசம்மா, சென். யோசவ் லேன், சில்லாலை, பண்டத்தரிப்பு.
21. யே. பிரேமச் சந்திரன், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
22. மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
23. ஆர். எம். ஜெயசாந்தன், சின்னக்கடை, மன்னார்.
24. எஸ். நிலுஜன் குரூஸ், தலைமன்னார் மேற்கு.
25. அ. மேரி கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.
26. இ. கவிதா, அச்சங்குளம், நானாட்டான்.
27. அன்ரனி சுபைஷன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
28. அ. சுபாஜினி, கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.
29. அ. வலன்டினா, 12 வெல்கம் லேன், பாலையூற்று, திருகோணமலை.
30. பே. நவரட்ணம், புதுக்கமம், உயிலங்குளம்.
31. அ. கிறிஸ்றதிஷன், 130, ஒல்லிமோட்டை, மன்னார்.
32. வ. மதுஷன், பிரதான வீதி, நீர்கொழும்பு.
33. ய. ஆன் டிறோனா மார்க், 6ம் வட்டாரம், வங்காலை.
34. பி. புஸ்பம், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
35. அ. சந்துஜன், வெளிக்குளம், வவுனியா.
36. ஏ. யோகவதி, ஆயுள்வேத மருந்தகம், பூங்கா வீதி, வவுனியா.
37. மா. ஞானசவுந்தரி, யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
38. ம. லீனஸ், பண்ணை வீதி, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
39. அ. அசம்ரா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
40. எம். நிறோயா, யோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
41. அ. வேஜின் நிலானி, ஆவணம், நானாட்டான்.
42. எஸ். சாந்தகுமார், கூமாங்குளம், வவுனியா.
43. அ. கவினா டனுஷியா, தரம் 10, பு.ச.பெ.கல்லூரி, மன்னார்.
44. ஞா. செலஸ்ரீன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
45. அ. யாழினி, தி.கு.க.மடம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
46. செ. நிசாந்தினி, பள்ளிவாசல் வீதி, கீரி, மன்னார்.
47. பீ. ஆன் ஜெனற் டிலக்ஷனா, தரம் 5, அ.த.க.பா., நறுவிலிக்குளம்.
48. றூபா அன்ரன், லவ்சான், சுவிஸ்.
49. ச. லின்ரா, கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
50. ம. ஆன் டர்ஷி, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 67 இற்கான சரியான விடைகள்


| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நு[1] | ண் | ண | றி | வு | ட | ப | ப் | த | ழு | எ[2] |
| ழை | பா[3] | ர் | வை | யி | ல் | ❋ | வு | து | பெ[4] | ழி |
| ய | லை | கோ | ங் | செ[5] | தா | ர் | ய் | த் | வா | ல் |
| க் | ❋ | ம் | ரு | டா | ட் | வீ[6] | னா | று | ய் | மி |
| கூ | ர் | தா | த் | ணி | ப[7] | ❋ | ல | நி[8] | று | கு[9] |
| டா | எ[10] | து | வோ | பே | ம் | ற | பு[11] | ய | மா | க் |
| து | ந் | ரு | பி | ன் | நோ[12] | ம் | ர | ம | சு | து |
| நூ[13] | க் | கு[14] | ம | ர | ம் | பு | வி | ங் | பே[15] | ந் |
| க் | கூ[16] | றி | ய | ❋ | யே | ப் | யு | க | ரை | ரு |
| க | ❋ | ப் | ஈ[17] | டு | தி | சி[18] | ம் | ள் | ❋ | வி[19] |
| ம் | வி[20] | பு | ரு | ம் | பா[21] | ய் | ரா | தி | எ[22] | ❋ |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.68 ற்கான முடிவுகளை 2008ம் ஆண்டு பெப்ரவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# பசுமை நிறைந்த நினைவுகளே...

# கிராமத்தின் இதயம் பேரின்ப நிலையம்!

## - மக்கள் காதர் -



மன்னார் மாதலம் சுமார் 350 கிராமங்களையும், ஒரு பட்டினத்தையும் (தற்போது நகரம்) கொண்ட மீன் வளமும், நெல் வளமும், உப்பு வளமும், வனவளமும் நிறைந்த வளமான மாவட்டமாகும். வருடம் இரு போகம் வேளாண்மை, வருடம் முழுவதும் மீன்பிடி, மூன்று மாதத்திற்கொருமுறை உப்பு அறுவடை மற்றும் வெகுமதி மிக்க மரப்பலகைகள் எனப் பல்வேறு செல்வ வளங்களையும் கொண்ட பூமியாகும்.

60 ஆண்டுகளுக்கு முன்னர் நமக்குச் சுதந்திரம் கிடைத்தபோது பட்டின சபையாகவிருந்த மன்னார் தலைநகர் பின்னர் 1988ல் பிரதேச சபையாகத் தரம் குறைக்கப்பட்டு, சென்ற 2005ல் நகர சபையாகத் தரம் உயர்ந்து தலை நிமிர்ந்து நிற்கின்றது. கடந்த 20 வருடங்களாக இது மக்கள் ஆணையின்றி விசேட ஆணையாளர்கள் - செயலாளர்கள் ஊடாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் நடைபெற்ற அத்தனை பொதுத் தேர்தல்கள், அதிபர் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் அனைத்திலும் களம் இறங்கி பல அரசியற் தலைவர்களைக் கண்டது.

இங்கு நகரிலிருந்து கிராமங்களுக்குச் செல்லும் அரச பேருந்துகள் அனைத்தும் இரவில் அக்கிராமங்களில் தரித்து, காலையில் கிராம மக்களை ஏற்றிக்கொண்டு நகர் நோக்கி வரும். பின்னர் அன்று இரவு 10 மணிக்கு மீண்டும் கிராம மக்களை ஏற்றிக்கொண்டு கிராமங்கள் நோக்கிச் செல்லும்.

கிராமத்து மக்கள் அதிகாலையில் 4.00 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவார்கள். ஆண்கள் வயல், மற்றும் கடல்களுக்கு காலையில் கிடைக்கும் சுவையான பழங்கஞ்சியை பருகிவிட்டு மதிய உணவையும் சுமந்துகொண்டு செல்வர். ஒருசில அரச ஊழியர்கள் மன்னாருக்கு பேருந்துகளில் புறப்படுவர். உயர் கல்விகற்கும் மாணவ, மாணவிகளும் காலைப் பேருந்துக்கு தயாராக உணவுப் பெட்டியுடன் வந்து பேருந்துகளில் ஏறுவார்கள்.

கிராமத்துக் குடும்பப் பெண்கள் தங்கள் சமையல் வேலைகளை முடித்துவிட்டு இரண்டாவது பேருந்துகளில் மன்னார் வர ஆயத்தமாவர். கையில் ஒரு கைப் பையுடன், சிறு பேர்ஸ்ஸில் பணத்தையும் எடுத்துக்கொண்டு புறப்படுவர். புறப்படும்போது சிறுதொகைப் பணத்தையும் மேலதிகமாக எடுத்துக்கொள்வர். மன்னாரில் பிச்சையெடுக்கும் பிச்சைக்காரர்களுக்கு அப்பணத்தை தானமாக வழங்குவதற்காகவே! இக்குடும்பப் பெண்கள் தங்கள் கணவருடனோ அல்லது பிள்ளைகளுடனோ அல்லது தனியாகவோ புறப்படுவர்.

இவர்களுக்கு மன்னார் நகரம் வருவது மிகவும் மகிழ்ச்சியான பொழுதுபோக்காகவிருக்கும். வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் செல்வதில் மகிழ்ச்சியடைவர். அழகும், அமைதியும் சுத்தமும், சுகாதாரமும் நிறைந்த கிராமங்களை விட்டு அழுக்கும் அலங்கோலமும், சத்தமும், சந்தடியுமிக்க நகரத்தைப் பார்ப்பதில் தனியின்பம் கொள்வர். இவர்கள் மன்னார் தாம்போதிப் பாலத்தைத் தாண்டி தலைநகரை அடையும்போது முதலில் பார்ப்பது மன்னார் போலீஸ் நிலையத்தைத்தான். அது மிகவும் அமைதியாகக் காட்சிதரும். அங்கு வெளியில் நடமாடும் போலீஸ் பழுப்பு நிறஅரைக் காற்சட்டையும் சேட்டும் அணிந்து தலையில் தொப்பியுடன் பரபரப்பாக நடமாடுவார். அவர்கள் கைகளில் சிறு தடிமட்டுமே இருக்கும். மருந்துக்குக்கூட ஒரு இராணுவத்தினை காணமுடியாது.

இவர்கள் முதல் வேலையாக மன்னார் 'முஸ்லிம் ஹோட்டல்' 'வெலிகம ஹோட்டல்' 'கலாவதி கபேஹ' ஆகிய உணவு விடுதிகளுக்குச் செல்வர். சுவைமிகுந்த காலை உணவுகளை விரும்பி உண்பர். பின்னர் மாலை தேனீர் பருகிவிட்டு வெளியேறுவர். வரும் வழியில் பாதையோரங்களில் அமர்ந்திருக்கும் பிச்சைக்காரர்களுக்கு தாங்கள் கொண்டுவந்த சில்லறைக் காசுகளை தானமிடுவர். பின்னர் வங்கிக்குச் சென்று தங்கள் தேவைகளை முடித்துக்கொண்டு, கடைகளுக்குச் சென்று வேண்டிய பொருட்களை வாங்குவர். அதன்பின்னர் தங்கள் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று மதிய உணவை அங்கேயே உண்பர். மற்றவர்கள் கடையில் மதிய உணவை உண்பர்.

மாலையில் மன்னார் அயின், குமரன், கஜன் படமாளிகையில் பகல் காட்சியை - தமிழ் சினிமாவை மகிழ்வுடன் உற்சாகமாகப் பார்ப்பர். பின்னர் சினிமா முடிவுற்றதும் மாலை தேனீரை தேனீர் விடுதிகளில் அருந்திவிட்டு. சுவையான பலகாரங்களை 'சம்சா, மஸ்கட், பட்டீஷ், கட்லட் என்பனவற்றை பொதிசெய்து கொண்டு மாலை 6.00 மணிப் பேருந்தில் வீடு திரும்புவர். ஆண்கள் இரவு முதல் சினிமா பார்த்துவிட்டு இரவு 10.00 மணிப் பேருந்தில் தங்கள் கிராமம் திரும்புவர். இதுதான் மன்னார் கிராமத்திற்கும் மன்னார் பட்டினத்திற்கும் அன்றைய நேரசூசிகை.

இன்று நிலைமை எப்படி மாறிவிட்டது? அன்பு, கருணை, இரக்கம், காருண்யம், கொடைத்தன்மை எல்லாமே அற்றுப்போய்விட்டன. தொடர்ந்து ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை, இனப்பிரச்சினை, அரசியல் காய் நகர்த்தல், பொய், பித்தலாட்டம் என்பவற்றாலும், நாடுமுழுவதும் நடைபெறும் ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, காணாமற்போதல் மற்றும் சகல இடங்களிலும் தடைமுகாம், சுற்றி வளைப்புகள், ஊரடங்குச் சட்டம், எறிகணை வீச்சுக்கள், கிபீர் குண்டுவீச்சுகள் என்பவற்றாலும் எமது மரதலச் சோலை சுடுகாடாகிவிட்டது. இன்று மாலை 6.00 மணியளவுடன் மன்னார் நகரம் உறக்கத்தில் ஆழ்ந்துவிடுகின்றது. அங்குவாழும் புத்திஜீவிகள் தொலைகாட்சிப் பெட்டிகளுடன் சங்கமமாகிவிடுகின்றனர்.

# மன்னா

# கல்வாரித் திருத்தலம்

## பெரிய கோமரசன்குளம், வவுனியா

கல்வாரிக் குன்றிலே காணிக்கையாகி சிலுவை மரத்திலே வாழ்வு சொல்லித்தந்த
இயேசுவின் மதிப்பீடுகளை நம் வாழ்வாக்கிட, இறையருள் பெற அழைக்கின்றோம்!

## தவக்காலத் திருவழிபாடுகள் - 2008

**ஒவ்வொரு வெள்ளியும்**

- காலை 6.30 மணிக்கு திருப்பலி
- நற்கருணை எழுந்தேற்றம்
- திருமணி ஆராதனை

**4ம் கிழமை - 29.02.2008**

- கல்வாரித் திருவிழா காலை 11.00 மணிக்கு மேதகு ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**6ம் கிழமை - 14.03.2008**

- காலை 7.00 மணிக்குத் திருப்பலியும், நற்கருணை எழுந்தேற்றமும்.
- மாலை 3.00 மணிக்கு நற்கருணை ஆசீர்வாதம்
- மாலை 3.30 மணிக்கு மாபெரும் சிலுவைப்பாதை
- மாலை 4.45 மணிக்கு சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**குறிப்பு**

- கல்வாரியில் தங்கிச் செல்வதற்கான வசதிகள் உண்டு
- இறை வார்த்தை ஆண்டை முன்னிட்டு ஒவ்வொரு வெள்ளியும், இறைவார்த்தைத் தியானம் நடைபெறும். இறைவார்த்தைத் தியானம் நடத்துபவர், அருட்தந்தை. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி. அடிகளாரும் அவரது குழுவினரும்.
- பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்.

பங்குத்தந்தை, கல்வாரித்திருத்தலம்
கோமரசன்குளம், வவுனியா

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

08 . 01 . 2008



**சுபிட்சன் டயஸ் (சுபி)**

முள்ளிக்குளத்தைப் பிறப்பிடமாகவும், தலைமன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி. வசின்ரன் காமலின் தம்பதிகளின் அன்பு மகன் சுபிட்சன் டயஸ் (சுபி) தனது முதலாவது பிறந்த நாளை 08.01.2008 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, அப்பையா, அம்மம்மா, அம்மையா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், சித்திமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், தொட்டப்பா, தொட்டம்மா மற்றும் அனைவரும் இவரை குழந்தை இயேசுவின் அருள் பெற்று நீழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தலைமன்னார் தெற்கு, தலைமன்னார்.

## மன்னா தொடர்பான அனைத்துத் தொடர்புகளுக்கும்



பதிப்பாசிரியர், மன்னா
புனித வளன் மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

The Editor, MANNA
St. Joseph's Catechetical Centre,
St. Sebestian's Cathedral Street
Mannar, Sri Lanka.

தொலைபேசி இல. 023 - 2222377/ 060 - 2233276

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 03 . 08 . 1926



உதிர்வு 06 . 02 . 2007

**அருட்பணி. எஸ். சாமிநாதன் சோசை**

சத்திய வேதத்தின் சத்தியங்கள் சாற்றிட
முற்றும் துறந்த சாமிநாதர் சற்குருவே – நீர்
சற்றும் ஓய்வின்றி எளியவர் இன்னல் தீர
உவப்புடனே இறைபணியை நிறைவேற்றினீர்.
ஆண்டுகள் அறுபது ஆண்டவன் அடியானாய்
பணிவுடன் செய்த உம் பணிக்காய்
பரிசாக விண்ணக வாழ்வுதனையே
வழங்கிட இறைவனை இரந்து வேண்டுகின்றோம்!

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 06.02.2008ல் வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் காலை 5.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் (வங்காலை)

# நீங்காத நினைவுகள்

### 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 22 . 09 . 1976



உதிர்வு 15 . 01 . 2005

**செல்வி. றொபின்ரா லெம்பேட்**
(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)

பட்டுச் சிறகடிக்கும் பருவ வயதினிலே
பாசத்தின் அணிகலனாய் பண்பின் உறைவிடமாய்
நேசத்தின் நிறை குடமாய், நிறைந்து நீ நின்ற வேளை
இறையோனின் குரல் கேட்டு
மறையோனின் மாளிகைக்கு,
மணம் வீசச் சென்றனையோ!
அன்னவர் திருப்பதம் அமர்ந்திடவே
ஆராதனை அகமுடன் சாற்றி நின்றோம்.

என்றும் உம் நினைவுகளுடன்
அம்மா, அக்கா, அண்ணா, தம்பி, மருமகள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

### 11ம் ஆண்டு நினைவு

மலர்வு 12 . 05 . 1942



உதிர்வு 11 . 03 . 1997

**திரு. அந்தோனி லெம்பேட்**
(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)

இறைவனின் தோட்டத்தில் இதழ் வீழ்ந்த இன்மலரே
இல்லற வாழ்வினில் இணைந்திட்ட இனிய நற்பொன்மலரே,
மென்மை உள்ளம் கொண்ட மேதகு தந்தையே!
வாழ்விற்கு வளம் சேர்க்க வகை தேடிச் சென்றவேளை
வான் வீட்டிற் சேர்வதற்கு வழி தேடிச் சென்றனையோ?

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

### 19ம் ஆண்டு நினைவு

மலர்வு 25 . 06 . 1971



உதிர்வு 10 . 02 . 1989

**செல்வன். ஜெனிற்றன் லெம்பேட்**
(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)

பாலிய வயதினிலே பயமறியா நிலையினிலே
படையினர் சமரினிலே பரமனின் திருப்பாதம்
பணிந்திடச் சென்ற எங்கள் பாசமிகு அண்ணாவே
பரிந்து நின்றோம் பரமனிடம்
பரகதியில் இறைகுருமுன் வாசமிகு ரோஜாவாய்
பரிமணமாய் திகழ்ந்திடவே வேண்டுகின்றோம்.

என்றும் உம் நினைவுகளுடன்
அம்மா, அக்கா, தம்பிமார், மருமகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது